www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

ஜனவரி, 15-21, 1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAM… …Y முரசு 85

# பேச்சு மேசையில் புலிக்கொடி

## புலிகள் கூறும் காரணம்!

எக்ஸ் ரே- ரிப் போ ர்ட்





போர் மழை
ஓய்ந்து-
நெல்மழை பொழிய
உழைப்பவர் வாழ்வில்

அன்புடன் உங்களுக்கு

உழவர் திருநாள் தமிழர் பெருநாள் வாழ்த்துக்கள் பெருகட்டும் வளம். சிறக்கட்டும் தமிழ்!



லேடீஸ் ஸ்பெசல்

அரசியல் தொடர்

இலக்கிய நயம்



## உள்ளே பொங்கல் ரிலீஸ் படங்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## நம்மவருக்குக் கதவடைப்பு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
தாமதமடைந்த பேச்சுக்கள்
மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இரண்டாம் கட்டப் பேச்சில்
புதிதாக எதையும் பேசவில்லை.
ஏற்கனவே-பேசிய விடயங்களையே
மீண்டும் ஆராய்ந்திருக்கிறார்கள்.

இடையில் ஏற்படும் தாமதங்கள்
பேச்சில் தொடர்ச்சியைப் பேண
சூத்தகமாக அமைந்துவிடுகின்றன.

அடுத்த கட்டப் பேச்சுக்கள்
தடையின்றித் தொடரும் என்று
எதிர்பார்ப்போமாக.

□□

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு
ஈழத் தமிழர்களை-
ஏறெடுத்தும் பார்க்காத மாநாடாகிவிட்டது.

கடல் பிரித்தாலும்-நம்
உறவு என்றும் இனித்திடும் என்று
தமிழ்நாட்டு தமிழர்களும்
ஈழத் தமிழர்களும் நெருக்கமாய்
வாழ்ந்தகாலம்
இறந்தகாலமாகி வருகிறதா?

அரசியல் பிரச்சனைகளுக்காக
அன்புறவுகளைச் சிதைத்துவிடும் செயலை
தமிழக அரசு
சிரமேற்கொண்டு செய்ய முனைந்திருக்கிறது.

இலங்கையிலும்-இந்தியாவிலும்
நன்றாக அறியப்பட்ட, மதிக்கப்பட்ட
அறிஞர்கள் சிலரைக்கூட
தமிழாராய்ச்சி மாநாட்டில் இருந்தும்
தமிழ்நாட்டில் இருந்தும்
அவசரமாக எடுத்தெறிந்து
ஆணவம் காட்டியிருக்கிறது தமிழக அரசு.

அடக்குமுறை மத்தியிலும்
நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டை
யாழ் மண்ணில் நடத்தியவர்கள்-
தேமதுர தமிழோசை கேட்ட நேரத்தில்
செங்குருதி பாயவைக்கப்பட்டு
உயிர்ப்பலி கொடுத்தவர்கள்
ஈழத் தமிழர்கள் என்பதை,
அப்போது அரசியலுக்கு அறிமுகமாகாத
செல்வி ஜெயலலிதா
ஒரு வேளை அறியாமல் இருக்கலாம்.

தமிழையும், தன்மான உணர்வினையும்
ஈழத் தமிழர்கள்
உறுதியாக காத்துக்கொள்ள நினைத்ததும்
இலங்கைத் தீவில்
வெடித்துக் கிளம்பிய
உரிமைப் போருக்கு காரணம்
என்பதை எவர்தான் அறியார்?

எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத
தவறை இழைத்திருக்கிறது
இன்றைய தமிழக அரசு!

நம்மவர்கள் எடுத்தெறியப்பட்டதை
கண்டித்து குரல்கொடுத்த
தமிழக அரசியல் தலைவர்களுக்கும்
கல்விமான்களுக்கும்
நன்றி சொல்வோம்.

அதே நேரத்தில்-
நம்மவர்கள் எடுத்தெறியப்பட்டபோது
கண்டித்து எதிர்ப்புக் காட்டாமல்
மாநாட்டில் கலந்துகொண்டு
கைகளை கட்டிக்கொண்டிருந்த
நம் நாட்டு அரசியல்வாதிகளையும்
எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது.

முன்னாள் அமைச்சர் தேவராஜ்
செய்துவிட்டுப்போன காரியம்
அவர் தம் மதிப்பை சேதப்படுத்திவிட்டது.
தான் செல்ல அனுமதி கிடைத்தவுடன்
இலங்கை தமிழாராய்ச்சி மாநாட்டு கிளையில்
தவறு என்று சொல்லிவிட்டு
தனக்கு வேண்டப்பட்ட சிலரோடு
அவர் விமானமேறி சென்றுவிட்டார்.

அவ்வாறு சென்றவர்,
இங்கு தவறு நடந்துவிட்டது
என்று தினசரிகளுக்கு சொல்லி சென்றவர்,
அங்கு நிற்கும்போது
நம்மவர்கள் எடுத்தெறியப்பட்டார்களே
அதனை தவறு என்று
கண்டிக்காமல் இருந்தது ஏன்?

அதனையும் செய்திருந்தால்
திரு தேவராஜ் நம் மதிப்பில்
மேலும் உயர்ந்திருப்பார்.

முக்கியமான பிரச்சனைகளில்
அவசரப்பட்டு அறிக்கை விடுவதை
அரசியல்வாதிகள்
நிறுத்திக்கொள்வது நல்லது.

நம்மவரின் உரிமைகளுக்காக போராடுவதை
அரசியல்வாதிகள் செய்ய முடியாமல்
சில சொந்த நலன்கள்
அவர்கள் கைகளைக் கட்டிப் போடலாம்.
ஆனால்-போராடும் ஏனையோரின்
வாயைச் சாத்தவும், முனைப்பைத் தடுக்கவும்
அவர்கள் முயலக்கூடாது.

தமிழாராய்ச்சி மாநாட்டில்
நடந்த புறக்கணிப்பு
ஈழத் தமிழர்கள் அனைவருக்குமே
ஏற்பட்ட அவமானம்.

ஒரு சிலரை கலந்துகொள்ள
அனுமதித்தார்கள்-அவர்களும்
'தன்மானச் சிங்கங்களாக' (?!) முழங்கிவிட்டு
திரும்பி வந்திருக்கிறார்கள். வெட்கக்கேடு!
அவர்கள் மாநாட்டில் பேசியதால்
நேர்ந்துவிட்ட அவமானம் போய்விடாது!
தம்மவர்கள் சிலருக்கு எப்போது புத்திவரும்?

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கிறிஸ்துவின் முத்தம்!

"அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக" (உன் 1:2)

கர்த்தருடைய தொடுதலுக்காக வாஞ்சிக்கும் தேவனுடைய பிள்ளையே, அவருடைய அன்பிற்கும், அங்கீகாரத்திற்கும், பாசத்திற்கும் ஏங்கி ஜெபிக்கும் ஜெபமே "என்னை முத்தமிடும், ஆண்டவரே" என்பதாகும்! கர்த்தருடைய முத்தம் என்பது கர்த்தருடைய தொடுதலைக் குறிக்கிறது.

ஏசாயாவிற்கு அன்று அந்த முத்தம் கிடைத்தது. பலிபீடத்தின் அக்கினி தழலால் அவனுடைய வாயைத் தொட்டார். அவர் பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டார்; மாபெரும் தீர்க்கதரிசியாய் மாறினார்.

கிறிஸ்துவின் சீஷர்கள் அந்த ஆழமான அனுபவங்களை வாஞ்சித்தார்கள். இயேசு அவர்கள்மேல் ஊதி, பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். (யோவான் 20:22) சீஷர்கள் அந்த வாஞ்சையோடு மேல் வீட்டறையில் காத்திருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் ஒவ்வொருவரையும் நிரப்பினார்; அபிஷேகித்தார்.

-முத்துக்குமார் தில்லைராஜா-பசறை-

## ஆன்மீகம்



## தூய எண்ணம்

இஸ்லாம் என்பது தூய்மையின் மார்க்கமாகும். தூய மார்க்கத்தில் நிலைபெற நம் எண்ணங்களும் செயல்களும் தூய்மை பெற்றிருத்தல் அவசியமாகும். தூய எண்ணமில்லா வணக்கங்கள் நற்கிரியையாகாது. "செயல்கள் யாவும் எண்ணத்தைக் கொண்டே கணிக்கப்படும்" என்ற புஹாரி ஷரிபின் முதல் ஹதீஸின்படி செயல்கள் யாவற்றுக்கும் உயிர்நாடி நல்லெண்ணங்கள் என்பது தெளிவாகும்.

"அல்லாஹ் உங்கள் உருவத்தையும் செயல்களையும் பார்ப்பதில்லை. உங்கள் இதயத்தையும் எண்ணங்களையுமே பார்க்கிறான்." என்று நபி(ஸல்) அவர்கள் மொழிந்ததன் கருத்தாவது நற்செயல்களுக்கு எண்ணங்களே காரணம் என்பதாகும். அதுபோன்றே நல்லெண்ணமுடையோனின் நற்கிரியையும் முழுமை பெற்று விளங்கும். மனம்தான் உடலை இயக்குகிறது. மனம் சீர்மையடைந்தால் உடல் சீர்மைபெறும் அவ்வாறே செயல்களும் சீரியனவாக அமையும்.

"அந்தோ உடலில் ஒரு தசைத்துண்டு இருக்கிறது. அது சீரடைந்தால் உடல் முழுதும் சீரடைந்துவிடும். அது சீரழிந்துவிட்டால் உடல் முழுதும் சீரழிந்துவிடும். அதுதான் இதயம்" என்று மனத்தூய்மை பற்றி நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

எனவே ஒரு மனிதனின் நற்குணத்தின் வளர்ச்சி நற்கிரியைகள் அனைத்திற்கும் ஒருவனது நல்லெண்ணமே பிரதானமென்பது புலப்படும் வெளிப்படை உண்மையாகும். தவிர துர்க்குணங்களை உருவாக்க ஒருவனது தூய எண்ணத்திற்கு முரணான எண்ணங்களே காரணமாகும். நன்மையான விடயங்களில் ஈடுபடும்போது தூய எண்ணத்துடன் அல்லாஹ்வுக்காக என்ற ஒரே நோக்குடன் செயல்பட வேண்டும்.

நாமும் தூய எண்ணம்கொண்ட நல்லடியார்களாவோமாக!

ஜொஹரா ஹுஸைன்-தியத்தலாவ.

## கவிதைப்போட்டி இல-82

### வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

#### பரிசுக்குரிய கவிதை

**தெருவில் தேசம்**

தேசமே.......!
தெருவுக்கு வந்ததால்
விடிவுக்கு இன்னும்
விமோசனம் இல்லை.

சானா சண்முகராஜன்
நாவலப்பிட்டி.

#### வியக்கப்பட்டவை

**'விந்தை'**

அகப்பையில்
வாராதது
குப்பையில்
வருகின்ற
விந்தை!

றோஸ்
பண்டாரவளை.

**பசிக்கொடுமை**

தேடித்தேடியே வாழ்க்கை
தெம்பில்லாமல் போச்சு
பாடிப்பாடியே நாவும்
வரண்டு போகவாச்சு
எண்சாண் வயிற்றின் பசி
இமயம் போல ஆச்சு

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

**எச்சரிக்கை!**

'எச்சில்'தானே-என்று நீயும்
ஏளனமாய் எண்ணிடாதே!
'எச்சரிக்கை' தேவை நண்பா!
எதற்குள்ளும்.....'பாம்' இருக்கும்

நிஹாரா சுக்ரி
புத்தளம்.

**அவல வாழ்வு**

தேசமே
குப்பையாகியதால்
மாசடைந்தது
சூழல் அல்ல
மனித வாழ்வு

இ.யோகநாதன்
வவுனியா.

**கழிவுக்கல்!**

கழிபட்ட கல்லும் சிலவேளை
கட்டிடத்திற் குதவுதல் போல்
குவிபட்ட குப்பையுள்ளும் சிலவேளை
என் குடல் நிமிர வழியிருக்கும்!

செல்வி.சுவர்ணா விநாயகமூர்த்தி
ஆரையம்பதி-1.

**தேடல்**

தேசமிழந்த நெஞ்சொன்று
தெருவோரங்களில்-தேடுவது
தேகத்தின் தென்புக்கு
ஒருபிடி -உணவு.

ஆர்.சாந்தசீலன்
பொத்துவில்.

**பயமென்ன**

வெட்கமென்ன-துக்கமென்ன
வேகுகின்ற வயிற்றுக்கு
நட்ட நடு வீதியென்ன
நாதியற்ற சீவனுக்கு
பட்டப் பகல் என்ன
பாவியிவன் தொழிலுக்கு!

-இறால்குழி சிவகுருநாதன்-



**ஆய்வு**

வானில் ஓர் ஆராய்ச்சி
அது வான் இயல்
புவியில் ஓர் ஆராய்ச்சி
அது புவி இயல்
தொட்டியுள் ஓர் ஆராய்ச்சி
இது பசி இயல்!

வி.பரணீதரன்
ஆரையம்பதி-1.

**எங்கள் தேடல்**

கல்வியைத் தேடவில்லை
செல்வத்தைத் தேடவில்லை
பொன்னைத் தேடவில்லை
புதையலைத் தேடவில்லை
நாங்கள் தேடுவதெல்லாம்
நீங்கள் விட்டெறிந்த
சோற்றுப் பருக்கைகளை.

செல்வி.மதுரா யோகேந்திரன்
திருக்கோவில்.

**அமுத சுரபி**

சனசக்தி இல்லை.
சமுர்த்தி இல்லை.
சரியாய் வயிறு நிறைய
சாப்பாடு இல்லை.
என்றாலும் உண்டே
எமக்கு அமுத சுரபி.

எம்.என்.எம். நவ்ஜி
அக்குறணை-03.

**தேடல்**

வறுமைக் கோட்டுக்குள்
ஈழமாதா,
அவள் வாரிசுகளில் ஒன்று
சாண் வயிற்றுக்கிங்கே
தெருவோரத் தேடலில்...

வை.சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு-1.

**பகல் உணவு**

பாதையில் போகும்
பாவையே!
பகலுணவு தேடும்
காளையைப்
பார்!

ஜீ.கே. யோகசந்திரன்
அக்கரைப்பற்று-7.

**வித்தியாசம்**

உணவைத் தேடவில்லை!
உடையைத் தேடவில்லை!
மனிதர்கள் தொலைத்துவிட்ட
மானிடத்தைத் தேடுகின்றேன்.

எச். ஆர். முஹம்மத்
அக்குறணை.

**சாக்கடைகள்**

எங்கள்
வாழ்க்கை வாகனம்
தினம்
சாக்கடை சகதியில்
தடம் புரழ்கிறது.

காக்கிமீன் அலி
கந்தளாய்.

## கவிதைப் போட்டி இல-85




சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.01.1995.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 85
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

செந்தமிழ் சுவையுடன் சுடச்சுட அரசியல் செய்திகளையும் அறிவுக்கு விருந்தாக பல போட்டி நிகழ்ச்சிகளையும் கவிப்பிரியர்களுக்கு தேன் கிண்ணத்தையும் தந்து வாசக நெஞ்சங்களை அசத்தும் அருமை முரசே உன் புகழுக்கு நிகர் நீ மட்டுமே.

இரத்தினசபாபதி வசந்தி-பொரலங்கட.

□□

அரசியலை அலசி ஆராய்ந்து சினிமாவில் சிறகடித்து சிறுவர் பகுதியில் சிரந்தாழ்ந்து சீராடும் தினமுரசே, தித்திக்கும் உன் தேன்சுவை திகட்டாத முக்கனிச்சுவை நீ வரும் நாளை ஆவலோடு எதிர் பார்த்து காத்திருக்கும் என்போன்ற வாசகர்களுக்கு நீ என்றும் திகட்டாத தேன் விருந்து.

ஆர்.சுலோச்சனா சேகர்-கலேவெவ.

□□

இதய சங்கமங்களின் இனிய முரசே!

அண்மையில் தொடர்ந்து கொண்டிருக்கும் 'தாய்' தொடர்கதை நெஞ்சை விட்டகலா நித்திய நாவல். வாழ்க உன் நலன்புரி சேவை. வளர்க!

மர்ஜுனா ஜெமால்தீன்-தெல்தோட்டை.

□□

புதியதோர் தொடர் தந்த முரசிற்கு அன்பு வாழ்த்துக்கள்.

தொடர்ந்து அடுத்த அங்கத்தை எதிர் பார்த்து விடைபெறுவது-

மொஹமட் பாரிஸ்-நுவர எலியா.

□□

இனிய முரசே,

நீ சுமந்து வரும் எல்லா அம்சங்களும் இனியவையே சினிவிசிட், மகாபாரதம், அதிரடி அய்யாத்துரை அதிரடித் தகவல்கள் என்னை மிக கவர்ந்தவை. நீ என்றும் வாழ என் அன்பார்ந்த வாழ்த்துக்கள்.

பாத்திமா பர்சானா-மன்ராசி கொலனி.

□□

**இயற்கை**

இனிய படைப்புகளின் இன்பமான நினைவுகள் இலகுவில் அழிந்தாலும், இனியவளே என் அன்பின் முரசே, இறுதி வரை உன் சேவை என் இதயமதில் கேட்டுக்கொண்டு இருக்கும்.

பி.எஸ்.ராம்குமார்-நானுஓயா.

□□

தினமுரசே நீ தரும் தித்திக்கும் ஆக்கங்கள் அத்தனையும் தேன் சொட்டு! வாசகரெமக்கு இள மொட்டு!! உள்ளத்தில் உவகையூற எண்ணத்தில் தெளிவு சிறக்க-உன் எழில் நயத்தில் நாம் எழுந்துதான் போகின்றோம். முரசே உன் முரசம்-எம் மனங்களில் நிலைத்து பாரினில் நீ பவனிவர பாவையிவள் வாழ்த்துக்கள் பலகோடி! பலகோடி!!

பாதிமா முஹம்மத்
புதிய காத்தான்குடி-03.

□□

என் இதயம் கவர்ந்த இனிய முரசே, நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுவைக்க சுவைக்க இன்பம் தரும் தேன் துளிகள்.

அரசியல் கட்டுரைகள், மருத்துவ விந்தைகள், புத்தம்புது உலக அதிசய செய்திகள் என அனைத்தும்வெகுஜோர்.

என்றாலும் தொடர்ந்து ஓரிரு வாரங்களாக 'ஸ்போட்ஸ்' செய்திகள் வராதது பெரும் குறையே! உன் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

நிஸார் எம்.றசீத்-முந்தல்.


□□

அன்பின் தேவதை முரசே!
என் மனங் கவர் இனியவளே,
என்றும் இனிய அன்பு முரசே,
நான் கூடு விட்டு கூடு சென்றாலும், உன்மேல்கொண்ட பாசம்மாறாது.

இதனால், நீ அள்ளி வீசும் அனைத்து ஆக்கங்களும் படுஜோர்.

எஸ்.பானுமதி-கினியம.

□□



அன்பின் முரசே,

தித்திக்கும் தினமுரசின் புகழ் திசை எங்கும் பரவட்டும். இதழ் சிந்தும் தினமுரசே, இன்றுபோல் என்றும் வாழ்க வளமுடன் வாழ்க.

சீதா வீரையா-பூண்டுலோயா.

□□

அன்பின் தினமுரசிற்கு,

உன் ஆக்கங்கள் அனைத்து அளப்பரியவை; பக்கசார்பின்றி உள்ளதை உள்ளபடி எழுதுவதில் முரசுக்கு நிகர் முரசுதான். முக்கியமாக நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட் அதிரடி அய்யாத்துரை போன்ற விடயங்களில் ஒரு சிலருக்கு மன வெறுப்பு. பல உண்மை சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வருவதை இட்டு நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

ஜி.ஜெகதீஸ்வரன்-களுவாஞ்சிக்குடி.

□□

வாரம் ஒருமுறை திறந்து வரும் முரசே, நீ கொண்டுவரும் அம்சங்கள் அனைத்தும் என் இதயத்தைக் கவர்ந்தன. தகவல் பெட்டி, பாப்பா முரசு, சினி விசிட், தொடர்கதை, மகாபாரதம் ஆகிய அனைத்தும் அருமையானவை.

ஆர்.புலேந்திரன்-ஒப்டன்.

□□

என் இதயத்தில் குடிகொண்டுள்ள முரசே,

நீ வாரா வாரம் சுமந்து கவிதை, குறுக்கெழுத்துப்போட்டி, இலக்கிய நயம், எக்ஸ்ரே ரிப்போர்ட், பாப்பா முரசு- ஏன் உலகிலேயே சிறந்த நாவலாகிய தாயின் தொடர் இன்னும் பல பல... அத்தனையும் அமுது.

சு.ரமேஷ்-பசறை.

□□

என் இனிய முரசே!

உன் படைப்புக்கள் அனைத்தும் அற்புதம்.... அற்புதம். வாரந்தோறும் உனது வரவை எதிர்பார்த்து தவிக்கும் நெஞ்சங்களுக்கு நீ அள்ளி வரும் அம்சங்கள் அனைத்தும் பிரமாதம்.

க.சுபத்ரா-கல்முனை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எங்கிருந்து தொடங்குவது என்பதைக் கூறிவிட்டார் ஜனாதிபதி

## ஏற்றுக்கொள்வார்களா? இல்லையா? புலிகள் மௌனம்!

## உடனடிப் பிரச்சனை பற்றிப் பேசுவதிலேயே புலிகள் ஆர்வம்

### பண்டா–செல்வா ஒப்பந்தம்

மூன்றாவது சுற்றுப் பேச்சிலும் உடனடிப் பிரச்சனைகள் பற்றியே பேசப் பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப் படையில் அரசியல் தீர்வு முயற்சிகளை ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சனைக்கு தனது அரசின் தீர்வுத் திட்டம் எந்த அடிப்படையில் இருந்து ஆரம்பமாகப் போகிறது என்பதை முதல் தடவையாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால், ஜனாதிபதியின் கருத்து தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இதுவரை எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தம் அரசியல் தீர்விற்கான அடிப்படையாக அமைய முடியுமா என்பது பற்றி தமது கருத்தைக் கூறாமல் புலிகள் மௌனம் சாதித்து வருகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு.சிவசிதம்பரம், பண்டா-செல்வர ஒப்பந்தம் காலம் கடந்துவிட்டது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.,

புளொட் அமைப்பு மட்டுமே பண்டா-செல்வா ஒப்பந்தம் ஆரம்பமாக அமையும் என்று கருத்து தெரிவித்துள்ளது. ஏனைய தமிழ் அமைப்புக்கள் பண்டா-செல்வா ஒப்பந்தம் தற்போதைய கால கட்டத்திற்கு ஏற்றதாக அமையாது என்றே தெரிவித் துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஷ்ரப் எவ்வித கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை. ஆயினும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சிலர் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை வரவேற்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும், அரசை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

### பிரபாவின் நிலைப்பாடு

கடந்த நவம்பர் மாதம் மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகளது தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையில், **"தற்போது எம்மால் உருவாக்கப்பட்டுள்ள தன்னாட்சிக் கட்டமைப் புக்களது அடிப்படையிலும், போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தைக் கருத்தில் கொண்டும் சுயாட்சித் திட்டங்கள் முன் வைக்கப்பட்டால் பரிசீலிக்கத் தயார்"** என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் 1957 ஜுலையில் செய்துகொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாக கொள்ளும் தீர்வு முயற்சிகளை புலிகள் பரிசீலிக்க முன்வருவார்களா என்ற கேள்வி எழுந் துள்ளது.

சிங்களம் உத்தியோகமொழி என்ற சட்டத்தையே மீற முடியாத நிலையில்தான் பண்டா- செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழை தேசிய மொழியாக ஏற்பது என்றுதான் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் கூறப்பட்டது.

ஆனால்-தற்போது தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைவிட மேலானதாக அமைந்திருந்தது என்று சுட்டிக்காட்டும் அரசியல் ஆய்வாளர்கள், அந்த ஒப்பந்தம்கூட தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசை களை பூரணமாக பிரதிபலிக்கவில்லை என்ற குறை எழுந்ததையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

### வடக்கு–கிழக்கு இணைப்பு

மாகாண சபை முறையை அறிமுகம் செய்தது இந்திய-இலங்கை ஒப்பந்தம்.

அதற்கு முற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் பிரதேச சபைகளை அடிப்படை யாகக் கொண்டுள்ளது.

இது தவிர புலிகள் உட்பட சகல தமிழ் கட்சிகளும் வடக்கு-கிழக்கு ஒரே நிர்வாக அரசியல் அலகு என்பதை வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், பண்டா- செல்வா ஒப்பந்தத் தில் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

**"வட மாகாணம் ஒரு பிராந்தியப் பிரிவாக அமைக்கப்படும்; அதே வேளையில் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேலான பிராந்திய பிரிவுகளாகப் பிரிக்கப் படலாம்."**

பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் இந்த ஷரத்து, வடக்கு-கிழக்கு ஒன்றுபட்ட தமிழர் தாயகம் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி மறுத்துரைக்கிறது என்று தமிழ் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

காணி அபிவிருத்தி, குடியேற்றம், மற்றும் கல்வி, விவசாயம், மின்சக்தி போன்ற துறைகளோடு சம்பந்தப்பட்ட பிரத்தியேக அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கு வழங் கப்படும் என்று பண்டா- செல்வா ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டுள்ளது.

### புலிகள் என்ன செய்வார்கள்?

தன்னாட்சி கட்டமைப்புக்களை புலிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழ் கட்சிகளும், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிலர் உட்பட சமஷ்டித் தீர்வு பற்றி பேசுகிறார்கள்.

இந்த நிலையில் பிரதேச சபைகளை அடிப்படையாக கொண்ட தீர்வுத்திட்டத்தை முன்வைத்து பேச முற்படுவது பயன்தராது என்றே அரசியல் அவதானிகள் கூறு கிறார்கள்.

மௌனமாக இருந்துவிட்டு தீர்க்கமான ஒரு நேரத்தில் புலிகள் தமது கருத்தை தெரிவிப்பார்கள்.

அதுவரை அரசின் கருத்துக்களையும், இனப்பிரச்சனை தொடர்பான தீர்வுக்கு எந்தளவுக்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் வெளியுலகம் அறியட்டும் என்று காத்திருப்பார்கள்.

அரசின் தீர்வு திட்டம் தமது மேசையில் போடப்படும்போதே அது தொடர்பான தமது கருத்தை சொல்லவேண்டும். அதுவரை வெளியே ஏற்படும் அபிப்பிராயங்களை கவனித்துக்கொண்டு இருக்கவேண்டும் என்றே புலிகள் நினைக்கிறார்கள்.

தமது மேசையில் தற்போதைக்கு தீர்வுத் திட்டத்தை அரசு கொண்டுபோய் போடு வதற்கு புலிகள் இடம்தர மாட்டார்கள். முதலில் உடனடிப் பிரச்சனை பற்றிப் பேசுவதையே வலியுறுத்திக்கொண்டிருப் பார்கள்.

### உடனடிப் பிரச்சனை

பாதைத் திறப்பு விடயத்திலும், புலிகள் முன்வைக்கும் உடனடிப் பிரச்சனைகள் தொடர்பான கோரிக்கைகள் விடயத்திலும் இணக்கம் காணப்படுவதற்கே பெரும் சிரமங்கள் உள்ளன.

எனவே-உடனடிப் பிரச்சனை பற்றிய பேச்சுக்களின் இணக்கத்தை பொறுத்தே அரசாங்கம் முன்வைக்கும் தீர்வு திட்டத்தை பரிசீலிக்க புலிகள் முன்வருவார்கள் என்று தெரிகிறது.

அதுவரை அரசு கூறும் அரசியல் தீர்வு பற்றிய கருத்துக்கள் தொடர்பாக புலிகள் எதுவும் தெரிவிக்கமாட்டார்கள். வெளி அபிப்பிராயத்தை கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்றே நம்பப் படுகிறது.

---

## திவ்யாதேவி கொழும்பில் தலைமறைவு?

## "இலங்கைத் தொழிலதிபர் தொடர்பு"

தமிழ் நாட்டில் கற்பழிப்பு, கொலை, காதல் லீலைகள் பற்றிய குற்றச்சாட் டுக்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு கம்பி எண்ணிக்கொண்டிருப்பவர் பிரே மானந்தா.

இந்தப் போலிச்சாமியாரோடு இலங்கை யிலுள்ள தமிழ் தொழிலதிபர் ஒருவர் தொடர்பு வைத்திருந்ததாக தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் 'ஜுனியர் விகடன்' சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த சஞ்சிகை வெளியிட்டுள்ள பரபரப்பான தகவல் வருமாறு:

"ஜெகான் என்ற அந்த மனிதர் கொழும்பு நகரில் மூன்று கப்பல்களுக்கு அதிபராக இருப்பவர். சர்வதேச கப்பல் போக்குவரத்து நடத்துபவர். அவர் இதுவரை பிரேமானந்த ஆசிரமத்துக்கு அளித்த சொத்துக்கள் ஏராளம்.

ஜெகான் இப்படி ஆசிரமத்தில் விழுந்து கிடக்க காரணம் திவ்யாதேவி. திவ்யா தேவியின் பரம ரசிகர் அவர்.

திவ்யா சர்வதேச பயணம் புறப்பட்டால் நிச்சயம் அது ஜெகானோடுதான் இருக்கும். அவ்வளவு ஏன்...திவ்யா நேராக கொழும்பு செல்வதாக இருந்தால்கூட ஜெகான் வந்து அவருடன் சேர்ந்துதான் கொழும்பு செல்வார் திவ்யா. அப்படி ஒரு உறவு."

இவ்வாறு தெரிவித்துள்ள ஜுனியர் விகடன் இலண்டனில் இருந்த திவ்யாதேவி ஜெகானுடன் சேர்ந்து கொழும்பு சென்றுவிட்ட தாக ஆசிரமத்துடன் தொடர்புடைய சிலர் கூறுவதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது.

---

## மோதல் ஓய்ந்தாலும் பிரசாரம் ஓயாது!

## 'விடுதலைக் கீதங்கள்' வெளியீட்டு விழா!

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தால் புலிகளது துப்பாக்கிக் குழாய்களும் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் தொண்டைக் குழாய்கள் தமிழீழ விடுதலை பிரசாரத்தில் ஈடுபட்டே வருகின்றன.

11.01.95 அன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் 'செவ்வரத்தம்பூ' குறும்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது. உணர்ச்சிக் கவிஞர் என்று அழைக்கப்படும் காசி ஆனந்தன் எழுதி, தேனிசை செல்லப்பா குழுவினரால் பாடப்பட்ட 'விடுதலைக் கீதங்கள்' ஒலிப்பேழை நாடாவும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த பிரசார வெளியீடுகளை கடற் புலிகள் மற்றும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டு கழகம் ஆகியவை இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தியுள்ளன.

விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுவரும் குறும் படங்களை மட்டுமே யாழ் குடாநாட்டு மக்கள் வீடி யோக்கள் மூலம் கண்டுகளிக்க அனுமதிய ளிக்கப்படுகிறது. தென்னிந்திய தமிழ் சினிமா படங்களுக்கு புலிகள் தடை விதித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தயாரித்து வெளி யிடும் குறும் படங்கள் தொழில் நுட்ப ரீதியிலும், சமகாலத்தை பிரதிபலிப்பதிலும் சிறப்பானவையாக காணப்படுகின்றன.

புலிகளது சாதனைகள், மறைந்த போராளிகளது தியாகங்கள், தமிழீழ விடுதலையின் அவசியம் என்பவற்றை மைய மாக வைத்தே குறும்படங்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன.

---

## அடுத்த சுற்றிலும் அன்றாடப் பிரச்சனையே ஆராயப்படும்!

## "தமிழர்களின் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியுள்ளோம்"

### புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

கடந்த 07.01.95 அன்று புலிகள் அமைப்பினரால் யாழ்ப்பாணத்தில் பத்திரி கையாளர் மாநாடு நடத்தப்பட்டது.

போர் தவிர்ப்பு ஒப்பந்தம் குறித்து விளக்கமளிப்பதற்காக கூட்டப்பட்ட அந்த பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளது அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.தமிழ் செல்வன், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போர் தவிர்ப்பு காலகட்டத்தில் கடைப் பிடிக்கவேண்டிய நடைமுறைகள் குறித்து பிரபாகரன் தனது தளபதிகளுக்கு விளக்கி யிருக்கிறார் என்று தமிழ்செல்வன் தெரிவித்தார்.

கடந்த காலத்திலும் போர் நிறுத்தங்கள் இடம்பெற்றன. அவை எதுவும் சர்வதேச கண்காணிப்பின் கீழ் நடைபெறவில்லை. இராணுவத்தினர் போர் நிறுத்தங்களை மீறினார்கள். இந்த தடவை சர்வதேச கண் காணிப்பாளர்களின் கீழ் இப்போர் நிறுத்தம் அமுதல் செய்யப்படுகிறது என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேற்குலக நாடுகளின் கண்காணிப்பு ஏற்பட்டுள்ளதால் தமிழர்களது விடுதலைப் போராட்டம் சர்வதேச மயப்படுத்தப்பட் டுள்ளது என்றும் திரு.அன்ரன் பாலசிங்கம் விபரித்தார்.

போர் தவிர்ப்பு அறிவிப்பு வெளியான காலத்திலிருந்து சிறிலங்கா கடற்படை முகாம்களுக்கு அருகிலுள்ள கடற் பிரதே சங்கள், ஏனைய கடற் பிரதேசங்களில் மீன் பிடிக்கலாம் என்று தமிழ் செல்வன் அங்கு தெரிவித்தார்.

---

## மோதல் தவிர்ப்பால் மீனவர்கள் மகிழ்ச்சி!

## மீன் வாங்கிய கடற்படை!

மீனவர்களுக்கு எதிராக யாழ் குடா நாட்டு கடற் பரப்பில் தாக்குதலில் ஈடுபடு வதாக புலிகளால் குற்றம்சாட்டப்பட்டு வந்த கடற்படையினர் குருநகர் கடலில் மீனவர்க ளிடம் சென்று பேசினார்கள்.

முதலில் அச்சமடைந்தாலும் கடற்படை யினர் சகஜமாக பேசியதால் நிம்மதியடைந்த மீனவர்கள் கடற்படையினரோடு சகஜமாகப் பேசினார்கள்.

அவர்களிடம் மீன் பெற்றுக்கொண்டு திரும்பினார்கள் கடற்படையினர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை அடுத்து யாழ் குடாநாட்டு கடலோரப் பகுதிகளில் மீன்பிடி அதிகரித்துள்ளது. உயிராபத்து நேராது என்ற நம்பிக்கையில் மீனவர்கள் தொழிலுக்கு செல்லுகிறார்கள்.

கடல் வலயத் தடையாலும் கடலில் நடைபெற்ற மோதல்களாலும் வடபகுதி மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மீனவர் களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களது கஷ்ட நிலைக்கும் ஓரளவு நிவாரணம் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

இதே வேளை மீன்பிடி அதிகரிப்பு காரணமாக கடலுணவுப் பொருட்களின் விலை யாழ் குடாநாட்டில் வீழ்ச்சியடைந் துள்ளது.

---

## புதியவர்கள் நடமாட்டம்

## புலிகள் கடும் கண்காணிப்பு

யாழ் குடாநாட்டில் தமது கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் புதியவர்கள் யாராவது நடமாடுகிறார்களா என்பதைக் கண்டறிய புலிகள் கடும் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக ஒவ்வொரு பிரதேசமும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியான கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

வெளியாரின் நடமாட்டம் பற்றி தகவல் தருமாறும், புதியவர்கள் யாராவது வீடுகளில் வந்து தங்குவதாயின் அவர்களது விபரங்கள் தெரிவிக்கப்படவேண்டும் என்றும் புலிகள் அமைப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

---

## தடை விதிக்கப்பட்ட பகுதிகளில் கண்ணி வெடிகள்!

## மக்கள் நடமாடவேண்டாம் என்கிறார்கள் புலிகள்!

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் உள்ள 2வது விதியின்படி இரு தரப்புக்கும் இடையில் 600 மீற்றர் பகுதிகளில் மக்கள் நடமாட வேண்டாம். அங்கு கண்ணி வெடிகள், பொறி வெடிகள், மிதி வெடிகள் இன்னமும் அப்புறப்படுத்தப்படவில்லை என்று புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத் தில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"விடுதலைப் புலிகளாகிய நாம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்த நடைமுறை விதிகளை கடைப்பிடிப்பதில் மிகக் கவனமாக செயற்பட்டு வருகிறோம்.

"இந்நிலையில் இத் தடை விதிக்கப்பட்ட 600 மீற்றர் பிரதேசத்தில் உள்ள வீடுகளைப் பார்க்கவும், மீன் பிடிக்கவும், வேறு தேவைகளுக்காகவும் எமது மக்கள் சிலர் பிரவேசித்ததாகவும், தொழில் செய்ய முயன்றதாகவும் சிறிலங்கா படையினர் -சுட்டிக்காட்டியுள்ளனர். இவை மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் தெரிவித்துள்ளனர்.

எனவே-எமது மக்கள் இன்று ஏற்பட்டுள்ள போர் இடை நிறுத்தத்தை நேர்மையுடனும், நியாயத்துடனும் கடைப் பிடித்து தொடர்ந்து பேணுவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

கண்ணிவெடிகள், பொறி வெடிகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்படும் காயமுறுதல் உயிரிழப்புக்கள் போன்றவற்றை தவிர்க்கும் முகமாக இத்தடை செய்யப்பட்ட பிரதேசத்துக்குள் எக்காரணம் கொண்டும் நடமாட வேண்டாம் என்று கேட்டுக்கொள்வதுடன், எமது உறுப்பினர் களின் அறிவுறுத்தல், ஆலோசனையின்படி செயற்பட்டு வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்." இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் இரு தரப்பினரும் தம்மால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை இதுவரை அகற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## தமிழாராய்ச்சி மாநாட்டு தடை!

## மத்திய அரசுமீது குற்றச்சாட்டு!

"உலகத் தமிழ் மாநாட்டுக்கு சென்ற இலங்கைத் தமிழ் அறிஞர்களை உள்ளே விடாமல் தடுத்தது இந்திய மத்திய அரசு" என்று தமிழக நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் குற்றம் சாட்டியிருக்கிறார்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு சென்னையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய நெடுஞ்செழியன் அவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் அங்கு பேசும்போது,

"உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை அறிஞர் சிவத்தம்பிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அவர் உட்பட அனைத்து அறிஞர்களும் தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டிருந்தது.

"ஆனால் சிவத்தம்பி போன்றோரின் நடவடிக்கைகள் சரியில்லை என்று கூறி மத்திய புலனாய்வுத் துறையினர் (சி.பி.ஐ) அவர்களை உள்ளே விடக்கூடாது என்று தடுத்துவிட்டனர். இதற்கு நாங்கள் பொறுப்பு கிடையாது."

இவ்வாறு தமிழக அமைச்சர் நெடுஞ் செழியன் தெரிவித்தார்.

தமிழக அரசு அதில் தலையிட்டு சி.பி.ஐ. முடிவை மறுபரிசீலனை செய்ய முன்வராதது ஏன் என்பது குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

---

## மண்டை தீவுக் கடலில் புலிகளின் படகுகள்

யாழ் குடாநாட்டில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மண்டை தீவுக் கடலில் புலிகளது படகுகள் தடை செய்யப்பட்ட பகுதிகளை தாண்டி உட்பிரவே சித்ததாக கூறப்படுகிறது.

படையினர் எதிர் நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லை. நடமாட்டங்களை கண்காணித் துக்கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதே வேளை படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள புங்குடுதீவிற்கு படகொன் றில் வந்து நான்குபேர் இறங்கினார்கள். குருநகரில் இருந்து மீன்பிடிப்பதற்காக வந்ததாக அவர்கள் தெரிவித்தனர் என்று அறியப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொச்சிக்காப் போடியார் எழுதுவது

## மட்டக்களப்பு புதினம்

அய்யாத்துரை அண்ணேக்கு,

கன நாளா கடதாசி எழுதாம போயித்தன். எழுத வேணுமெண்டு நினைச்சாலும்-எங்க 'நாய்க்கு வேலையும் இல்ல-இருக்க நேரமுமில்ல' எண்ட மாதிரி, எனக்கும் குந்தவும் நேரமில்ல, எழும்பவும் நேரமில்ல.

எண்டாலும் அண்ண- நம்மட ஆக்கள் எல்லாருக்கும் புது வருஷ வாழ்த்துக்கள் சொல்லுறன்.

வருஷமும் புறந்துத்து, நம்மட பிரச்சினையளும், அந்தா இந்தா எண்டு தீருமெண்டு-சாமியத்தான் சனங்கள் கும்பிடுது. என்னவோ இந்த முறை-வெடியும் வாணமும் நல்லா கடையில விலப்போனதாம். புள்ளையளும் வாணத்தையும் வாங்கு வாங்கெண்டு வாங்கி கொழுத்திப் போட்டானுகள். வெகு காலமாக காணாமக் கிடையாமக் கிடந்ததுகள் எலுவா.?

அண்ண, நீங்களும் எழுதுவியள் எண்டு எண்ணி இருந்தநான். என்னோட கோபிச்சித்தியள்போல... ரெண்டொரு கிழமையா எழுத இல்ல எண்டு; அது என்னில புள இல்ல. அப்பிடி நன்றி கெட்டவன் இல்ல நான். நான் என்ன செய்ய? கடதாசி எழுதி எம்பலப்புக்குள்ள போட்டு ஒட்டினா-நம்மட தபால்கந்தோரில, இல்லையெண்டா கொழும்பு பஸ்சுக்குள்ள வைச்சிருக்கிற பொட்டிக்குள்ள போடுவன். என்ன மாயம் எண்டு தெரியல்ல. கடதாசி கிடைக்கல்ல எண்டிற சங்கதி. மறுகாலும் கடுதாசியள கந்தோரில எடுக்காங்களாம் எண்டும் சனம் கதைக்கிது.

இந்த ரோட்டெல்லாம் வாத்தி மாருர புதினம்தான். ஒலெவல் பேப்பர் திருத்திறவையாளாம் எண்டுதான் ஒடித்திரியிறாங்க. எந்த வாத்தியக் கேட்டாலும் 'மாக்கிங்'குக்கு போறம் எண்டு சொல்லுறாங்க. நான் ஒரு வாத்திற்ற 'இது என்ன சாதி வேல' எண்டு கேட்டாப்பில 'பேப்பர் திருத்திற வேல' எண்டு சொன்னாரு. அதுக்கும் காசிதானே எண்டு வாத்திமாரு தலதெறிக்க ஓடுறாங்க.

இந்த களுவாஞ்சி, கல்லாறு, காத்தான்குடி, ஏறாவூர் பகுதியில இருந்து வாற வாத்திக் கட்டயள் நம்மட பழைய கவுண்மெந்து கொலிச்சிக்கு போறத்தில படுற சிறுமானியம் கொஞ்சமில்ல. மழையும் பேஞ்சித்தெண்டா பாக்கிற புதினமில்ல.

அய்யாத்துரை அண்ண- இன்னொரு புதினத்த கேளுங்களன்- நானும் சோட்டப் பட்டுப்பட்டுப் போய்த்தான் கிடந்தநான். நாம படிக்கிற காலத்தில ரெண்டு நேரப் பள்ளியும் நடந்ததானே?

இப்பயும்-டவுனுக்குள்ள ரெண்டு நேரப் பள்ளியெண்ட கத நல்லா பரவித்து. பேப்பர் காரனுகளுக்கும் இதப்பத்தி எழுதுறதுதான் வேல எண்டு நம்மட விதண்டாப் போடியிர மகன்-வேகண்டாப் போடி சொல்லித்துப்போறான்.

உங்களுக்கு-காதுக்க சொன்னாப் போல-வாத்திமாருக்கும், கிருமி கலங்குதாம்... இரண்டுதரம் போறவாறத்த நினைச்சி! புள்ளையள் எண்டா மத்தியானம் வீட்டபோனா வராட்டியும் கேக்க ஏலா தானே! ஆனா வாத்திமார் வரத்தானே வேணும்.

எண்டாலும் ஒரு நன்ம- புள்ளயள் வராம உட்டுத்து எண்டா சும்மா கதைச்சித்து கிடந்து வரலாம் எண்டு நம்மட கனகசிங்கத்திட பொஞ்சாதி பொழிப்பாகச் சொல்லித்துப்போறாவு.

டவுனுக்குள்ள உள்ள பள்ளியளில ஒவ்வொரு வகுப்பிலயும் நாப்பதுக்கு மேலயாமே புள்ளயள். ரண்டு நேரமும் கிடந்து கத்திற எண்டா இந்த வாத்திமாரு பாவம் செய்த சீவனுகள்தான்-எண்டு நம்மட பொட்டுட மகளுட பொடியன் பொன்னரும், பூமணியும்-மாமாங்கக் கோயிலுக்கு வந்தாப்ப-அயினைக்க மரத்துக்குக்கீழ நிண்டு கதைச்சித்து போறாங்க.

அய்யாத்துரை அண்ண, இந்த மட்டக்களப்பு டவுனுக்குள்ள ஆக்கள் படுற சிறுமானியம் எண்டா சொல்ல ஏலா. ராவெண்டும் இல்ல, பகலெண்டும் இல்லாம இந்த நுளம்புக்கிள படுத்திற பாடெண்டா கொஞ்சமில்ல. நுளம்புத்திரியும் அதுகளுக்கு நல்ல பழக்கம். எண்டாலும் மட்டக்களப்பில நுளம்புத்திரி நல்ல யாபாரம். நானும் எங்கயெண்டாலும் கடனக்கிடனப் பட்டெண்டாலும் நுளம்புத் திரி செய்யிற தொழிலொண்ட துவங்க யோசிக்கன்!

அய்யாத்துரை அண்ண, அரசியலும் போன வேகத்துக்கு நல்லா சவுத்துப் போயித்து. கன்னா பின்னா எண்டு, குறுக்கும், மறுக்கும் ஓடின ஆக்க ளெல்லாம்-கப்சிப் எண்டு கிடக்கானுகள்.

அண்ண, உனக்கும் என்னத் தெரியுந் தானே? ஆக்களுக்குள்ளயும் முகத்த கிகத்தக் காட்டி பாட்டிக்குள்ள கடஞ் சிக்குவம் எண்டு பாக்கன். அண்ண, கள்ளோட்டம் ஓடாட்டி, இஞ்ச உள்ள ஆக்கள் வாயில வாழப்பழம் தீத்திப் போடுவாங்க போல கிடக்கு.

கண்ணாடிச் சங்கிலியையும் நல்லா சிக்காராப் பூட்டி இறுக்கிப் போட்டன். கச்சான் காத்தில்ல, கப்பல புரட்டிற காத்து வந்தாலும் இந்தப் போடிர கண்ணாடி உசும்பாது.

வெள்ளாமயச் செஞ்சித்து, தான் தோன்றியானே எண்டு கிடந்தநான். நெல்லுக்கில்லு எண்டுத்து, வயலும் கியலும் எண்டுத்து, மாடும்கண்டும் எண்டுத்து, தொம்பலும் சுரியும் எண்டுத்து திரிஞ்ச நாமதானே?

என்ர அப்பாவும் புழையச் செஞ்சி போட்டாரு- அந்த நாளில மாட்டக்கீட்ட மேச்சித்து, பாலக்கீலக் கறந்தித்து கிட எண்டு உட்டு இருந்தா இந்த மாராயம் வந்திருக்க மாட்டா. கேட்டிக்கம்பால தோலெமும்ப அடிச்சித்தானே என்ன சிவானந்தாவில சேத்தாரு சேத்ததால வந்த வின! கொஞ்சம் நல்லா படிச்சித்தன். இரண்டு இங்கிலீசித் தூளையும் அங்கதான் புறக்கினநான். அதால ஒண்டுமில்ல, நாலு மனுஷனோட கதைச்சுப் பேசத் தெரியுமெண்டா இண்டைக்கும் கேட்டிக் கம்பு அடிதான் கன்னுக்க நிக்கி.

### கொச்சிக்காப் போடியாரின் குமுறல்



- "மட்டக்களப்பு டவுனுக்குள்ள ரெண்டு நேரப் பள்ளி யெண்ட கத நல்லா பரவித்து"
- "புள்ளயள் வராம உட்டுத்து எண்டா சும்மா கதைச்சித்து கிடந்து வரலாம் எண்டு நம்மட கனகசிங்கத்திட பொஞ்சாதி சொல்லித்துப் போறாவு"
- "டவுனுக்குள்ள இந்த நுளம்புக்கிள படுத்திற பாடெண்டா கொஞ்சமில்ல"
- "கள்ளோட்டம் ஓடாட்டி, இஞ்ச உள்ள ஆக்கள் வாயில வாழப்பழம் தீத்திப் போடு வாங்க போல கிடக்கு"
- "இண்டைக்கு-இங்கிலீஸ் கிங்கிலீஸ் பேசிறன் எண்டா சிவானந்தாவில படிச்ச படிப்புத்தான் இது"

---

இழக்கப்பட்ட இலக்கியவாதிகள்

## பித்தன் பிரிந்தார்

மட்டக்களப்புத் தமிழகத்தின்-எழுத்துப் பரம்பரையின் மூத்த புதல்வர்களில் ஒருவரென மதிக்கப்பட்ட முதுபெரும் எழுத்தாளர் 'பித்தன்' காலமானார். அவரின் திறமை மதிக்கப்பட்டு இரு தடவை கௌரவம் கிடைத்திடினும்-வறுமை அவரை வாட்டியது. இருபத்தேழு சிறுகதைகளை எழுதியுள்ளார். 'பித்தன்கதைகள்' என்ற தலைப்பிலும் தொகுப்பு நூலொன்றும் தமிழகத்தில் வெளியாகியுள்ளது. புதுமைப் பித்தனின்-எழுத்துப் போக்கை வரித்துக்கொண்டவர். புதுமைப்பித்தன் உயிருடன் வாழ்ந்த காலத்தில் அவரைச் சந்தித்து உறவை வளர்த்துக் கொண்டவர். புதுமைப் பித்தன்மீது வற்றாத பற்றுக்கொண்ட பித்தன் 'பாதிக்குழந்தை' என்ற சிறுகதையைத் தந்து பிரபல்யமானவர். பித்தனின் இறுதிக் கிரியையின்போது-அவரை நேசித்த இலக்கியப் பரம்பரையை காணமுடிந்தது. எல்லோருமே கண்களை குளமாக்கிக்கொண்டனர்.

## 'முகிலழகன்' கந்தசாமி

ஈழத்தின் பிரபல்யம் பெற்ற தமிழ் பேச்சாளர்களில் ஒருவரான முகிலழகன் கந்தசாமி காலமானார். அரசியல், கலை, கிராமிய இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு காட்டிய 'முகிலழகன்' தங்கு தடையின்றி தமிழ்ச் சொற்களை அடுக்கி இனிக்கப் பேசும் வல்லவர். நாட்டார் பாடல்களையும், பாரதிதாசன் கவிதைகளையும் கையாள்வதில் அவருக்கு இணை அவரே எனலாம். ஆரம்பத்தில் தமிழகத்தில் தங்கி அண்ணாவின் அரவணைப்பில் வளர்ந்தவர். அவர்வழி நின்று தமிழ் தந்த பேராளர். முகிலழகனின் பிரிவாற்றலில் இணைந்து கண்ணீர் அஞ்சலி செலுத்துவோம்.

## மலையகத்தில் உள்ள குறை!

சுமார் ஐம்பதினாயிரம் தமிழ்பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும், பொகவந்தலாவை நகரில் அமைந்துள்ள உப-தபால் அலுவலகத்தில் ஒரு தமிழ் ஊழியர் கூட கடமையாற்றவில்லை. இதனால் தந்தி, மணியோடர் போன்ற படிவங்களைத் தனி ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் எழுதினால்தான் ஏற்றுக்கொள்கின்றனர். இதனால் இம்மொழிகள் புரியாத தமிழ் மக்கள் பல சிரமத்துக்காளாகின்றனர். அத்துடன் வேலை வாய்ப்பு செய்திகள், அரசாங்க அறிவித்தல்கள் என்பவற்றை அறியச் செல்லுவோர்க்கு அரசாங்க வர்த்தமானியை பெறுவதும் சிரமமாக உள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா?

சோ. ஸ்ரீதரன்-பொகவந்தலாவை.

---

## விளம்பரப் பகுதி




### மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464

### BRIGHT NEW COURSE

PRACTICAL ENGLISH BY ENGLISH PICNIC
FOR EVERYDAY AND BUSINESS USE

FOLLOW US PROGRAMME

பேசும் ஆங்கிலம், ஆங்கில உல்லாச பிரயாணமும்
(நாளாந்த பாவனைக்கும் வியாபாரத்திற்கும் உரியது)

உலக நாடுகளில் வாழ்கின்ற அநேகமானோர் ஆங்கிலத்தில் பேசவேண்டும் எழுதவேண்டும் என்பதே அவாவாக உள்ளனர். இவர்களது அபிலாசையை இலகு வழியில் எளிய முறையில் தீர்ப்பதே BRIGHTன் FOLLOW US PROGRAMME ஆகும். உல்லாச பிரயாணமூலம் ஆங்கில மொழியை எட்டே (8) வாரங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எட்டு(8) மணித்தியாலய அடிப்படையில் பொழுது போக்குடன் ஆங்கிலக் கல்வி போதிக்கப்படும். ஆங்கில கல்வித் துறையில் "மாஸ்டர் கிறீயேட்டர்" என அழைக்கப்படும் ஆங்கில கல்வி போதனைக்காக அண்மையில் RUSSIA நாடு சென்று திரும்பிய Mr. M. Seyed A Moulana என்பவரின் உல்லாச பிரயாணத்துடன் கூடிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

BRIGHT ENGLISH SPEAKING CENTRE

பாடநெறிக்கான அனுமதிக்கட்டணம் ரூபா 500.00
பாடநெறிக்கட்டணம் ரூபா 2500.00
பாடநெறிக்கான காலத்தில் உல்லாச பிரயாணம், உணவு, தேநீர் Course Materials என்பன வழங்கப்படும்.

இப் பாடநெறி BRIGHT கல்வி நிறுவன இயக்குனர் Pon Sakthivel, A.C.E.A.(LOND), IPFM (LOND) DIRIN. ENGLISH (LOND) அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். குறிப்பிட்ட தொகை மாணவரே இக்கல்விச் சுற்றுலாவில் சேர்த்துக் கொள்ளப்படுவர். எனவே அனுமதிக்கு முந்துங்கள். மேலதிக விபரங்கட்கு தொடர்புகொள்க.

BRIGHT ENGLISH SPEAKING CENTRE
P.O. BOX 162, S -27, FIRST FLOOR,
COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX, COLOMBO 11 (T.P. 434770)


## கட்டி முடித்ததை தட்டித் திறப்பது யார்? உப-தபாலகக் கதவம் திறமினோ?



(நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர் அரசடித்தோட்டம் பகுதியில் உபதபாலகம் ஒன்றை அமைப்பதற்கெனக் கட்டப்பட்ட உபதபாலகக் கட்டிடத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

கடந்த அரசின் காலத்தில், முன்னாள் அமைச்சர் ஜனாப் ஏ.ஆர்.மன்சூரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா (பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி) செலவில் கட்டப்பட்ட இக் கட்டிடம் இழுத்து மூடப்பட்ட நிலையிலிருக்க, கடந்தமாதம் அரசடித் தோட்டம் உபதபாலகம் வசதி குறைந்த தனியார் கட்டிடம் ஒன்றில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய இக் கட்டிடம் அமைந்துள்ள காணிச் சொந்தக்காரரே கட்டிடத்தைப் பூட்டிவைத்துக்கொண்டு உபதபாலகத்திற்கு வழங்க மறுத்து வருகிறாராம்.

மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட இக்கட்டிடத்தை உபதபாலகத்திற்குப் பெற்றுக்கொடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை அம்பாறை மாவட்ட செயலாளர் மேற்கொள்ளவேண்டுமென அரசடித் தோட்டப் பகுதி வாழ் மக்கள் கோருகின்றனர். கடந்த அரசின் சீரற்ற நிருவாக நடவடிக்கைகளுக்கு இந்த உப தபாலகக் கட்டிடமும் உதாரணமா?


### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 492/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 251/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 128/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### கொழும்பில் வீடு தேவை

கொட்டாஞ்சேனை, மட்டக்குளி பகுதியில் இருக்கும் தொடர்மாடி வீடுகளில் **கீழ் மாடிவீடு** விற்பனைக்கு இருப்பதாயின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தெ.லோஜனா.கொழும்பு-15 Phone 526454

### தலைநகரில் பிரபலமான நிறுவனம் ஒன்றிற்கு
### கணனி இயக்குநர்கள் தேவை

'அப்பிள் மக்கின்ரோஷ்' கணனியில் தமிழில் கொம்போசிங் செய்யக்கூடியவர்கள் மற்று ம்(DESK TOP PUBLISHING) பக்க அமைப்புச் செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஆங்கிலத்தில் ஆற்றலிருத்தல் விரும்பத்தக்கது .

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தங்களது சுயவிபரக்கோவை மற்று ம் முன்னனு பவச் சான்றிதழ் போன்றவற்று டன் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்
கணனி இயக்குநர்கள்
மே/பா: தினமுரசு வாரமலர்
த.பெ.எண் 1772
கொழும்பு.

ADVERTISER
COMPUTOR OPERATOR
C/O. THINAMURASU VARAMALAR
P.O.BOX-1772
COLOMBO. (Advt.)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சு மேசையில் புலிக்கொடி

**நாரதர்**

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' தொடர்ந்து கவனித்தவர்களுக்கு பேச்சுவார்த்தையின் இன்றைய கட்டம் ஆச்சரியமுமல்ல- எதிர்பாராத நிகழ்வுமல்ல.

போர் நிறுத்தம் ஒன்றை அரசு செய்தேயாக வேண்டும். புலிகள் பலமான அரசியல்- இராணுவ தளத்தில் இருப்பதால் புலிகளது கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்து பேச்சுக்கு செல்வது தவிர அரசுக்கு உடனடியாக வேறு பாதை கிடையாது என்பதையெல்லாம் ஏற்கனவே கூறியாகிவிட்டது.

பேச்சுக்கள் தள்ளிப் போனபோதும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில் அதுபற்றிக் கூறும்போது, பாப்பரசர் இங்கு வரும் சமயத்தில் அமைதியை நிலைநாட்டும் வகையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு நினைக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறுதான் நடந்திருக்கிறது.

போர் தவிர்ப்பும் ஏற்கனவே சுட்டிக் காட்டியதுபோல பாப்பரசரின் வருகையை ஒட்டியே உருவாகியிருக்கிறது.


எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் உண்மைகள் அப்படியே கூறப்படும்போது ஒரு சிலருக்கு உடனடியாக கசப்பை கொடுக்கக்கூடும். ஆனால், சொந்த விருப்பத்தின் அடிப்படையில் அல்லாமல் உண்மையான சூழ்நிலையில் இருந்து விடயங்களை நோக்குவதால் நமது கணிப்புக்கள் சரியானவை என்பதை காலத்தின் கரங்கள் எடுத்துக் காட்டி விடுகின்றன.

சூழ்நிலையிலிருந்து விடயங்களை ஆராய்வது சம்பந்தப்பட்ட தரப்புக்களின் நடைமுறைகளில் இருந்து அவற்றின் நோக்கத்தை கண்டறிவது என்பவையே அரசியல் விமர்சனத்தின் அடிப்படையாகும்.

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வாசகர்களை நான் ஏமாற்றவில்லை. என்ன நடக்கிறது, என்ன நடக்கப் போகிறது என்பதை விருப்பு வெறுப்பின்றி சுட்டிக்காட்டியிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள முழுத் தகுதியும் உண்டு. இன்றைய நடப்புக்கள் அதற்கு சாட்சி.

இரண்டாம் சுற்றுப் பேச்சு மிகுந்த திருப்தியளிக்கிறது என்று ஜனாதிபதியின் செயலாளர் கூறியிருந்தார்.

ஆனால், முதல் சுற்றில் பேசிய விடயங்களையே மீண்டும் ஆராய்ந்தது மட்டுமே இரண்டாவது சுற்றில் நடந்திருக்கிறது.



இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கு திரு.லயனல் பெர்ணான்டோ செல்லவில்லை.

அதற்கு அரசு தரப்பு சமாளிப்புக் காரணம் கூறியிருக்கிறது. புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் ஆசிரியர் சங்கம் திரு.லயனலை விமர்சித்தமை தனிப்பட்ட ரீதியில் அவருக்கு மனவருத்தத்தை கொடுத்திருந்தது.

அதனால்தான் அவர் அரச தூதுக் குழுவில் செல்ல விரும்பவில்லை. புலிகளே அவரை விமர்சித்துவிட்டார்கள் என்ற கூற்றை மறுப்பதிலும் புலிகள் ஆர்வம் காட்டாமல் இருந்தார்கள்.

தமிழர்கள் மத்தியில் லயனலுக்கு நல்ல பெயர் என்று நினைத்துத்தான் அரசாங்கம் தனது தூதுக்குழுவில் அவரை முக்கியப்படுத்தியிருந்தது.

பத்திரிகைகளும் லயனலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

ஆனால், லயனல் தமிழர்களது ஆதரவும் அபிமானமும் பெற்ற ஹீரோவாக மாறுவதைப் புலிகள் விரும்பவில்லை.

லயனல் மட்டுமல்ல வேறு எவரும் ஹீரோவாகுவது புலிகளுக்கு பிடித்தமான செயலல்ல.

இவர்கள் ஹீரோக்களாகிவிட்டால் பின்னர் இந்த ஹீரோக்கள் சொல்வதையும் தமிழ் மக்கள் கேட்கத் தொடங்கிவிடுவார்கள். அது புலிகளுக்கு தேவையற்ற இடையூறாகிவிடும்.

திரு.லயனல் தொடர்பான இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் விமர்சனமும் அதனைப் புலிகள் அமைதியாக அனுமதித்ததும் அந்தப் பின்னணியில்தான் என்பது தெளிவு.

திரு.லயனலை விமர்சிக்க வேண்டுமானால் அவர் வடக்கு-கிழக்கு ஆளுநராக இருந்தபோதே தமிழ் ஆசிரியர் சங்கம் அதனைச் செய்திருக்கலாம்.

ஆளுநர் பதவியில் இருந்து அவர் அகன்றபின்னர் திடீரென்று அவரையும் இழுத்துக் குற்றம் சாட்டியது தற்செயலாக நடந்த ஒன்றல்ல.

முதல் சுற்றுப் பேச்சுக்கு சென்றவர்கள் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் சென்று இறங்கினார்கள்.

அப்போது கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம், புலிகளது காவல்துறையையும் மீறிவந்து வரவேற்புக் கொடுத்தது.

அந்த வரவேற்பு புலிகள் இரசிக்கக் கூடிய ஒரு விடயமல்ல. "ஹெலிகொப்டர் வந்து சுட்டால் ஓடுவீர்கள் கீழே இறங்கினால் ஓடிப்போய் கொஞ்சுகிறீர்கள்" என்று புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் எரிச்சல்பட்டு பேசியிருந்தார்.

இதனையெல்லாம் ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் கூறியிருந்தேன்.

டிசம்பர் 25-31,1994ல் முரசின் மூன்றாம் பக்கச் செய்தியில் அரசப் பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணத்தில் சென்று இறங்கும் இடத்தில் மாற்றம் என்று செய்தி வெளியாகியிருந்தது.

மருத்துவபீட மைதானத்தில் நான்கு திசைகள் மூலமும் மக்கள் உட்பிரவேசிக்க முடியும். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம் பெரிய சுற்று மதில்களைக் கொண்டது. புலிகளது கட்டுப்பாட்டை மீறி யாரும் மைதானத்திற்குள் செல்ல முடியாது. எனவேதான் அந்த மாற்றம் என்று விளக்கப்பட்டிருந்தது. அவ்வாறுதான் நடந்துமிருக்கிறது.

இம்முறை இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கு சென்ற பிரதிநிதிகள் புலிகளால் மட்டுமே வரவேற்கப்பட்டார்கள்.

கூடி நின்று ஆரவாரித்து கையசைத்த மக்கள் கூட்டத்தை இம்முறை அவர்கள் காண முடியவில்லை.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெந்தியிடம் ஒரு பத்திரிகை நிருபர் அது



## புலிகள் கூறும் காரணம்!

பற்றிக் கேட்டிருந்தார்.

'இம்முறை மக்கள் வீதிகளில் குழுமி நிற்கவில்லை' என்று அவரே சொல்லியுமிருக்கிறார்.

இரண்டாம் சுற்றுப் பேச்சில் புலிகள் கேட்ட முதல் கேள்வி: "சென்ற முறை கூறிவிட்டுச் சென்றவற்றை ஏன் நிறைவேற்றவில்லை? இத்தனை கால தாமதம் செய்து பேச்சு தள்ளிப்போனது ஏன்?"

அது மட்டுமல்ல, பேச்சில் கலந்து கொண்ட புலிகளது அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.தமிழ் செல்வன் தனது உரையில்,

**"<u>உங்களுடைய</u> ஜனாதிபதிக்கும், <u>எங்களுடைய</u> தலைவர் பிரபாகரனுக்கும் இடையே நடத்திய கடிதப் பரிமாற்றங்கள் நடந்தன. சமாதான நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும்"** என்று கூறியுள்ளார் தமிழ் செல்வன்.

**ஜனாதிபதி சந்திரிக்கா என்று பொதுவாக குறிப்பிடவில்லை, <u>உங்களுடைய</u> ஜனாதிபதி என்றுதான் தமிழ் செல்வன் பேசியிருக்கிறார்.**

பிறிதொரு நாட்டில் இருந்து சென்ற தூதுக்குழுவோடு பேசும் தொனியில் பேசப்பட்ட பேச்சாகவே அது இருக்கிறது.

முதல்கட்டப் பேச்சில் புலிகளது பிரதிநிதிகள் அமர்ந்திருந்த மேசையில் புலிக்கொடி பறந்துகொண்டிருந்தது.

இதனை புகைப்படத்தில் கண்ணுற்ற கொழும்பு ஆங்கில நாளேடான 'ஐலண்ட்' பத்திரிகை கண்டித்திருந்தது.

இரு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைகளில்தான் தத்தம் நாட்டு கொடிகளோடு பிரதிநிதிகள் அமர்ந்திருந்து பேசுவது வழக்கம். இதனை அரச பிரதிநிதிகள் கவனத்தில் கொள்ளவில்லை என்பதே 'ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியரின் கோபம்.

ஐலண்ட் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திற்கு 08.11.94 அன்று வெளியான கனடாவில் புலிகளால் வெளியிடப்படும் 'உலகத் தமிழர்' பத்திரிகை பதில் எழுதியிருந்தது.

'புலிக்கொடி கண்டு மிரளும் பத்திரிகை ஆசிரியர்' என்ற தலைப்போடு புலிகளது பத்திரிகை பதில் எழுதியிருந்தது:

"ஐலண்ட் ஆசிரியர் சிறிலங்கா அரசு "ஐக்கிய சிறீலங்கா" என்ற கோட்பாட்டில் இருந்து ஒரு பொழுதும் விலகக்கூடாதென வேண்டுகோள் விடுக்கிறார்.

இப்போதல்ல எப்போதோ இருந்தே "ஐக்கிய சிறீலங்கா" இல்லாமல் போய்விட்டது.

'ஐலண்ட் பத்திரிகை' பௌத்த சிங்கள மேம்பாட்டுக் கொள்கையை வலியுறுத்தவும் கட்டிக் காக்கவும் ஆரம்பிக்கப்பட்ட ஏடாகும்.

எனவே அந்தப் பத்திரிகை ஆசிரியர் புலிக்கொடியைக் கண்டு கிலி கொள்வதில் ஆச்சரியமில்லை.

ஆனால், அவரைப் போன்ற சிந்தனையுடைய பௌத்த சிங்களவாதிகள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இலங்கை முழுவதும் ஒரு அரசின் ஒரே ஆட்சிமுறை முற்றாக அற்றுப் போய்விட்டது. அது திரும்பவே மாட்டாது.

இலங்கை இரண்டு நாடுகள்- இரண்டு அரசுகள் கொண்ட தீவு.

தமிழீழத்தில் புலிக்கொடி பறப்பதை இனி யாராலும் தடுத்துவிட முடியாது.

'ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியர் ஒன்று செய்யலாம். அடுத்த முறை பேச்சுவார்த்தை நடக்கும்போது, சிறீலங்கா அரச பிரதிநிதிகள் சிங்க கொடியை எடுத்துப்போய் மாநாட்டு மண்டபத்தில் வைக்கவேண்டும் என்று யோசனை நல்கலாம். கொடிப் பிரச்சனைக்கு இதுவே தீர்வு."

இப்படித்தான் பேச்சுவார்த்தை மேசையில் புலிக்கொடி இருக்கவேண்டிய காரணத்தை விளக்கி எழுதியுள்ளது உலகத் தமிழர் பத்திரிகை.

கனடாவில் இருந்து எழுதியதுதானே என்று இதனை எடுத்துக்கொள்ள முடியாது.

ஏனெனில் 2.1.95 அன்று நடந்த இரண்டாம் சுற்றுப் பேச்சு மாநாட்டு மண்டபத்தில் இரு தரப்பு பிரதிநிதிகள் மத்தியில் கம்பீரமாக காட்சியளித்தது புலிக்கொடி.

முதல் கட்டப் பேச்சில் புலிகளது பிரதிநிதிகள் அமர்ந்திருந்த மேசையில் காணப்பட்ட புலிக்கொடி பற்றி சர்ச்சை எழுந்தது. அதற்கு அலட்சியமான பதிலடியாக இரண்டாவது சுற்றுப் பேச்சில் இரு தரப்பு பிரதிநிதிகளுக்கு மத்தியில் பளிச் சென்று தெரியும் வகையில், பிரபாகரனின் படங்களோடு புலிக்கொடி பறந்துகொண்டிருந்தது.

சென்ற முறை புலிக்கொடி தெரிபடாமல் எடுக்கப்பட்ட புகைப்படங்களை அரசாங்கம் பத்திரிகைகளுக்கு வழங்கியதாகக் கூறப்பட்டது.

ஆனால் இம்முறை எந்தக் கோணத்தில் பேச்சுவார்த்தை அரங்கத்தை புகைப்படம் எடுத்தாலும் புலிக்கொடியை தவிர்க்க முடியாதவாறு வைத்துவிட்டார்கள்.

அரச பிரதிநிதிகள் கொடி எதனையும் எடுத்துச் செல்லவில்லை.

ஆக,தமது நிலைப்பாடுகள் எதனையும் விட்டுக்கொடுக்காத வகையில் புலிகள் பேச்சு வார்த்தையில் பங்குகொண்டு வருகிறார்கள்.

பாராளுமன்ற கூட்டத் தொடரை ஜனவரி 6, 1995இல் ஆரம்பித்துவைத்த ஜனாதிபதி சந்திரிக்கா இனப்பிரச்சனை தீர்வு பற்றி திருப்பமான கருத்து எதனையும் வெளியிடவில்லை.

'போர் தவிர்ப்பு' என்ற விடயத்தை ஜனாதிபதி அறிவித்தமைதான் புதிய முயற்சியாக இருந்தது.

புலிகளோடு கவனமாக முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை என்று ஜனாதிபதி கூறிய கருத்தும் கவனிக்கத் தக்கது.

புலிகளிடம் அரசாங்கம் ஏமாந்து விடாது என்ற செய்தியைத்தான் அவர் தெரிவிக்க விரும்பியிருக்கிறார்.

போர் தவிர்ப்பை கண்காணிக்க வெளிநாட்டு உதவி தேவையாகியிருப்பதும், இரு தரப்புமே அதற்கு இணங்கியிருப்பதும், இரு தரப்பும் கவனத்தோடு நடந்துகொள்ள நினைப்பதையே காட்டுகின்றன.

போர் தவிர்ப்பை புலிகள் மீறினால் அரசாங்கம் தனது நேர்மையை வெளிப்படுத்தவும் புலிகளை அம்பலப்படுத்தவும் கண்காணிப்புக்குழு சாட்சியாக அழைக்கப்படும்.

புலிகளும் தாம் சமாதான முயற்சியை குழப்பியவர்களாக கருதப்படும் நிலையை விரும்பமாட்டார்கள்.

எனவே, வெளிநாட்டு கண்காணிப்புக்குழு என்ற விடயத்தை முன்வைத்தமை அரசின் சிறந்த சாணக்கியமாக கொள்ளப்படலாம்.

ஆனால், நமக்குள் உள்ள பிரச்சனையை நாமே தீர்த்துக்கொள்வது என்பதற்கான பரஸ்பர புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை என்பவை இல்லாத நிலையில்தான் வெளிநாட்டு உதவி அவசியமாகிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இந்திய அமைதிப்படையை வெளியேறுமாறு முன்னாள் ஜனாதிப்தி பிரேமதாசாவோடு இணைந்து புலிகள் கோரினார்கள்.

அப்போது புலிகளது பிரதித் தலைவராக இருந்தவர் மாத்தையா.

மாத்தையா அப்போது சொன்ன கருத்து இதுதான்: **"சிங்களவரும், தமிழரும் ஒரு நாட்டு மக்கள். நமது பிரச்சனைகளை நாமே நமக்குள் தீர்த்துக் கொள்ளலாம். இந்தியாவுக்கு இங்கென்ன வேலை?"**

இதைச் சொன்ன மாத்தையா இம்முறை பேச்சு நடத்தப்படும்போது காணாமல்போய்விட்டார்.

ஆனால், ஏதோ ஒரு வடிவத்தில் வெளிநாட்டு உதவி தேவைப்பட்டிருக்கிறது.

இதே நேரத்தில் அரசும்-புலிகளும் இரகசியமாக பேசிவருவதாக சிலர் கற்பனைச் செய்திகளை உலாவ விடுகிறார்கள்.

பகிரங்கமான போர் தவிர்ப்பு விடயத்தில்கூட பிடிகொடாமல் நடந்துகொள்ளவே இரு தரப்பும் விரும்புகிறது. இவ்வாறான சூழலில் இரகசியமாக பேசிக்கொள்ள என்ன இருக்கிறது?

இரகசியமாக பேசினால் அதில் என்ன பேசப்படுகிறது என்று வெளியே தெரியாது. பேச்சு முயற்சி தோல்வியில் முடிந்தால் ஒவ்வொரு தரப்பும் தான் நியாயமாக நடந்துகொண்டதாகவே

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## அதிரடி அய்யாத்துரை



கண்காணிப்பு விசயத்திலை பக்கத்து நாடு பங்குகொள்ள விரும்பேல்லையாம். ஏற்கனவே ரெண்டு எழுத்தார் சந்தேகம் தெரிவிக்கினம். அதாலை விலகியிருக்கிறது புத்திசாலித்தனம் எண்டுதான் அயல்நாடு நினைச்சிருக்கும். எண்டாலும் உள்ளுக்கு ஒரு கொதிப்பு இருக்கத்தான் செய்யும்.

சிவமான பேராசிரியர் அழைப்பு வந்துதான் உலகத் தமிழ் மாநாட்டுக்குப் போனவராம். அழைப்பு விடுத்துப்போட்டு அவரை அலையவைச்சப் போட்டினம். அவர் என்ன குண்டோ கொண்டு போனவர்? ரெண்டு எழுத்தாரை இடைக்கிடையே புகழ்ந்து பேசறவர் எண்டதிற்காக, புகுந்து கலவரம் செய்யிறவர் எண்டு நினைக்கலாமோ?

உலகத் தமிழ் மாநாட்டிலை பேசிய நம்நாட்டு அரசியல்வாதிகள் தமிழக அரசு நடந்துகொண்ட முறையை நாசுக்காக எண்டாலும் தங்கள் பேச்சில் சுட்டிக்காட்டியிருக்கலாம். 'உதைச்சாலும் உச்சி குளிரும்' எண்டமாதிரி நடந்துபோட்டு வந்திருக்கினம்.

சனம் கூடிநிற்கும் எண்டு எதிர்பார்த்து ஹெலியிலை இருந்து இறங்கினவைக்கு ஏமாற்றம்தான். அதை வெளிக்காட்டாமல் சிரிச்சச் சமாளிச்சுப் போட்டினமாம்.

கொழும்பிலை சொக்கலேட் ஒண்டு திரியுது கவனம் மக்காள்! காலி முகத்திடலில் காற்றுவாங்கப்போன யாழ்ப்பாண இளைஞர்கள் ரெண்டுபேர் சொக்கலேற் சாப்பிட்டுப்போட்டு கையிலை கிடந்த மணிக்கூடு, கழுத்திலை கிடந்த தங்கச் சங்கிலி, பணம் எல்லாவற்றையும் பறிகொடுத்தவையாம். திடீர் பழக்கமாகி சிரிச்சப் பேசி சொக்கலேட் கொடுத்ததும் யாழ் இளைஞர்கள்தானாம். சொக்கலேட் சாப்பிட்ட மறுகணமே மயக்கம் வந்து சரிய, கொடுத்தவை சுருட்டிக்கொண்டு ஓடிப்போட்டினமாம்.

கண்காணிப்பு விசயத்திலை நோர்வேயும், நெதர்லாந்தும் உடனடியாக ஒப்புக்கொண்டவையாம். கனடாக்காரர் கடுமையாக யோசித்தவையாம். உதிலை போய் தொட்டால் தொல்லை. ஏற்கனவே தொட்டவை பட்ட பாடு எங்களுக்கும் வருமோ எண்டு நினைச்சிருப்பினமோ? யார் கண்டது?

கொழும்பில் தமிழ் கட்சி அரசியல்வாதி கொல்லப்பட்ட சம்பவத்தாலை, தமிழ் அமைப்புக்களுக்கு அரசே பாதுகாப்பு வழங்குவது, தமிழ் கட்சிகளிடம் இருக்கும் ஆயுதங்களை வாங்குவது என்று பாதுகாப்பு மட்டத்தில் யோசிக்கபட்டதாம். ஆனாலும் தமிழ் கட்சிகள் அதற்கு உடன்பட மறுத்ததாகத் தகவல்.

எதிரணித்தலைவர், பேச்சுக்கு ஒத்துழைப்பு எண்டாலும், எதிரணி முக்கியஸ்தர்கள் ரெண்டு எழுத்தாரைப் பற்றி வெகுஜன சபையில் கேள்விகளைத் தொடுக்கத் தொடங்கியிருக்கினம்.

அதிகார மட்டத்தில் இருந்து பதினைந்து லட்சம் லஞ்சம் வாங்கப்பட்டதாக 'ராவய' பத்திரிகை முன்பக்க செய்தி வெளியிட்டதாம். பச்சை அணி அதை தூக்கிக்கொண்டு வெகுஜன சபையிலை போய் கேள்வி கேட்டதாம். "உங்கள் சார்பான பத்திரிகையில் வந்துள்ள செய்தி உண்மையா பொய்யா?" எண்டு கேட்டுத் துளைச்சப் போட்டினமாம். ஆளும் தரப்பு சங்கடமாகிப் போனாலும் சத்தம் போட்டு சமாளிச்சுப் போட்டினமாம்.

பச்சை அணி அதிகார காலத்தில் ரெண்டு எழுத்தாரிடம் மாட்டிய வீரர்களை நாங்கள் வந்து வெளியே எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது சாதனைதானே என்கிறாராம் அதிகாரமுள்ள ஒருவர்.

கவிஞர் வைரமுத்து நம்நாட்டுக்கு வந்து போயிருக்கிறார். தற்போது சில சமயம் நிர்ப்பந்தம் காரணமாக அப்படி இப்படி எழுதினாலும் சந்தம் சிந்தும் காதல் கவிதைகளும் எழுதியவர் அவர். உதாரணத்திற்கு ஒரு துளி.


**"மொட்டுமடல் மேனியது விட்டு விலகாதபடி**
**தொட்டழகு பார்த்திருக்கும் நெஞ்சம்-பட்டுக்**
**கட்டுடல்கள் ஒன்றையொன்று கட்டிவிளை யாடுவதைக்**
**கண்டு பெரு மூச்சுவிடும் மஞ்சம்."**

நெஞ்சை கொஞ்சுதல்லோ இந்த சந்தத்தில் உள்ள நயம்.


www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஈழப் போராளிகளுக்கு பாலஸ்தீன இயக்கப் பயிற்சி



## அரசியல் தொடர்.....



## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அற்புதன் எழுதுவது

தலைமையிலான 'அல்பட்டா' என்னும் அமைப்பு.


அந்த 'அல்பட்டா' அமைப்பின் உறுப்பினர்களோடுதான் இரட்ணாவுக்கு பரிச்சயம் ஏற்பட்டது.

ஈழப் போராட்டத்திற்கு உதவி செய்ய தயாராக இருப்பதாகவும், இராணுவப் பயிற்சி வழங்கலாம் என்றும் 'அல்பட்டா' உறுப்பினர்கள் கூறினார்கள்.

உண்மையில் அந்தக் காலகட்டத்தில் அது ஒரு அரிய வாய்ப்புத்தான்.

இலண்டனிலேயே திருமணத்தையும் (இலங்கைப் பெண்ணை) முடித்துக்கொண்ட இரட்ணாவின் மிகப் பெரிய பலவீனம்

அமரர் க.பத்மநாபா



இடைவிடாமல் குடிப்பது.

எந்த மனிதனுக்கும் ஒரு பலவீனம் இருக்கும் என்று சொல்வார்கள்.

இருக்கலாம். ஆனால் ஒருவனது பலவீனம் அவனை அடிமையாக்கிக் கொள்ளுமானால் அவன் அந்த பலவீனத்தின் கைதியாகி விடுகிறான்.

இரட்ணா மதுவின் கைதி. மார்க்சிசம், புரட்சி பற்றியெல்லாம் பேசிய இரட்ணா தனது வாழ்க்கைத் துணைவியாக வந்தவரை தினமும் உதைப்பதில் புரட்சி செய்தார்.

இலண்டனில் இரட்ணா தங்கியிருந்த வீட்டின் ஒரு பகுதியில்

## முதன் முதலில் கடத்தப்பட்டுவந்த வெளிநாட்டு ஆயுதம்



திரு.டக்ளஸ் தேவானந்தா

குடியிருந்தவர் அருளர். அருளரிடம் "அண்ணர் இரட்ணா இலண்டனில் என்ன பணி செய்தார்?" என்று கேட்டேன்.

அதற்கு அருளர் சொன்ன சுவாரசியமான பதில்,

"குடிப்பது பெண்டிலுக்கு அடிப்பது!".

இதனை இங்கே கூறுவது ஏன் என்றால், அடிப்படையிலேயே தான் சொல்வதை தனது வாழ்வில் கடைப்பிடிக்க முடியாத ஒருவராக இரட்ணா இருந்தார் என்பதை தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

புரட்சி பற்றிப் பேசிய சிலர் இப்படித்தான் இருந்தார்கள்.

அதனால்தான் அவர்களால் புரட்சியும் நடத்த முடியவில்லை.

### பலஸ்தீன தொடர்பு

ஈழப் புரட்சி அமைப்பாளர்கள் (ஈரோஸ்) குழுவின் தலைவர் இரட்ண சபாபதி. சுருக்கமாக இரட்ணா என்று அழைக்கப்படுவார்.

தமிழரசுக் கட்சி விசுவாசியாக தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

உயர் கல்வி கற்க இலண்டனில் உள்ள 'பேர்மிங்ஹாம்' பல்கலைக்கழகத்திற்கு சென்றதுதான் இரட்ணாவின் அரசியல் பாதையை மாற்றியது.

மார்க்சிய தத்துவத்தை அறிவதில் ஆர்வம் கொண்டிருந்த இரட்ணா- அதனைச் சரிவர கற்றுக்கொண்டாரோ இல்லையோ- தன்னை 'ஈழத்து லெனின்' என்று மிக உயர்ந்த பட்சமாக நினைத்துக் கொண்டார்.

'பேர்மிங்ஹாம்' பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்க உறுப்பினர்களது நட்பு இரட்ணாவுக்கு கிடைத்தது பெரும் பாக்கியம்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பல்வேறு அமைப்புக்கள் உள்ளன. அதில் முக்கியமானது யாசீர் அரபாத்தின் நிகழ்ச்சி நிரலில் தமது சாதனைகளையும் பதியவைக்க இயலவில்லை.

பாலஸ்தீன விடுதலை அமைப்பான 'அல்பட்டா'வில் இராணுவப் பயிற்சி பெற முடியும் என்ற செய்தியோடு இலண்டனில் சில தமிழ் இளைஞர்களை திரட்டினார் இரட்ணா.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் உறுப்பினராக இருந்த க.பத்மநாபா அப்போது இலண்டனில் இருந்தார்.

### அழைப்பு வந்தது ஆட்கள் இல்லை

புலோலி வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கு உதவியதாக கூறி கைது செய்யப்பட்டவர் பத்மநாபா.

பத்மநாபாவை கைது செய்த இன்ஸ்பெக்டர் பத்மநாதனுக்கு நெருங்கிய சிநேகிதராக இருந்தவர் பத்மநாபாவின் உறவினர் ஒருவர்.

இலஞ்சம் வாங்குவதில் கெட்டிக்காரரான பத்மநாதன் அதற்கு உதவியாக இருந்த தனது சிநேகிதரின் வேண்டுகோளின்படி க.பத்மநாபாவை விடுதலை செய்தார்.

அதன் பின்னர் பத்மநாபாவை அவரது குடும்பத்தினர் இலண்டனுக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

ஒரு அதிகாரியின் பலவீனத்தை பயன்படுத்தி பத்மநாபா தப்பிக்கொண்டமையை தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் குடும்பத்தினரின் விருப்பப்படி இலண்டனுக்கு சென்றமையைச் சரியென்றும் கொள்ள முடியாது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் செயலிழந்து போன 75ன் பிற்பகுதியில்தான் இரட்ணாவின் புதிய பிரவேசம் ஆரம்பமாகியது.

க.பத்மநாபா, தற்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகமாக உள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட இலண்டனில் இருந்த இளைஞர்களை அழைத்து தனது புதிய கருத்துக்களை கொட்டினார் இரட்ணா.

அவர்களும் இரட்ணாவை ஒரு இரட்சகராக நினைத்துக்கொண்டனர். இதற்கிடையே பாலஸ்தீன இராணுவ பயிற்சிக்கு செல்வதில் கால தாமதம் ஏற்பட்டதால் சில இளைஞர்கள் இரட்ணாவை விட்டு விலகிவிட்டனர்.

அந்த நேரத்தில் பயிற்சிக்கு ஆட்களை அனுப்புமாறு 'அல்பட்டா' பச்சைக்கொடி காட்டியது.

பயிற்சிக்கு அழைப்பு வந்துவிட்டது. அனுப்பிவைக்க ஆட்கள் இல்லை. தனது வீட்டில் இருந்த அருளரோடு ஆலோசித்தார் இரட்ணா. பொறியியலாளரான அருளர் தானும் பயிற்சிக்கு செல்ல ஒப்புக்கொண்டார்.

### கடத்தப்பட்ட ஆயுதம்

ஈழப் போராட்டத்தில் முதன் முதலாக வெளிநாட்டு இராணுவப் பயிற்சிக்கு இலண்டனில் இருந்து ஒரு குழு புறப்பட்டுச் சென்றது.

ஈழப் போராளிகளுக்கு இந்தியா பயிற்சியளித்தது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் அதற்கு முன்னரே- 75இன் பிற்பகுதியில், ஈழப் போராளிகளுக்கு பயிற்சியளித்தது பாலஸ்தீன விடுதலை அமைப்புக்களில் ஒன்றான 'அல்பட்டா'.

இந்தியா ஈழப் போராளிகளுக்கு ஆயுதம் வழங்கியதும் அனைவரும் அறிந்ததுதான்.

ஆனால் அதற்கு முன்னரே 'அல்பட்டா'வின் ஆயுதம் ஈழத்திற்கு வந்தது.

அது ஒரு கைக்குண்டு. அதனைக் கொண்டுவந்தவர் டக்ளஸ் தேவானந்தா. (இப்போது ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம்) விமான நிலைய சோதனைகளையும் ஏமாற்றிவிட்டு டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்த அந்த கைக்குண்டுதான் ஈழப் போராளிகளுக்கு வெளிநாடு மூலம் முதலில் கிடைத்த ஆயுதம்.

இதில் ஒரு சுவாரசியமான சம்பவமும் உண்டு.

டக்ளஸ் தேவானந்தா கைக்குண்டோடு புறப்படும்போது தன்னோடு பயிற்சியில் இருந்த அருளரிடம் விசயத்தை சொல்லி விட்டுத்தான் புறப்பட்டார்.

அவர் மாட்டிக்கொள்ளாமல் சென்று விட்டார் என்பதையறிந்த அருளர் தானும் சாகசம் செய்ய நினைத்தார்.

சூட்கேஸ் நிறைய கைக்குண்டுகளையும், வெடிமருந்துகளையும் நிரப்பிக்கொண்டு பயணத்திற்காக 'பெய்ரூட்' விமான நிலையம் சென்றார் அருளர்.

அவரது கெட்ட நேரம், சோதனையில் மாட்டிக்கொண்டார்.

இது நடந்தது 78ம் ஆண்டு. 15 நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் 'அல்பட்டா'வின் தலையீட்டால் அருளர் விடுதலை செய்யப்பட்டார்.

### யோசிக்காமல் மாட்டியவர்கள்

"இலங்கைப் பொறியியலாளர் பெய்ரூட் விமான நிலையத்தில் வைத்து கைது. வெடிமருந்துகளோடு சிக்கிக்கொண்டார்." என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியாகியது.

செய்தியைப் பார்த்த இலங்கை உளவுத் துறை அருளரின் பின்னணி பற்றி துருவியது.

அப்போதுதான் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொல்லப்பட்டிருந்தனர்.

அருளரின் வீடு வவுனியா- கண்ணாட்டி என்ற இடத்தில் இருந்தது. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொல்லப்பட்ட காட்டுப்பகுதி பண்ணைக்கு சமீபத்தில்தான் வீடு இருந்தது.

அங்கும் ஒரு பண்ணையிருந்தது. அங்கும் இளைஞர்கள் குழு ஒன்று தங்கியிருந்து பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

துப்பாக்கிகள் அவர்களிடம் கிடையாது. தடிகளை துப்பாக்கிகளாக பாவித்து பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் ஈழப் புரட்சி அமைப்பாளர் குழுவைச் சேர்ந்தவர்கள்.

பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலை செய்யப்பட்ட செய்தி அறிந்தவுடன் அவர்கள் புத்திசாலித்தனமாக வெளியேறியிருக்கலாம். ஆனால் வெளியேறவில்லை. அங்கேயே இருந்தார்கள்.

அருளரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸாருக்கு 'காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை'யாக கண்ணில் பட்டது பயிற்சி முகாம்.

அங்கிருந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலையோடு சம்பந்தம் இருக்கிறதா என்று கண்டறிய வழக்கமான- கடுமையான கவனிப்புக்கும் உள்ளாக்கப்பட்டார்கள்.

தாக்குதல் நடத்திய புலிகள் வெற்றிகரமாக தப்பிக்கொண்டார்கள். பாவம்- இவர்களோ தடிகளோடு இருந்து மாட்டி அடிகளும், உதைகளும் பெற்றுக்கொண்டார்கள். நிச்சயமாக தங்கள் புத்திசாலித்தனத்தை நினைத்து வருந்தியுமிருப்பார்கள்.

### புலிகளுக்கு பயிற்சி

ஈழப் புரட்சி அமைப்பாளர்களுக்கும் தமிழ்ீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இரு பகுதியினரும் புரிந்துணர்வோடு இணக்கமாக செயற்படுவது என்றும், புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு பாலஸ்தீன இராணுவப் பயிற்சி பெற்றுக் கொடுப்பது என்றும் முடிவாகியது.

பயிற்சிக்கு அனுப்பும் செலவுகளுக்காக என்று புலிகளிடம் பணம் கேட்டார் இரட்ணா.

65 ஆயிரம் ரூபா புலிகளால் இரட்ணாவிடம் கொடுக்கப்பட்டது.

அக்காலகட்டத்தில் 65 ஆயிரம் ரூபா பெரிய தொகை.

'வங்கிக்கொள்ளைகளில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டால் அரசு தமிழ் பிரதேசங்களில் வங்கிகளை மூடிவிடும். மக்களிடம்தான் நிதி திரட்டவேண்டும்' என்பது ஈழப் புரட்சி அமைப்பாளர்களது கொள்கை.

ஆனால், வங்கிக்கொள்ளை போன்றவற்றால் புலிகள் திரட்டி வைத்திருந்த பணத்தில் உதவிகேட்க, அந்தக் கொள்கை தடையாக இருக்கவில்லை என்பதுதான் வேடிக்கை.

புலிகள் சார்பில் இரண்டுபேரை பாலஸ்தீன விடுதலை இயக்க இராணுவப் பயிற்சிக்கு கேட்டார் இரட்ணா.

புலிகள் இயக்கத் தலைவராக இருந்த உமா மகேஸ்வரன், விச்சுவேஸ்வரன் ஆகியோர் புலிகள் அமைப்பின் சார்பாக பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

புலிகள் இயக்க இராணுவத் தளபதியாக இருந்த பிரபாகரன் வெளிநாட்டு பயிற்சிக்கு செல்ல ஆர்வம் காட்டவில்லை.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். புலிகள் அமைப்பை பொறுத்தவரை பிரபாகரன் மூத்த உறுப்பினராக இருந்தபோதும் உமா மகேஸ்வரன் மத்திய குழு தலைவராக இருப்பதற்கு பிரபா சம்மதித்தார்.

தலைமைப்பதவி மீது தணியாத தாகம் பிரபாவுக்கு இருந்தது என்று கூறப்படும் விமர்சனங்களை அந்த நடைமுறை கேள்விக்குள்ளாக்குகிறது. பிரபாவின் சம்மதமும், விருப்பமும் இல்லாதிருந்திருந்தால் உமா மகேஸ்வரன் புலிகள் அமைப்பின் தலைவராக இருந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குரியதாகும்.

### திருப்பிக் கேட்ட பணம்

பாலஸ்தீன 'அல்பட்டா' இயக்கத்திடம் பயிற்சிக்கு சென்ற உமா மகேஸ்வரனும், விச்சுவேஸ்வரனும் திரும்பிவந்தனர்.

தமக்கு ஒழுங்காகப் பயிற்சி தரப்படவில்லை. முகாமில் வெறுமனே இருக்க வைத்துவிட்டார்கள். எனவே இரட்ணா பணத்தை திருப்பி தரவேண்டும் என்று கேட்டார்கள்.

இரட்ணாவிடம் பணமில்லை. தனது குழுவின் உறுப்பினர்கள் பணம் கேட்டுச் செல்லும்போதே, கரத்தில் மது கிளாசுடன் இருந்து, "போராட்டம் என்றால் பசி பட்டினி இருக்கத்தான் வேண்டும்" என்று உபதேசிப்பவரிடம் பணம் மிஞ்சியிருக்க முடியுமா?

இரட்ணாவின் இவ்வாறான குணாம்சம் ஈழப் புரட்சி அமைப்பாளர் குழுவிற்குள் முரண்பாடுகளை தோற்றுவித்தது.

ஈழப் புரட்சி அமைப்பாளர்களால் உருவாக்கப்பட்டிருந்த ஈழ மாணவர் பொது மன்றம் (GUES) அப்போது ஓரளவு வேலை செய்யத் தொடங்கியிருந்தது.

உள் முரண்பாடுகளை இரட்ணா கண்டு கொள்ளவில்லை. தன்னை சிவப்பு சிந்தனையாளர் என்றவர் தினமும் குடித்து சிந்தனையை தழைக்கச் செய்துகொண்டிருந்தார்.

### ஈழமாணவர் பொதுமன்றம்

ஈழப் புரட்சி அமைப்பாளர்கள் இரண்டு பிரிவானார்கள்.

ஒரு பிரிவு ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) (பாலகுமாரால் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும், கலைக்கப்படவில்லை என்று கொழும்பில் ஒரு சாராரால் கூறப்படுவதும் இந்த அமைப்புத்தான்.)

மறு பிரிவு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்று தன்னை அழைத்துக்கொண்டது. இந்தப் பிரிவினரோடு ஈழ மாணவர் பொது மன்றமும், இரட்ணாவின் கையை விட்டுப்போனது.

இரட்ணாவை இரட்சகராக நம்பி அவரோடு இருந்தவர்களில் முக்கியமானவர்கள் வே.பாலகுமார், சங்கர் ராஜி, சின்னபாலா எனப்படும் பால நடராஜா (தற்போது ஈழநாதம் பத்திரிகை ஆசிரியராக இருக்கிறார்) கைலாஸ், அன்னலிங்கம் ஐயா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இரட்ணாவின் தனிப்பட்ட நடைமுறைகளால் வெறுப்புற்று பிரிந்தவர்களில் க.பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா, சுரேஸ் பிரேமச்சந்திரன், குணசேகரன், பேரின்பராசா ஆகியோர் முக்கியமானவர்கள்.

ஈழ மாணவர் பொதுமன்றம் (GUES) புதுவேகத்துடன் செயற்பட்டது. இதன் மத்திய குழுவில் சிறீதரன், ரமேஷ், செழியன், தயாபரன், சேகர், சிவா, குமார், நடேசலிங்கம் ஆகியோர் முக்கிய மானவர்கள். டேவிற்சன் இந்த மாணவர் அமைப்பின் மத்திய குழுவில் முதலில் இல்லாதபோதும், இந்த அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் முக்கிய பங்கெடுத்தார்.

ஈழ மாணவர் பொது மன்றம் வெளியிட்ட 'ஈழ மாணவர் குரல்' பத்திரிகை தமிழர் விடுதலைக் கூட்டணியை அம்பலப்படுத்தியது. கூட்டங்கள், கருத்தரங்குகள் மூலமும், அப்போது பரபரப்பாக பேசப்பட்ட மாபெரும் சுவரொட்டி பிரசாரம் மூலமும் கூட்டணித் தலைமைக்கு சவாலாக மாறியது ஈழ மாணவர் பொதுமன்றம்.

### கூட்டணிக்கு சாட்டை

இதனால் தலைவர் அமிர்தலிங்கம் ஈழமாணவர் பொதுமன்றம் குறித்து பொது மேடைகளில் காரசாரமாகக் கண்டித்தார்.

ஈழ மாணவர் பொதுமன்றத்தின் அரசியல் வளர்ச்சியை எடுத்துக்காட்ட ஒரு நல்ல உதாரணம் 82ம் ஆண்டு நடைபெற்ற மேதினம்.

ஈழ மாணவர் பொதுமன்றம் யாழ் முற்றவெளி மைதானத்தில் டேவிற்சன் தலைமையில் மேதினக் கூட்டத்தை நடாத்தியது. அங்கே மக்கள் வெள்ளம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது மேதினக் கூட்டத்தை யாழ் நகரசபை மண்டபத்தின் உள்ளே நடத்தியது.

முற்றவெளிக் கூட்டத்தில் டேவிற்சன் இப்படிச் சொன்னார்: "மைதானத்தில் கூட்டம் நடத்தியவர்கள் இன்று மண்டபத்திற்குள் சென்றுவிட்டார்கள். மண்டபத்திற்குள் இருந்த நாம் இன்று மைதானத்திற்கு வந்துவிட்டோம்."

இனி நாம் மீண்டும் 1978ற்கு செல்ல வேண்டியுள்ளது.

(தொடர்ந்து வரும்)

## எக்ஸ்ரே ரிப்போர்ட் (தொடர்ச்சி)

கூறும். மறு தரப்பு மீது குற்றம் சாட்டும். அவ்வாறு நடக்காது என்று நினைக்கக்கூடிய சூழல் இல்லாமையால் தான் சாட்சிக்கு வெளிநாட்டு உதவி தேவைப்பட்டிருக்கிறது.

மேலும் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்- சமாதானம் பற்றிய ஆரவாரமான பேச்சுக்களைவிட அதற்கான முயற்சிகளையே மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

வெறும் சமாதானக் கோசங்களையும் பேச்சுக்களையும், பின்னர் பேச்சு முறிவுகள், ஒரு தரப்புமீது மறு தரப்பு கூறும் குற்றச் சாட்டுக்கள் என்று அனைத்தையும் நீண்ட காலம் கேட்டும் கண்டும் சலித்துப்போன மக்கள் இன்று-

அறிய விரும்புவது, சமாதானத்திற்கு உண்மையாகவே யார் தடை?

அரசால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வை காண முடியுமா? என்ற கேள்விகளுக்கான விடைகளைத்தான்.

மந்திரத்தாலோ, தந்திரத்தாலோ தீர்வுகள் பிறப்பதில்லை. துணிச்சலான அரசியல் நடவடிக்கைகளே தீர்வுகள் பிறக்க ஏற்ற செயற்பாட்டு முறைகளாகும்.

அவை அனைத்து மக்களும் அறிய நடப்பதுதான் மக்கள் தொடர்ந்து ஏமாறாதிருக்கவும், உறுதியான முடிவுகளுக்கு வரவும் உகந்தது.

அரசும் அதனைத்தான் விரும்புகிறது. புலிகள் இன்னும் ஒரு படி மேலே போய் பேச்சு முயற்சிகள் பற்றி அரசைவிட அதிகமாகவே செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள்.

ஒரு தரப்பை மறு தரப்பு கவனத்தோடு அணுகுவதை இவை வெளிப்படுத்தினாலும் கூட மக்கள் தமது எதிர்காலம், தாம் விரும்பும் சமாதானம், அரசியல் தீர்வு என்பவற்றை தமது தலைவர்கள் எவ்வாறு பொறுப்பாக கையாளுகிறார்கள் என்பதை அறிய இந்த பகிரங்கத்தன்மை வழி வகுத்துள்ளது.

பொறுப்பை ஒப்படைப்பது மட்டும் ஜனநாயகத்தில் மக்களுக்குள்ள கடமையல்ல. கொடுக்கப்பட்ட பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் என்று கண்காணிப்பதும் மிக முக்கிய ஜனநாய கடமையாகும். அதனடிப்படையில்தான் மக்கள் தமது தீர்ப்பை வழங்க முடியும்.

ஜனாதிபதி சந்திரிக்கா தான் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற ஆரம்பித்துள்ளார். அவர் சொன்னதைச் செய்வாரா என்று திருவாளர் பொதுஜனம் அவதானித்துக்கொண்டிருக்கிறார்.

புலிகள் 'தமிழீழமே தாகம்' என்கிறார்கள். அந்த தாகத்தை ஈடுசெய்யக்கூடிய வேறு தீர்வுக்கு அவர்கள் உளப்பூர்வமாக ஒத்துழைப்பார்களா என்பதையும் திருவாளர் பொதுஜனம் கவனிக்கத் தொடங்கியிருக்கிறார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சமரசப் பேச்சுக்களைத் தொடர இருதரப்பும் விரும்பும் போர் நிறுத்தம்







## அலசுவது – இராஜதந்திரி

அரச தரப்பினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றதையடுத்து, தேக்க நிலையை அடைந்திருந்த சமரச முயற்சிகள் மீண்டும் உஷாரடையும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன. இந்த ஒரு நாள் சுற்றுப் பேச்சுக்களில் இரு படை அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் இராணுவ ரீதியிலான பின்னணியையே பெரிதும் கொண்டிருப்பதனால் படையினரையும் பேச்சுக்களில் ஈடுபடுத்துவதில் அரசு ஆர்வங்காட்டியிருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் பல்வேறு முக்கிய விடயங்களையும் அணுகியிருக்கக் காணப்படுகின்றன.

இந்த விடயங்களில் 'போர் தவிர்ப்பு' என்பதே அனைவரது கவனத்தையும் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

இதுவரை காலமும் போர் நிறுத்தம் (Cease- fire) என்று மட்டுமே பேசப்பட்டு வந்தது. ஆனால் 'போர் தவிர்ப்பு' (Cessation of hostilities) என்ற புதிய வார்த்தைப் பிரயோகம் இப்பொழுதுதான் வெளிவர ஆரம்பித்துள்ளது.

போர் நிறுத்தமென்ற வார்த்தைக்கும், போர் தவிர்ப்பு என்ற வார்த்தைக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் என்னவென்பதனை போரில் குதித்தவர்களால் மட்டுமே தெளிவாக அறிந்துகொள்ள முடியுமென ஊகிக்க முடிகின்றது.

சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முதற் சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்த பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பேச்சுவார்த்தைகளில் தமக்கிருக்கும் விருப்பத்தை வெளியிட்டு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தில் போர்நிறுத்தம் ஒன்றை திரு.பிரபாகரன் வலியுறுத்தியிருந்தார்.

முதற் சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றபோது சந்திரிகா பிரதம மந்திரியாக இருந்தார்.

சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

இந்த இரு சுற்றுப் பேச்சுக்களுக்குமிடையேயான காலப் பகுதியில் அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருவரோடொருவர் பெருமளவில் பகைமையை வளர்த்துக்கொள்ளும் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

இரு சாராருமே ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்த்தவர்களாகவே இருக்கக் காணப்பட்டனர்.

ஆயினும் அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமும் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக அவதானமாகவே நடந்து கொண்டிருந்தன.

எக்கட்டத்திலும் பேச்சுவார்த்தைகளை முற்று முழுதாக நிராகரிக்கும் கருத்துக்களையோ அல்லது கண்ணோட்டங்களையோ இரு தரப்பினரும் வெளியிட்டிருக்கவில்லை. இதன் மூலம் சமரசப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் அவர்கள் உறுதியாகவே இருந்தனர்.

இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பதாக இரு தரப்பினரும் கடிதப் பரிமாற்றங்களை இரகசியமாக நடத்தியிருந்தனர். இப்பரிமாற்றத்தில், பேச்சுக்களில் ஆராயப்படவேண்டிய விடயங்கள் தொடர்பான முடிவுகளை எடுத்துக்கொண்டதையடுத்தே, நாள்-நேரத்தை நிர்ணயித்து இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை ஒரே நாளில் நடத்தியிருந்தனர்.

அரச தரப்புக் குழுவுக்கு தலைமை தாங்கி பேச்சுவார்த்தைகளை நடத்திய ஜனாதிபதியின் செயலாளர் திரு.பாலபட்ட பெந்தி, பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்டபோது மிகவும் திருப்திகரமான முறையில், இரு சாராரும் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டதாக குறிப்பிட்டார். பேச்சுக்கள் நல்ல புரிந்துணர்வுடன் காணப்பட்டன வென்றும் தெரிவித்தார். ஆயினும் பேச்சுக்களின்போது ஆராயப்பட்ட விடயங்களுக்கு கொழும்பில் வைத்தே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இறுதியாக இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் நிறைவு பெற்றபோது தம்மால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பொலிஸ்காரர்களை- தமது நல்லெண்ணத்தை வெளியிடுவதாகக் கூறி- புலிகள் விடுதலை செய்திருந்தனர்.

போர் நிறுத்தமொன்று கொண்டுவரப்படும் பட்சத்திலேயே உறுதியாக சமரசப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியுமென்பதனை இரு தரப்பினரும் உணர்ந்திருக்கின்றனர். அதனடிப்படையிலேயே போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் இப்போது உருவாகியுள்ளது.

ஆனால் போர் நிறுத்தம் என்பதற்குப் பதிலாக, போர் தவிர்ப்பு (Cessation of hostilities) விடயத்தையே இரு தரப்பினரும் முன்வைத்துள்ளனர்.

இப்போர் தவிர்ப்பு என்ற விடயம், எவ்வளவு தூரம் உறுதியாகக் கடைபிடிக்கப் படுமென்பதை முன்கூட்டியே கூறுவது கடினமானதாகும்.

இருந்தபோதிலும் போர் தவிர்ப்பினைக் கண்காணிக்க இரு தரப்பினருமே கண்காணிப்புக் குழுக்களை உருவாக்க முன்வந்துள்ளனர். இக்குழுக்களில் இரு சாராரது பிரதிநிதிகள் மட்டுமல்ல, வெளிநாட்டு பிரதிநிதிகளும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இனப்பிரச்னை விவகாரத்தில் அரசியலைச் சார்ந்து அமையவேண்டிய வெளிநாட்டு உதவி!

போர் நிறுத்தம், வடபகுதிக்கான பாதை திறப்பு, புனரமைப்பு நடவடிக்கைகள் என்பன குறித்து பேச்சுக்களில் ஆராயப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும் பாதைத் திறப்பு விடயத்தில் இரு தரப்பினருமே- பேச்சுக்களின்போது- உடன்பாட்டுக்கு வராததையே அறிய முடிந்தது.

திரு.பாலபட்ட பெந்தி குறிப்பிட்டதுபோல முன்னேற்றகரமாகவும், திருப்திகரமாகவும் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருப்பின் இரு தரப்பினரும் உடன்பாடுகளை எட்டியிருக்கவே வேண்டும். ஆனால் இறுதி முடிவுகளை கொழும்பிலேயே எடுப்பதாக அரச தரப்பினர் கூறியிருந்தனர்.

இதே வேளை வடபகுதிக்குச் செலவிடும் வகையில் சுமார் 40 பில்லியன், அதாவது 4 ஆயிரம் கோடி ரூபாய்களை அரச தரப்பினர் தமது பேச்சுக்களின்போது முன்வைத்திருந்தனர்.

இப்பணத் தொகை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக எதனையும் தெரிவிக்கவில்லை. அது பற்றி விரிவாக பரிசீலித்து முடிவைத் தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

முன்னைய ஆட்சியாளர்கள் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக முற்றிலும் சுயமாகவே தீர்வொன்றைக் காண்பதில் அக்கறை காட்டியிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் வெளியிட்ட கருத்தொன்றில், தேவைப்படின் வெளிநாட்டு உதவியுடனாவது இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணத் தான் பின் நிற்கப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த வகையிலேயே தற்போது போர் தவிர்ப்பு கண்காணிப்பு கமிட்டிகளில் வெளிநாட்டவர்களும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்று அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

1987ம் ஆண்டு இலங்கை- இந்திய அமைதி ஒப்பந்தத்தையடுத்து முதற்தடவையாக அந்நிய நாடொன்றின் உதவியை இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக நாடியிருந்தது.

இந்தியாவும் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன் அமைதிப் பணி என்று தெரிவித்து பெருந்தொகையான துருப்புக்களை வடக்கு,கிழக்கு பிரதேசங்களுக்கு அனுப்பி வைத்திருந்தது.

ஆனால் இந்தியப்படையினரின் வருகை அமைதி நடவடிக்கையை மையமாகக் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், பிரச்னைகளை மேலும் சிக்கலாக்கி விடுவதாகவே அனைத்துமே காணப்பட்டிருந்தன.

இந்தியா இன்று ஆபிரிக்க நாடான சோமாலியாவிலும் அமைதிப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் தற்போது இந்தியாவினால் சோமாலியாவில் மேற்கொள்ளப்படும் அமைதிப் பணிக்கும், 1987ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டுவரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அமைதிப் பணிகளுக்குமிடையே பாரிய இடைவெளி இருப்பதனையே காணக்கூடியதாக இருக்கின்றது.

அமைதிப்படையென்று கூறிவந்த இந்தியர்கள், அமைதியைக் குறிக்கும் எந்தவொரு காரியத்தையும் கொண்டிருக்கவில்லை. மாறாக புலிகளுடன் பெரும் மோதலில் குதித்து தமது நோக்கத்தையே திசை மாற்றியிருந்தனர்.

இன்று சோமாலியாவில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினர் ஐ.நா.ஸ்தாபனத்தின் ஓர் அங்கமாக- சர்வதேச சட்ட, திட்டங்களுக்கமைய செயற்படுகின்றனர்.

ஆனால் ஓர் அமைதிப்படைக்குரிய அம்சங்களை இந்தியா எவ்வகையிலும் இலங்கையில் அனுசரித்திருக்கவில்லை.

சோமாலியாவில் இன்று அமைதிப்பணிகளின் பொருட்டு இந்தியா பாவித்து வரும் இராணுவ வாகனங்கள் வெள்ளைச் சாயம் பூசப்பட்டு சமாதான நடவடிக்கைகளைப் பிரதிபலிப்பனவாக இருக்கின்றன.

ஆனால் இலங்கையின் வடக்கு-கிழக்கில் இந்தியா பாவித்த இராணுவ வாகனங்கள், சாதனங்கள் என்பன எவ்வகையிலும் அமைதியைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படவில்லை. கூடவே வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் நெடுந்தூர ஆட்டிலறி துப்பாக்கிகளைப் பொருத்தி அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகளிலேயே இந்தியப் படையினர் இறங்கியிருந்தனர்.

எனவே இலங்கைக்கு உதவிக் கரம் நீட்டி அமைதியை ஏற்படுத்த உதவுவது என்று வந்த இந்தியாவின் நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கில் காணப்பட்ட சொற்பமான அமைதியையும் குலைத்து விடுவதாகவே இருந்தன.

இந்நிலையில்- எதிர்காலத்தில் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு குறித்த வெளிநாட்டு உதவியென்பது பெரும்பாலும் அரசியல் சார்ந்ததாக இருக்கவேண்டுமென்பதே வடக்கு-கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

சந்திரிகா அரசு எவ்வகையிலும் இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தர தீர்வொன்றைக் கண்டுவிட வேண்டுமென்பதிலேயே உறுதியாக இருப்பதை ஊகிக்க முடிகின்றது. இந்நிலையில் அவர் குறிப்பிட்டதுபோல உள்நாட்டு முயற்சிகள் தோல்வியடையும் பட்சத்தில் வெளிநாட்டு உதவியுடனாவது இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது இன்றியமையாததாகின்றது.

இவ்வகையில் போர் தவிர்ப்புக் கண்காணிப்புக் கமிட்டிகளில் வெளிநாட்டவர்களையும் சேர்த்துக்கொள்ளப் போவதாக அரசு முடிவு செய்துள்ளமை வரவேற்கத்தக்கதாகவே இருக்கின்றது.

எனவே எதிர்காலப் பேச்சுக்களை முன்னெடுக்கும்போது இப்போர் தவிர்ப்பு என்ற விடயம் உறுதியாக இருக்கவேண்டுமென்பதில் அரசு ஆர்வங் காட்டுவது யுத்த நடவடிக்கைகளில் அதன் நாட்டமின்மையைப் புலப்படுத்துகின்றது.

வடக்கே கடந்த காலங்களில் விமானக்குண்டு வீச்சுக்கள் பரவலாக இடம்பெற்றிருந்தன. ஆனால் அண்மைக் காலங்களில் விமானக் குண்டு வீச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் பாரிய அளவிலான தாக்குதல்கள் இடம்பெறாதிருக்கக் காணப்படுகின்றது.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக உயிரைக் கையில் பிடித்து 'அந்தகார' வாழ்க்கை நடத்திய வடக்கு-கிழக்கு மக்கள் ஒருநிரந்தர விடிவையே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இதே வேளை தென்னிலங்கை மக்களும் முழு நாட்டிலுமே ஒரு நிரந்தர அமைதி ஏற்பட்டு உறுதியான பொருளாதார ஸ்திரப்பாட்டுடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகள் நாட்டில் இடம்பெற வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர்.

ஆயினும் தமது இந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் நாட்டின் தலைவி சந்திரிகா எவ்வளவு தூரம் சாதகமாக நடந்து கொள்வார் என்ற சந்தேகத்தையும் மக்கள் கொண்டுள்ளனர்.

ஏனெனில் சந்திரிகா மேற்கொண்டுவரும் விடுமுறைப் பயணங்கள் அவரின் அரசியல் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விமர்சனங்களையும் கொண்டு வந்திருக்கக் காணப்படுகின்றது.

ஜனாதிபதியாக இருந்தபோதிலும் சந்திரிகாவும் ஒரு குடும்பப் பெண்ணே. எனவே அவருக்கு ஓய்வு-விடுமுறை என்பனவெல்லாம் அவசியம் தேவை.

ஆயினும் இன்றைய நாட்டு நிலவரம் ஒரு தளம்பலான நிலையில் இருக்கும்போது சந்திரிகா விடுமுறைகளில் காலங் கழிப்பதே அவரது போக்கை விமர்சிக்கச் சிலரைத் தூண்டியுள்ளது.

ரோம் நகர் தீப்பிடித்து எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையையும், பிரிட்டனில் பாணுக்கு தட்டுப்பாடு நிலவி மக்கள் விக்டோரியா மகாராணியாரை அணுகியபோது, அவர், கேக்கை உண்ணும்படி கூறியதையும் நாட்டு மக்கள் வரலாற்றுக் கதைகளாகப் படித்தறிந்து வைத்துள்ளார்கள்.

நாட்டில் அரசியல் உறுதிப்பாடு, பொருளாதார உறுதிப்பாடு ஆகியன பேணப்படவேண்டிய தருணத்தில் சந்திரிகாவும், நீரோ மன்னர் போலவோ அல்லது மகாராணி விக்டோரியாவைப் போலவோ இருந்துவிடக்கூடாதென்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

போர் தவிர்ப்பு நடிவடிக்கை மூலம் ஜனாதிபதி சந்திரிகா துணிச்சலான அடி எடுத்துவைத்துள்ளார்.

இரு தரப்பினதும் உளப்பூர்வமான முன்முயற்சிகளைப் பொறுத்தே நாட்டு மக்களது எதிர்பார்ப்பு நிறைவேறும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பிரிட்டிஷ் ஆட்சியைக் குலுக்கிய உளவுச்சதி

## ஒரு அழகி அமைச்சர் டாக்டர்

உண்மைச் சம்பவத்தை தனது பாணியில் தருவது

**ரசிகன்**

சென்றவாரத் தொடர்

இலண்டன் நகர தெருவில் வழுக்கிச் செல்லும் விலை உயர்ந்த காரில் பிரிட்டிஷ் அமைச்சர் ஜோன் புரோஃபூமா.

அமைச்சரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தார் டாக்டர் வார்ட்.

நீச்சல் தடாகம் அருகில் அழகி கீலர். வெகு அலட்சியமாக தனது மேலாடையை களைந்தாள். மார்புகளுக்கு விடுதலை!

அதே அலட்சியத்துடன் மீதி உடைகளுக்கும் விடுதலை கொடுத்தாள்.

பிறந்த மேனியோடு நீச்சல் தடாகத்திற்குள் தாவினாள். குளிர்ந்த நீர் புத்துணர்ச்சியாக இருந்தது.

அமைச்சர் ஜோன் புரோஃபூமாவின் கார் இப்போது அந்த மாளிகை வாயில் வழியாக உள்ளே புகுந்தது.

டாக்டர் வார்ட் ஓடிச்சென்று வரவேற்றார். அமைச்சர் புன்னகைத்தார்.

"இதமான மாலை வணக்கம் கனவானே!"

"நன்றி டாக்டர்!"

டாக்டரின் கண்களில் விஷமம் இருந்தது.

"தாங்கள் நீச்சல் தடாகம் அருகே காற்றாட அமர்ந்திருங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன்"

அமைச்சர் ஏற்கனவே பல தடவை அந்த மாளிகைக்கு வந்திருக்கிறார். எனவே டாக்டர் வார்ட் உள்ளே செல்ல, அமைச்சர் தனியாக நடந்து நீச்சல் தடாகம் நோக்கிச் சென்றார்.

இதமான காற்று அமைச்சரின் முகத்தில்பட சுகமாக இருந்தது.

'ரம்மியமான சூழல்' என்று அமைச்சர் நினைத்துக்கொண்டார். இப்போது நீச்சல் தடாகம் அருகே வந்துவிட்டார்.

அமைச்சர் நீச்சல் தடாகத்தின்மீது விழிகளை எறிந்தார். அடுத்த நொடியே அவரது மூச்சு நின்றுவிடும்போல இருந்தது.

நீருக்கு மேலே உருண்டு திரண்டிருந்த வெற்று மார்புகளோடு அழகி கீலர் அமைச்சரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அமைச்சர் பார்வையை திருப்பிக் கொள்ள முயன்றார். 'எனது தகுதிக்கு இது நாகரீகமில்லை' என்று நினைத்தார். நினைப்பை ஆசை வென்றது. சற்று முன் குளிர்ந்த உடம்பு இப்போது சூடாகிக் கொண்டிருந்தது.

அழகி கீலர் திடீரென்று ஒரு காரியம் செய்தாள்.

அவரைக் கண்டு பயந்ததுபோல விழிகளில் மிரட்சி காட்டியபடி நீச்சல் தடாகத்தைவிட்டு துள்ளி தரைக்கு வந்தாள்.

பிறந்த மேனியோடு இளம்பெண். 18 வயதின் இளமைச் செழிப்புக்களையெல்லாம் தேக்கி வைத்திருந்த அழகான கச்சிதமான உடல்.

அமைச்சருக்கு சுயநினைவு காணாமல் போனது. கட்டுப்பாடு இல்லாமல் கண்கள் படக்கூடாத இடங்களில் பாய்ந்தன. வாளிப்பான கால்களால் அழகி கீலர் ஓடி மறைந்தாள்.

அமைச்சர் அப்படியே நின்றுகொண்டிருந்தார்.

'இதுவரை இப்படியொரு அழகியைப் பார்த்ததே இல்லை. இன்ப நீரூற்று! பருவ விருந்துக்கு குறைவற்ற இளமை! யார் அவள்? யாராயிருந்தாலும் சரி எனக்கு அவள் வேண்டும்!' அமைச்சர் சூடு தணியாமல் நினைத்தார்.

யாரோ அருகில் தொண்டையைச் செருமினர். அமைச்சர் திரும்பிப் பார்த்தார். அங்கே டாக்டர் வார்ட் ஒன்றுமறியாத அப்பாவிபோல நின்றுகொண்டிருந்தார்.

"நாம் உள்ளே செல்லலாமா?"

டாக்டர்தான் கேட்டார். அந்தக் கேள்வியை தட்டி விலக்கிவிட்டு,

"யார் அது?"

"யாரைக் கேட்கிறீர்கள் கனவானே!"

"இங்கே...இந்த நீச்சல் தடாகத்தில் துள்ளியாடும் மீன் ஒன்று கண்டேன் டாக்டர்!"

டாக்டர் விழிகளை விரித்து அமைச்சரைப் பார்த்தார். 'கீலர் கெட்டிக்காரி. அழகை கொட்டிக்காட்டி இரையை இழுத்துவிட்டாள்.' மனதில் நினைத்தார். மகிழ்ச்சியை வெளியே காட்டாமல்,

"ஓ..... அவளா... மிஸ் கீலர்! பிரமாத அழகி. இனிய பெண்!"


"சந்திக்கலாமா?"

டாக்டர் சற்று தயங்குவது மாதிரி நடித்தார்.

"என்ன யோசிக்கிறீர்கள் டாக்டர்!"

"அனாவசியமாக ஆண்களோடு பழக அவள் விரும்புவதில்லை. அதுதான்..."

"உண்மையான ஆண்மகனை அவள் இன்னும் சந்திக்கவில்லையென்று நினைக்கிறேன். அறிமுகம் செய்து வையுங்கள். அதன்பின் பாருங்கள்."



டாக்டர் தலையசைத்தார். இரை வலியச் சென்று வலையில் விழ அடம்பிடிக்கிறது. விடமாட்டாள்; கீலர் வளைத்துக்கொள்வாள். அவளது ஒவ்வொரு இழுப்புக்கும் ஒவ்வொரு இரகசியத்தை அமைச்சர் அவிழ்ப்பார். டாக்டருக்கு நிலைகொள்ளாத மகிழ்ச்சி.

அமைச்சர் அறிமுகம் செய்யப்பட்டார்- அழகி கீலரிடம்.

பாதி மார்புகள் பார்வைக்கு விருந்தாகும் மெல்லிய சட்டை. முழங்காலுக்கு மேலே தொடைகளின் வாளிப்பை வெளிப்படுத்தும் விதமாக ஸ்கேர்ட்.

கைகுலுக்கிக்கொள்ளும்போது அவள் வேண்டுமென்றே அதிகமாக அழுத்தியது போல் இருந்தது.

இருவரும் பேசிக்கொண்டிருக்க டாக்டர் வார்ட் மெல்ல நழுவினார்.

□□

**வ**ரவேற்பறையில் டாக்டருக்காக காத்திருந்தான் சோவியத் உளவாளி இயூஜின் இவானோவ்.

"நீ என்ன எதிர்பார்க்கிறாய் இயூஜின்?"

"மேற்கு ஜெர்மனிக்கு அமெரிக்கா அணு ஆயுதங்களை அள்ளிக்கொடுக்கப் போகிறது."

"தெரியும்."

"என்ன தெரியும்?"

"அள்ளிக்கொடுக்க ஆவலாய் இருப்பது!"

"தெரிய வேண்டியது அது அல்ல டாக்டர்! அந்த ஆயுதங்கள் பற்றிய விபரங்கள். மற்றும் இரகசியங்கள்."

சொல்லிவிட்டு டாக்டரை தன் தீர்க்கமான விழிகளால் ஊடுருவிப் பார்த்தான்.

"கடினமான காரியம்."

"சுலபமான காரியம் என்றால் நான் உங்களை தேடி வந்திருக்க மாட்டேன் டாக்டர்!"

டாக்டர் கொஞ்சம் யோசித்தார்.

"முயற்சிக்கிறேன் நண்பனே!"

"முடித்துத் தருகிறேன் என்று சொல்லுங்கள்!" ஒரு விநாடி தாமதித்து யோசித்து.

"ஓ.கே."

கட்டைவிரல் உயர்த்திக் காட்டினார் டாக்டர் வார்ட்.

"பிரதியுபகாரமாக நான் என்ன செய்யவேண்டும் டாக்டர்?"

"சிம்பிள்."

"என்ன?"

"சோவியத் செல்ல ஒரு விசா- ஒரேயொரு விசா எடுத்துத் தந்தால் போதும்."

இயூஜின் இவானோவ் டாக்டரை சந்தேகத்தோடு பார்த்தான்.

"காரணம்?"

"அந்த சொர்க்க பூமியை ஒரு முறையாவது தரிசித்துவிடவேண்டும் என்பதுதான்!"

இயூஜின் இவானோவ் சிரித்தான்.

"சொர்க்கபுரி உங்கள் மாளிகையில் இருக்கிறதே டாக்டர்."

"என்ன சொல்கிறீர்கள் இவானோவ்?"

"உடல் வலியை எடுக்கும் வித்தையில் டாக்டர் வார்ட் கெட்டிக்காரர். உணர்ச்சிகளின் நெருப்பை பக்குவமாய் அணைப்பதில் டாக்டர் வார்ட் தரும் அழகிகள் கெட்டிக்காரிகள் என்று சொல்லுகிறேன்."

டாக்டர் அமைதியாக அவனைப் பார்த்தார். மிக இயல்பாக கேட்டார்.

"உனக்கும் வேண்டுமா?"

"எனக்கல்ல என் உடலுக்கு!"

இது இரண்டாவது இரை. ஆனால் கொஞ்சம் விவேகமான இரை. கீலர் தான் இவனை மடக்கிப்போட சரியானவள். இவன் விவேகம் அவள் வேகத்தின் முன் தவிடு பொடியாகிவிடும். டாக்டர் நினைத்துக்கொண்டார்.

"இனிய இளைஞனே! இருக்கிறாள். உனக்காகவே ஒருத்தி இருக்கிறாள். கண்டால் வியப்பாய்! தொடப்பட்டால் தொடர்ந்து வருவாய்! விருந்து தரப்பட்டால் விழுந்து கிடப்பாய்! உன்னையே நீ மறந்து போவாய்!"

"சுகங்களின் சுரங்கமா?"

"இல்லை, சொர்க்கத்தின் சுகந்த நீரூற்று. இன்ப லோகத்தின் வாசல் கதவின் சாவி அவள் கரத்தில்."

"யார் அவள்?"

"பெயர் கீலர்."

"குட்! எப்போது சந்திக்கலாம். இப்போதே என்றாலும்..."

"அவசரப்படுகிறாய் இளைஞனே! உன் வயதப்படி! நாளைவா! காலையில் வா! அவளோடு நீந்தலாம்; அவளை நீ வசப்படுத்தினால் சொர்க்க வானில் பறக்கலாம்; சென்றுவா. இனிய கனவோடு இன்றைய இரவு கழியட்டும்."

இயூஜின் இவானோவ் செல்ல, டாக்டர் வார்ட் தனது பிரத்தியேக அறையில் இருந்த தொலைபேசியை சுழற்றினார். மறுமுனையில் இருந்து கேள்வி வந்தது.

"வந்தானா?"

"ஆம்! இப்போதுதான் போகிறான்."

"ஆள் எப்படி?"

"ஆவேசமான இளைஞன். ஆனால் ஆசையும் இருக்கிறது. அனுபவம் தேடும் வயது."

"புரிகிறது. தூண்டில் யார்?"

"உதட்டுச் சுழிப்பால் உலகையே புரட்டக்கூடிய அழகி கீலர்."

"நல்ல தெரிவு. மீண்டும் எப்போது வரச் சொன்னீர்கள் அந்த சோவியத் கரடியை?"

"நாளை காலை! அமைச்சர் இங்குதான் இருக்கிறார்."

"என்ன செய்துகொண்டிருக்கிறார் அந்த கனவான்?"

"அழகி கீலரை சுவாரசியமாக ஆராய்ந்துகொண்டிருக்கிறார்."

"உண்மையாகவா?"

"ஆதாரம் விரைவில் தரப்படும்"

"நன்றி! எம்.ஐ.5 உங்களை வாழ்த்துகிறது."

மறுமுனை ஒய்ந்தது. எம்.ஐ.5 என்பது பிரிட்டனின் உளவுப் பிரிவுகளில் ஒன்று.

டாக்டரோடு பேசியவர் எம்.ஐ.5இன் இயக்குநர் சேர் றோகர் ஹொல்லிஸ்.

எம்.ஐ.5 இயக்குநர் போனை வைத்துவிட்டு யோசித்தார். தான் செய்யப்போகும் காரியம் ஆட்சியை ஆட்டம் காணவைக்கப் போவதை அவர் அறியவில்லை.

□□

**அ**மைச்சர் ஜோன் பூரோஃபூமா அழகி கீலரை அவளது அழகான நெற்றியில் முத்தமிட்டார்.

"சுடுகிறது டியர்."

என்றாள் இதழ்களை அவரை நோக்கி உயர்த்திக்கொண்டு.

"உன்னாலேதான்."

"எனக்கும்தான்!"

"என்ன?"

"சூடு!"

"எங்கே?"

"இங்கேதான்"

அமைச்சர் இழுக்கப்பட்டார் அழகி கீலரால்....

(மறுவாரமும் வரும்)

---

அறிந்து கொள்ளுங்கள் –ஆரோக்கியம் பெறுங்கள்– ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## நோய்க்கும் நிறவெறியா?

இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு போன்ற நோய்கள் வெள்ளை இனத்தவர்களைவிட கறுப்பின மக்களையே அதிக அளவில் தாக்கி வருவதை வைத்திய ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

பலதரப்பட்ட கறுப்பு- வெள்ளை இன மக்களைக்கொண்டு சமீபத்தில் லண்டன் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் நடத்தப்பட்ட பரிசோதனைகளின்போது இவ்வுண்மை தெரிய வந்துள்ளதாக குறிப்பிடும் வைத்திய நிபுணர் டாக்டர் மைக்கல் சிங், மேலும் இது குறித்து கருத்து வெளியிடும்போது:

கறுப்பின மக்களில் பெரும்பாலானோர் சமூக, அரசியல், பொருளாதார தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளமையின் நிமித்தம் அவர்களின் மனோவியல் ஆரோக்கியம் வீழ்ச்சியுற்றுள்ளது. இதனால் அவர்கள் அதிகமான அளவில் நோய்த் தாக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர்.



இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு போன்ற நோய்களுக்கும் மன நிலை ஆரோக்கிய வீழ்ச்சிகளுக்கும் நெருங்கிய தொடர்புபட்ட அம்சமொன்றிருப்பதால் ஆசிய நாட்டுக் கறுப்பின மக்கள் அதிகமாக இந்நோய்களுக்கு ஆளாகின்றனர். ■

## ஐஸ் கட்டிபோட்டு குடிநீர் அருந்துகிறீர்களா?

**கொ**திக்க வைத்தாறிய நீரை அருந்துவதன் மூலம் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறதென்பதை நாம் அறிவோம்.

ஆனால் சிலர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீருடன் ஐஸ் கட்டியை சேர்த்தோ அல்லது குளிரூட்டப்பட்ட நீர் அருந்துவதையோ பழக்கமாக்கிக்கொண்டுள்ளனர். இவ்விதம் குளிரூட்டப்பட்ட நீரை அருந்துவதன்மூலம் குளிர்ச் சூழலில் பக்டீரியாக்கள் இறந்து விட்டிருக்கலாம் என்று இவர்கள் நினைத்திருக்கக்கூடும்.



எனினும் அப்படி நடப்பது கிடையாது! கடும் குளிரைக்கூட தாங்கி வாழும் ஆற்றல் பக்டீரியாக்களுக்குள்ளது என்று மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடும் குளிர்த் தாக்கங்கள் பக்டீரியாக்களின் இனப் பெருக்கத்தை மாத்திரமே கட்டுப்படுத்துகின்றன.

எனவே கொதிக்க வைத்தாறிய நீருடனோ அல்லது சுத்திகரிக்கப்பட்டிருக்கும் குடிநீருடனோ ஐஸ் கட்டியை சேர்ப்பது, கறந்து வைத்துள்ள பால் குடத்தில் ஒரு கை மாட்டுச் சாணத்தை அள்ளிப் போடுவதற்கு சமமான செயற்பாடாகும்.

## சிக்கலைத் தவிர்க்க சில வழிகள்

**வ**யது வித்தியாசமின்றி மலச் சிக்கல் குறைபாடு இன்று பல மனிதர்கள் மத்தியிலும் நிலவி வருகின்றது.

மலச் சிக்கலுக்கான காரணிகளில் சில-

- உடலுக்கு தேவையான அளவு நீர் உட்கொள்ளப்படாமை.
- (உடல் உழைப்பற்றோர்) உடற்பயிற்சி செய்யாதிருத்தல்
- உடல் பருமனாக அமைந்திருத்தல்
- அதிக அளவில் ஆகாரங்களை உட்கொள்ளுதல்
- போதிய அளவு காய்கறி, கீரை, கனி வகைகள் உட்கொள்ளமை.

மேற்கூறியவை தவிர்ந்து மேலும் சில காரணிகளாலும் மலச் சிக்கல் ஏற்படக்கூடும். எனினும் இவற்றைத் தவிர்த்துக்கொள்வதற்கு இயற்கையான சிகிச்சைமுறை இருக்கிறது.

காலை படுக்கையைவிட்டு எழுந்தவுடன் பாத்திரம் ஒன்றில் நீரைச் சுடாக்கி இரு போத்தல் அளவில் தாங்கும் வெந்நீரை பொலித்தீன் உறையில் இட்டு வயிற்றுப் பகுதியிலும் சுற்றுப் புறத்திலும் ஒத்தணமிடுவதன்மூலம் அப்போது ஏற்படும் மலச்சிக்கலைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

இச் சிகிச்சை மேற்கொண்டு இரு மணித்தியாலத்திற்கு பின்பு காலை ஆகாரம் அருந்துவது சிறந்த அனுகூலத்தைத் தரும். இயற்கை ரீதியான இச் சிகிச்சைமுறை எந்தப் பக்க விளைவையும் ஏற்படுத்துவது கிடையாது.

## கட்டுப்படாத பக்டீரியாக்கள்

உலகில் தற்போது பாவனையிலிருந்து வரும் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்குக் (Antibiotic) கூட கட்டுப்படுத்த முடியாத ஒரு புதுவகை பக்டீரியாக்கள் தோன்றியுள்ளதை சமீபத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உலக மக்களை எச்சரித்துள்ளார்கள்.

இவ் விஞ்ஞானிகள் மேலும் இது பற்றி குறிப்பிடுகையில், ஏற்கனவே, நுண்ணுயிர்க்கொல்லிகளுக்கு (Antibiotic) கட்டுப்படாதவைகளென இனம் காணப்பட்டிருந்த "எசினிடோபெக்டர் புமானி" (Acinotobactor Bumani) எனப்படும் பக்டீரியாக்களைவிட இவை வலிமை வாய்ந்தவையாகவுள்ளனவென்று தெரிவித்துள்ளார்கள்.

## கருப்பைப் புற்றுநோய்

**பு**கை பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையான பெண்களுக்கும்; தொடர்ந்து கர்ப்பத்தடை மாத்திரைகளை உட்கொண்டு வரும் பெண்களுக்கும் கருப்பைப் புற்றுநோய் சுலபமாக ஏற்படுகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

புகை பிடிப்பதனால் அதன் மூலம் உடலினுள் செல்லும் ஹைதரோ கார்பனின் சேர்க்கை, உடலில் உள்ள நுண்ணுயிர்க் கணயங்களின் தொழிற்பாட்டினைச் சீர்குலைத்து விடுகிறது. இதேபோன்று கருத்தடை மாத்திரைகளிலுள்ள 'ஈஸ்ட்ரஜன்' எனப்படும் ஹோமோன்கள், கருப்பையில் இயல்பாகச் சுரக்கும் ஹோமன்களை நிலை குலையச் செய்து விடுகின்றன. இதனால் எதிர்ப்புச் சக்தி இழக்கப்பட்டு புற்றுநோய்க் கிருமிகள் வளர்ச்சி அடைய ஏதுவாகிறது. ■

# தகவல் பெட்டி






## பெறு மதியான இலவசம்

இலவச இணைப்பு வழங்குவது தெரிந்த சமாச்சாரம்தான். இலவச இணைப்பை சொல்லியே விளம்பரம் செய்வதும் விற்பனையை பெருக்குவதும் பொருள் உற்பத்தியாளர்கள் பலரால் செய்யப்படுவது. ஆனால் ஜப்பானிலுள்ள ஹோண்டா வாகன தயாரிப்பாளர்கள் வழங்கியுள்ள இலவச இணைப்புத்தான் இதுவரை வந்த இலவச இணைப்புக்களில் பெறுமதியானது. ஒரு ஹோண்டா 'சிவிக்' கார் வாங்கினால் அதனோடு இலவச இணைப்பாக ஹோண்டா ஸ்கூட்டர் வழங்குகிறார்கள். காரின் விலை 12 இலட்சம். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறு விளம்பரம் செய்து விற்பனையை படு ஜோராக நடத்துகிறார்கள்.

# உயிர் பிரிந்தது 2000 ஆண்டுகளுக்கு முன்

# உறுப்புக்கள் சிதையாமல் இப்போதும் இருக்கும் உடல்

ரோமாபுரியிலுள்ள நகரமான பொம்பீக்கு சமீபமாக விருந்த வெசுவியஸ் எரிமலை கி.பி. 79ல் குமுறியது. கொதிக்கும் எரி குழம்பினை சுற்று வட்டாரம் அனைத்தும் அள்ளி வீசியது. நகரும் சுற்றுச் சூழலும் அழிந்தன. பல்லாயிரக்கணக்கான மக்களும் அழிந்தனர். எரிமலைச் சாம்பல் அனைத்தையும் மூடிவிட்டது.

மறைந்துபோன பொம்பீ நகரின் வடமேற் புறத்தில் 1984ல் அகழ்வாராய்ச்சி நடத்திய ஆராய்ச்சியாளர்களிடம் அகப்பட்டாள் ஒரு பெண். 1915 ஆண்டுகளுக்குமுன் சாம்பல் குவியலுள் அமிழ்ந்துபோன அந்நங்கைக்கு 30 முதல் 35 வயதுக்குள் இருக்கும்.

உறுப்புகள் எதுவும் சிதையாமல், எரிமலைக் குழம்பு தாக்கி இறுதி மூச்சினை விடும்போது எந்த நிலையிலிருந்தாளோ, அதே நிலையில் காணப்பட்டாள்.

1993ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த உடல் அவுஸ்திரேலியா-சிட்னிக்குக் கொண்டு வரப்பட்டு சிட்னி பல்கலைக்கழகத்தில் அகழ்வாராய்ச்சி மற்றும் மானிடவியல் துறைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் டாக்டர் எஸ்தலே லேசர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நவீன 'ஸ்கானிங்' முறைகளைப் பயன்படுத்தி டாக்டர் லேசர் இந்த உடலை ஆராய்ந்துள்ளார். இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயர் 'ஒப்லோன் ரிஸ்' என்பதனால் இப்பெண்ணுக்கும் இதே பெயரையே சூட்டியுள்ளனர்.

"கொதிக்கும் எரி குழம்பால் தாக்குண்டபோது முதலில் அதிர்ச்சிக்குள்ளாகி வாயைத் திறந்து இறுதி மூச்சினை விட்டிருக்கிறார். அதே வேளையில் அவர் பட்ட வேதனையும் அவருடைய அங்கங்களின் துடிப்பும் அப்படியே இன்றும் அவருடைய உடலில் பிரதிபலிக்கின்றது. வாய் திறந்தாப் போலும் கை கால்கள் வேதனையில் துடிப்பதுபோன்றும் அப்படியே தத்ரூபமாக அமைந்துள்ளன. தாக்குண்டு இரு நிமிடங்களுள் அவளுடைய உயிர் பிரிந்துள்ளது.

"இறப்பதற்குமுன் இப்பெண் சுகதேகியாக இருந்துள்ளார். ஆனால் நான்கு பற்களை இழந்திருந்திருக்கிறார். காலத்தூல் இவருடைய தசை மற்றும் உள்ளுறுப்புகள் சி,ைதந்துவிட்டன. எனினும் பற்களும் எலும்புகளும் உரிய இடத்திலேயே உள்ளன. ஆனால் உடல் அப்படியே கெட்டிப்பட்டபோதும் உறுப்பம்சங்கள் சிதைவுறாமல் காணப்படுகின்றன."

இவ்வாறு டாக்டர் லேசர் தனது கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

## கப்பென்று பிடித்த கமெரா

மூன்றும் சிங்கக் குட்டிகள். மத்தியில் இருக்கும் குட்டி சற்று ஆவேசமானது. இப்போதே கர்ஜிக்கத் தொடங்கிவிட்டது. கர்ஜிக்கும் காட்சியை கமெரா சப்பென்று படமாக்கிவிட்டது. அமெரிக்க ஃபிலடெல்பியா மிருகக் காட்சிசாலையில் பதிவு செய்யப்பட்ட காட்சி இது. படத்தில் வெள்ளை இன சிங்கக் குட்டியாரும் ரொம்ப சாந்தமாக இருக்கிறார் பாருங்கள்.





## ஜடையா..இது ஜடையா?!

தலைவாரிப் பூச்சூடி விடும் அம்மாக்கள் இந்த படத்தைக் கண்டு பிரமித்துவிடுவார்கள். 30 அங்குல நீளமுள்ள ஜடையை இவ்வாறு அந்தரத்தில் நிற்க வைக்கும் சிகை அலங்காரமுறைக்கு நீண்டநாள் முயற்சி தேவைப்பட்டதாம். இதனால் விநோத சிகை அலங்காரப் போட்டியில் முதற்பரிசை தட்டிக்கொண்டார். சிறுமியின் பெயர், எரிக்கா டைக்ஹவுஸ். மிச்சிக்கனில் இரண்டாம் வகுப்பு படிக்கிறார்.

www.padippakam.com





## திரையுலகிலும் முதல்வர்

**கிசு-கிசு திமுல்** பிரிந்திருக்க முடியவில்லை

கவர்ச்சிப் புயல் என்று இப்போது அழைக்கப்படும் மூன்றெழுத்து நடிகை அவர். 'மா' என்ற எழுத்தில் அவரது பெயர் முடிகிறது. அவருக்கும் இந்தி நடிகர் ஒருவர் மகனுக்கும் இடையில் படு நெருக்கம். ஒரு நாள் கூட பிரிந்திருக்க முடியாது என்று புலம்புகிறாராம் நடிகரின் மகன்.

### 'எப்படிப்பட்ட ஆண்களையும்!'

முன்னாள் 'மிஸ் இந்தியா' மது சாப்ரே இந்திப் படங்களில் தான் நடிக்கப்போகிறார். படு கவர்ச்சியாக போஸ் கொடுப்பதில் பிரபலமான மது சாப்ரே எதையும் மறைக்கப்பட்டார். அதாவது மனதில் உள்ளதை பட்டென்று கொட்டிவிடுவார். லேட்டஸ்டாக அவர் கொட்டியிருப்பது இது எப்படிப்பட்ட ஆண்களையும் திறமையாகக் கையாள எனக்குத் தெரியும். வயதான ஆண்கள் 'சைட்' அடித்தால்கூட எனக்கு எரிச்சல் வருவதில்லை. 'ஐ ஆம் சொரி. எனக்கு இன்ரஸ்ட் இல்லை' என்று பதமாக எடுத்துக்கூறி விடுவேன்' என்கிறார் எதற்கும் துணிந்த மதுசாப்ரே.

### நிரோசாவின் காதல்

நடிகை நிரோசா ராம்கியுடன் கிசுகிசுக்கப்பட்டவர். ராம்கி விலகிப்போக தொடங்கிவிட்டார். பொறுத்திருந்து சலித்துப்போன நிரோசா இப்போது தெலுங்குப் பட தயாரிப்பாளரை பகிரங்கமாகக் காதலிக்க தொடங்கிவிட்டார். விரைவில் திருமண செய்தி வரலாம்.

எம்.ஜி.ஆர். வாழ்க்கை வரலாற்றை 26 வாரத் தொடராக தமிழ் நாட்டில் ராஜ் ரி.வி. நிறுவனம் ஒளிபரப்புச் செய்கிறது. பிரபல இயக்குநர் கே.சங்கர் இதனை தயாரித்துள்ளார். தமிழக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பேட்டிகளை நன்றிகூட சொல்லாமல் ஒளிபரப்பு செய்யும் நம்மூர் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் எம்.ஜி.ஆர். பற்றிய தொடரை அனுமதியோடு ஒளிபரப்பலாமே. செய்வார்களா?

### எம்.பி. நடிக்கிறார்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் 'தொண்டன்' படத்தில் நடித்துவருகிறார். இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அன்பரசு காதல் நெஞ்சங்கள் என்ற படத்தில் நடித்துவருகிறார். அரசியல்வாதிகள் நடிப்பதில் சூரர்களே! என்பதை படத்தைப் பார்த்துவிட்டுத்தான் சொல்லவேண்டும்.

நெப்போலியன்-கஸ்தூரி
படம்-சின்ன மணி

வந்தவன் தவழ
கண்டவர் கவிழ்ந்தனர்
ஆசையெனும் கடலில்



### மன்னன் வயது 78

தமிழ் திரையுலகை ஆண்டுவிட்டுத்தான் தமிழகத்தை ஆளத்தொடங்கினார் எம்.ஜி.ஆர்.

**சாதனை மன்னனின் பிறந்த நாள்**

17.1.1917

மக்கள் மனதில் வாழும் மக்கள் திலகத்திற்கு வயது 78



ரோஜா
படம்-மக்களாட்சி

### மோகனாவின் கனவு

'வீட்ல விசேஷங்க' படத்தின் பின்னர் வீட்டில் இருந்த மோகனாவுக்கு இப்போது நல்ல நேரம். 'மணி-ரத்னம்' படத்தை அடுத்து 'மஞ்ச விரட்டு' பொங்கல் வெளியீடாக வருகிறது. கைவசம் 10 படங்கள் இருக்கிறதாம். 95இல் பிசி ஹீரோயின் ஆகிவிடுவேன் என்று சொல்லி வருகிறார் மோகனா.

### 40 ஆண்டுக்குப்பின்

40 ஆண்டுகளுக்கு முன்னர் மதுரை வீரனாக நடித்தவர் எம்.ஜி.ஆர். பொங்கலுக்கு வெளியீடான வேலுச்சாமி படத்தில் மதுரை வீரனாக முக்கிய காட்சியில் நடித்திருக்கிறார் சரத்குமார். 'நாட்டாமை' படம் வசூலில் சாதனை படைத்திருப்பதால் 'வேலுச்சாமி' படமும் பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகிறது.

### மறக்கமுடியாத நாட்கள்

பிரபல இந்தி நடிகர் ராஜேஷ் கன்னாவுக்கும் நடிகை டிம்பிள் கபாடியாவுக்கும் பிறந்தவர் டுவிங்கிள் கன்னா. டுவிங்கிளுக்கும் அபிஷேக் கபூருக்கும் இடையில் தீவிரக் காதல். 'அபே மோக பட்' படத்தில் நடித்தபோதுதான் காதல் மலர்ந்ததாம். படத்தில் நடித்தபோது பழகிய நாட்கள் இருவருக்குமே மறக்கமுடியாத நாட்களாம்.

### பொங்கல் ரேசில் புதிய படங்கள்!

இந்த பொங்கல் வெளியீடாக பந்தய களத்திற்கு வரும் முக்கிய படங்கள். பாட்சா (ரஜனி-நக்மா) எங்கிருந்தோ வந்தான் (சத்யராஜ்-ரோஜா) கட்டுமரக்காரன் (பிரபு-அஞ்சலி) வேலுச்சாமி (சரத்குமார்-வினிதா) கருப்பு நிலா (விஜயகாந்த்-குஷ்பு) சதிலீலாவதி (கமல்-கோவை சரளா) ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி (பாக்யராஜ்-மீனா) கர்ணா (அர்ஜுன்-வினிதா) நான்பெத்த மகனே (நிழல்கள் ரவி-ஊர்வசி, ராதிகா) சின்னமணி (நெப்போலியன்-கஸ்தூரி) மஞ்சுவிரட்டு (முரளி-மோகனா) சாம்ராட் (ராம்கி-வினிதா) ராசையா (பிரபுதேவா-ரோஜா) ஆணழகன் (பிரசாந்த்-கனகா) பந்தயக் களத்தில் தாக்குப்பிடிக்க வேண்டுமானால் இரசிகர்கள் மனதில் இடம்பிடிக்க வேண்டும்.



கமல்-கோவை சரளா
படம்-சதிலீலாவதி

### 8 நிமிடப் பாடல்

'எங்கிருந்தோ வந்தான்' படத்தில் 8 நிமிடப் பாடல் ஒன்று இடம்பெறுகிறது. சங்கீத வித்வான் பாணியில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் இப்பாடலை பாடியிருக்கிறார். இந்தப் பாடல் காட்சியில் சங்கீத வித்வானாக நடிக்கிறார் சத்யராஜ்.

### முத்துக்காளை ரெடி

தீபாவளிக்கு வரும் என்று எதிர்பார்க்கப் பட்ட படம் 'முத்துக்காளை' இப்போது பொங்கல் வெளியீடாக கொண்டுவர முயற்சித்திருக்கிறார்கள். கார்த்திக்-சௌந்தர்யா ஜோடியாக நடித்துள்ள படம்.

### முகப்பில்

பாக்கியராஜ்

சிந்துஜா

### ராசாதான் ஜனவரியில்

ஜனவரியில் படத்தை வெளியிட்டு விடவேண்டும் என்று சுறுசுறுப்பாக இருக்கிறார் ராஜ்கிரண். அவரது 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் கதாநாயகிகளாக நடிப்பது ரூபஸ்ரீ, சங்கீதா. 'என் ராசாவின் மனசிலே' 'அரண்மனைக் கிளி' போன்ற வெற்றிப் படங்களை வழங்கியவர் ராஜ்கிரண்.

### கைகொடுத்த கருத்தம்மா!

சொந்த வாழ்க்கை சோகத்தால் மனமுடைந்திருந்த நடிகை சரண்யாவுக்கு 'கருத்தம்மா' படம் கைகொடுத்திருக்கிறது. 'கருத்தம்மா' படத்தில் நடித்ததை அடுத்து புதிய படங்கள் சிலவற்றில் ஒப்பந்தமாகியுள்ளார் சரண்யா. நாயகன் படத்தில் கமலின் ஜோடியாக நடித்த சரண்யாவை ஞாபகம் இருக்கிறதல்லவா?

### வாடகை வீடு

நடிகர் நெப்போலியன் சொந்தமாக வீடு வாங்கி படப்பிடிப்புகளுக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார். நடன இயக்குநர் புலியூர் சரோஜாவிடம் இருந்து வாங்கிய வீடு.

குஷ்பூவின் [illegible]

கோலங்க[illegible]

இசை[illegible]

நடிப்ப[illegible]

நிஜ[illegible]

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உடலுக்கு அழகு உகந்த ஆடை!

# வண்ண வண்ணக் கோலங்கள்

நம் கண்கள் எப்போதும் பலவித மான வர்ணக் கோலங்களையே பார்க்கின்றன. வர்ணங்களில் எத்தனையோ வகை உண்டு. ஆனால் அவையெல்லாமே தனித்துவமானவையல்ல.

ஏழு வர்ணங்கள் தான் நம் கண்களில் தோன்றுகின்றன. இருப்பினும் உண்மையில் சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் ஆகிய வர்ணங்களே மூல வர்ணங்களாகும். வெண்மை மற்றும் கருமையை வர்ணங்களாகக் கணக்கிடாவிட்டாலும், மூல வர்ணங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பலவிதமான கூட்டு வர்ணங்கள் தோன்றுகின்றன. அத்துடன் கறுப்பும் வெள்ளையும் இணைந்தும் பல நூற்றுக்கணக்கான துணை-இணை வர்ணங்கள் தோன்றுகின்றன.

எல்லா வர்ணங்களும் எல்லாருக்குமே பிடிப்பதில்லை. ஒருவருக்கு சிவப்பு வர்ணத்தில் பிரீதியிருந்தால் மற்றுமொருவர் பச்சை வர்ணத்தை மோகிப்பார். ஆண்களை விட பெண்கள் தான் வர்ணங்களின் வகைகளைப் பிரித்து, அவற்றின் வசீகரத்தில் மயங்குவர்.

இதனால்தான் பெண்கள் தங்கள் ஆடைஅணிகளுக்காக வண்ண வண்ணத் துணிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.



பொருத்தமான வர்ண ஒற்றுமைகளை (MATCHING COLOURS) பெண்கள் இயல்பாகவே தேர்ந்தெடுக்க வல்லவர்கள்.

காலை, பகல், மாலை, இரவு ஆகிய காலநிலைகளை அவதானித்து அந்தந்த வேளைக்குரிய வர்ண உடைகளைப் பயன்படுத்தும் பாங்கினையும் பல பெண்கள் கணித்து வைத்திருக்கின்றார்கள்.

பார்ப்பவர் மனத்தில் பரவசத்தை ஏற்படுத்தவோ அல்லது இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தவோ அல்லாது போனால் அவர்களைத் தம்பால் கவர்ந்திழுக்கவோ தான் இன்று ஆடை அணி அலங்காரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தன்னைப் பார்ப்பவர் எவரும் தன் மீது ஒரு மதிப்பினை வைக்கவேண்டும் என்பதற்காகவேதான் இன்று உடைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

தனது உடலின் கட்டமைப்பு, உடலின் வர்ணம், சாயல் போன்றவற்றின் தன்மையினை அனுசரியாமல் தன் கண்ணைக் கவரும் வர்ணத் துணியைத் தேர்ந்தெடுத்து ஆடை தயாரித்து அணிவதனால், எதிர் பார்ப்புக்கு மாறான பலனே கிடைக்கும்.

கருமை நிறம் கூடிய ஒரு பெண் கடும் சிவப்பு அல்லது கடும் பச்சை வர்ணச் சேலையை உடுத்திக்கொண்டால் எவ்வாறிருக்கும்? ஆகவே, ஆடைகளுக்கான துணிகளைத் தேர்ந்தெடுக்கும்போது தனது நிறத்தையும் சாயலையும் நிதானமாகச் சீர்தூக்கிப் பார்த்து தெரிவு செய்யவேண்டும். எதிர்வீட்டுப் பெண் எலுமிச்சை நிறத்தில் புடவை கட்டிக்கொண்டிருப்பது எடுப்பாக இருக்கிறதே என்பதற்காக அந்த வர்ணப் புடவை கட்டுவதற்குப் பொருத்தமில்லாத உடல்வாகு கொண்ட பெண் அதே வர்ணத்தில் சேலை கட்டுவது அவலட்சணமாகி விடலாம்.

தவறான வர்ணத்தைத் தெரிவு செய்வதனால் தீய விளைவுகள் ஏற்படுகின்றன. பொருத்தமில்லாத ஆடை அணிகளை அணிவதனால், அணிபவரிடம் மறைந்து கிடக்கும் தீய அம்சங்கள்தான் வெளிப்படும் என்று ஜேர்மனியிலுள்ள பிரபலமான 'பௌஹௌஸ் ஓவியக் கலாசாலை' ஆசிரியரான ஜோஹான்னஸ் லிற்றன் கூறுகிறார். இவர் தலைசிறந்த ஓவியருமாவார்.

பொருத்தமற்ற வர்ண உடைகளை அணிவதனால், ஓர் இள மங்கை வயது முதிர்ந்த பாட்டியாகத் தோற்றமளிக்க நேரிடும். மனச்சோர்வுடன் களைப்படைந்துள்ள தோற்றத்தினையும் தரும்.

ஒருவருடைய உடலுக்குப் பொருத்தமான வர்ண ஆடையினை அணியும்போது அணிபவருக்குத் தன்னை அறியாமலே ஓர் உற்சாகம் தோன்றுகிறது. அவருடைய அங்கங்களிலோ முகத்திலோ உள்ள குறைபாடுகள் வெளிப்பட வாய்ப்பேற்படாது. அது மட்டுமல்லாமல் பார்ப்பவர் எவரும் இவருடன் வந்து பழகுவதற்கான அவாவினையும் தோற்றுவிக்கும்.

லேடீஸ் ஸ்பெசல்

# அணியும் ஆடை எந்த வண்ணம் அதில் தெரியும் உங்கள் எண்ணம்!



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான வர்ணத்தில் நாட்டமிருக்கும் என்பதை முன்பு அறிந்துகொண்டோம். ஒவ்வொரு வர்ணத்தையும் விரும்புபவர் எத்தகைய குண நலனுடையவர் என்பதனை இனிப் பார்க்கலாம்.

**சிவப்பு:**

செம்மையை விரும்புபவர்கள் புரட்சிகரமான நோக்கமுடையவர்கள் என்பது பொதுவான கருத்தாகும். எவரையும், எத்தொலைவிலிருந்தாலும் கவர்ந்திழுக்க வல்லது சிவப்பு வர்ணம். இந்த வர்ணத்தை விரும்பி, இவ்வர்ண உடைகளை அணிவதில் நாட்டம் கொண்டோர், தன்னை பிறர் தனிச் சிறப்புடன் மதித்து கௌரவிக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடையவராக இருப்பார். அநீதிகளை எதிர்த்துக் குரல் கொடுக்கத் தயங்க மாட்டார்.


தன்னிடம் ஒருவகை உத்வேகம் இருப்பதாக வெளிக்காட்டிக் கொள்ளவே தான் இந்த வர்ணத்தினைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவே கருதுவார். சிவப்பு வர்ணத்தில் நாட்டம் கொண்டவர்கள் காம இச்சையில் அதிக நாட்டம் கொண்டவராகவும் இருப்பார்.

**மஞ்சள்:**

புத்தி ஜீவிகளும் வேதாந்திகளும் மஞ்சள் வர்ணத்தின்மீது நாட்டம் கொண்டவர்கள். அதிகாரத்துடன் மற்றவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்போரும் இந்த வர்ணத்தில் வாஞ்சை வைத்திருப்பார்கள். சூரியனின் பார்வையுடைய இவர்கள், ஒளியினையே விரும்புபவர்கள்; மஞ்சள் உடைகளை விரும்பி அணிவர். மங்கள காரியங்களையும் மஞ்சள் வர்ணமே குறிக்கும்.

**நீலம்:**

நீல வர்ணத்தில் நாட்டம் கொண்டவர்கள் ஆன்மீக ஈடுபாடு கொண்டவர்களாக விளங்குவர். அமைதியான போக்கை விரும்புவார்கள்; சமாதானத்தில் ஈடுபாடு கொண்டவர்களாகத் தென்படுவீர்; மனித உணர்வுகளுக்கு மதிப்பளிப்பார்கள். எவரையும் அச்சுறுத்தாத இவ்வர்ண உடைகளை விரும்புவோர் நாணயமுடையவர்களாகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும் இருப்பார்கள்.



வர்ணங்களில் பிரதானமானவை சிவப்பு, மஞ்சள் மற்றும் நீலம் ஆகியவையே! ஏனைய வர்ணங்கள் யாவும் இம்மூல வர்ணங்களுடன் இணைந்தனவே. இத்தகைய வர்ணங்களை விரும்புவோரின் குணாதிசயங்களை அடுத்த வாரத்தில் பார்க்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### கரட் சூப்

**தேவையான பொருட்கள்:**

வெங்காயம் (பெரியது)-1
கரட்- 1/4 கிலோ
பச்சை மிளகாய்-1
புதினா இலை-5
இஞ்சி-ஒரு சிறு துண்டு
வெண்ணெய்-3 தேக்கரண்டி
சீஸ்-ஒரு சிறு துண்டு
உப்பு-தேவைக்கேற்ப
மிளகு-தேவைக்கேற்ப
சினி- தேவைக்கேற்ப

**செய்முறை:**

வெங்காயத்தையும், கரட்டையும் தனித் தனியாகத் துருவவும். இஞ்சி, மிளகாய், புதினா இலை மூன்றையும் நசுக்கி ஒரு மெல்லிய துணியில் கட்டவும். வாணலியில் வெண்ணெயை உருக்கி, வெங்காயத்தை சிறிய நெருப்பில் வதக்கவும். ஒரு நிமிடம் கழித்து கரட்டைச் சேர்க்கவும். இரண்டு நிமிடங்கள் காய்கறியின் நிறம் மாறாமல் வதக்கி, மூழ்கும்வரை தண்ணீர் சேர்த்துக் கட்டிய இஞ்சி, மிளகாய், புதினா இலை துணிமூட்டையை போடவும்.

பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி ஆற வைத்து வேறொரு குளிர்ந்த நீர் உள்ள கிண்ணத்தில் வைக்கவும். குளிர்ந்தவுடன் மிக்ஸியில் அரைத்து வடிகட்டி. தேவையான தண்ணீர் சேர்த்துச் சூடாக்கவும். உப்பு, சீனி, மிளகுதூள் சேர்க்கவும். பரிமாறும்போது சீஸ் துண்டைத் துருவி சேர்க்கலாம்.


## நீங்களும் தைக்கலாம் எஸ்-எஸ்

### மகளிருக்கான இரவுநேர உடை

**தேவையான அளவு:**
2 1/4மீற்றர் துணி

**வெட்டும் முறை:**


2 1/4 மீற்றர்துணியில் 1/4 மீற்றரை தனியாக வெட்டி எடுக்கவும். வெட்டி எடுக்கப்பட்ட 1/4 மீற்றர் துணியினை சரிசமனாக மடித்து 12 அங்குலம் அளந்து A,B,C,D என அப்பகுதிகளில் குறித்துக் கொள்ளவும். (முன் பக்கம் 12 அங்குலமாயின் அதேபோன்று பின்பக்கமும் 12 அங்குலம் இருக்கவேண்டும்) குறிக்கப்பட்ட துணியில் Aயிலிருந்து 4 அங்குலம் உள்நோக்கி அளந்து Eஎனக் குறித்துக் கொண்டு A,B பகுதியை மீண்டும் சரிசமனாக மடிக்கவும். A,E பகுதியை 4 அங்குலம் வெட்டிய பின்னர் எஞ்சிய பகுதியை அதாவது 4 அங்குலத்தை படம் 1இல் காட்டியபடி வட்டமாக வெட்டவும். அவ்வாறு வெட்டிய பின்னர் A,E பகுதியின் A பகுதியை 1/2 அங்குலம் பதித்து வெட்டவும். மடிக்கப்பட்ட A,C பகுதியை வளைவாக வெட்டவும். அரைவட்ட வடிவில் இவ்வடிவம் தோன்றும்.




படம்.1

இவ்வடிவத்தை விரும்பாவிடில் படம் 3ன்படி வடிவத்தினை இதே அளவில் இம்முறையின்படி வெட்டவும். தோள்மூட்டுப் பகுதி 4 அங்குலம் இருத்தல் போதுமானது.


அவ்வாறு மேல் பகுதியை வெட்டிக் கொண்ட நாம் கீழ்ப்பகுதியினை வெட்டுவோம். எஞ்சிய 2 மீற்றர் துணியினை எடுத்து சரிசமனாக மடித்துக்கொள்வோம். மடித்த அப்பகுதியை மீண்டும் அகலப்பக்கமாக மடிக்கவும். மடித்த அப் பகுதிகளில் A,B,C,D எனக் குறித்துக்கொண்டு படம் 2இனை சற்று உற்று நோக்குவோம். Aயிலிருந்து 2 அங்குலம் உள் நோக்கி Eஎனக் குறித்துக் கொள்ளவும். EB பகுதியில் Bப் பகுதியை 1 அல்லது 1 1/2 அங்குலம் பதித்து வெட்டவும். படத்தை கவனிக்கவும். இவ்வாறு வெட்டுவதற்கான காரணம், மேல் உடம்புப் பகுதி வளைவாக இருப்பதனால் மூட்டுவதற்கு இலகுவாகவும் அழகாகவும் இருக்கும்.




படம்.2

இதனையடுத்து Eயிலிருந்து கீழ்நோக்கி 3 அங்குலம் பதித்து கைப்பகுதியினை வெட்டவும். A.E,F பகுதியே கைப்பகுதியாகும்.

படத்தின் G,C பகுதியை 2 அங்குலம் சிறு சரிவாக வளைவாக வெட்டவும்.



படம்.3

இவ்வாறு மூட்டிய பகுதிகளை படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து சரியாக அமைந்து விட்டன என்று மனதிற்கு திருப்தி ஏற்பட்டதும் தைத்துக் கொள்ளவும்.

**குறிப்பு:** மேல் உடம்புப் பகுதி இரு பக்கங்களும் ஒரே அளவாக இருத்தல் நன்று.

## அசத்தலான அழைப்பிதழ்




திருமண அழைப்பிதழ்களிலும் வித்தியாசம் செய்யும் எண்ணம் இப்போது வந்துவிட்டது.

ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் மின்னும் வண்ணத்தில் தங்கள் எண்ணப்படி அழைப்பிதழ் தயாரிக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் பிரபல தவில் வித்துவான் வலையப்பட்டி ஆர்.சுப்பிரமணியம். அவரது மகனுக்கு திருமணம். அழைப்பிதழில் புதுமை படைத்துவிட்டார்கள்.

தவில் வடிவில் வண்ணக் கலரில் உருவாக்கப்பட்ட அழைப்பிதழில் மணமகன்-மணமகள் படங்கள். அழைப்பிதழைப் பார்த்தவர்கள் அசந்துவிட்டார்கள்.

## பூலான்தேவியின் இரகசியம்



பிரபல கொள்ளைக்காரியாக இருந்து இப்போது அரசியல் தலைவியாக மாறிக் கொண்டிருக்கிறார் பூலான்தேவி. தனது கதையை படமாக எடுத்ததை எதிர்த்து வரும் பூலான்தேவி இப்போது ரொம்ப அழகாக மாறி விட்டார்.

சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருமணம் நடந்தது.
அந்த பூரிப்புத்தான் புத்தழகு வரக் காரணம் என்று நினைத்துவிடாதீர்கள்.
பூலான்தேவியின் திடீர் அழகுக்குக் காரணம் அவர் அழகு நிலையம் சென்று வருவதுதானாம்.
வாரத்திற்கு ஒரு தடவை அழகு நிலையம் சென்று வருகிறாராம் பூலான்தேவி.
4 அடி 10 அங்குலம் உயரமுள்ள பூலானுக்கு ஏற்ற வகையில் ஒப்பனை செய்கிறார்களாம். அது கம்பீரத்தையும், அழகையும் கொடுக்கிறதாம்.

## என்றும் 16



"என்றும் இளமையாக இருக்க கண்ட மருந்துகளையும் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். இளமை-மருந்தாலும், மாயத்தாலும் வருவதில்லை. மனதில் காயமே இல்லாத மகிழ்ச்சியே இளமைக்கு காரணம்" இப்படிச் சொல்லியிருப்பவர் பிரபல நடிகை ஜோன் கொலின்ஸ். இவரது வயது 61. இப்போதும் ஹொலிவுட் சினிமா உலகில் கொடிகட்டிப் பறக்கிறார். படத்தில் இருப்பவர்தான் ஜோன் கொலின்ஸ். இவருக்கா வயது 61 என்று வியப்பாக இருக்கிறதல்லவா? உடற் பயிற்சியும், மாறாத உற்சாகமும்தான் இளமையின் இரகசியம். நம் நாட்டில் ETVயில் ஜோன். கொலின்ஸ் நடித்த 'டினாஸ்டி' படம் வாரா வாரம் ஒளிபரப்பாகிறது. விரும்புகிறவர்கள் என்றும் இளமையான ஜோன் கொலின்ஸை சின்னத் திரையில் பார்த்து இரசிக்கலாம்.

பார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 24
உண்மை—நேர்மை—
வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

## புதுமையின் ஜனனம்

“தை மகள் வருகிறாள்! தைமகள் வருகிறாள்!
வையகம் சிலிர்க்க மலர்ந்தவள்; வருகிறாள்!”

“வையகம் சிலிர்க்கலாம்; வானகம் சிறக்கலாம்;
தைமகள் வரவு தமிழர்கட் கிங்கே
உய்திதந் திடுமா? உரிமைதந் திடுமா?
கையது கட்டி வாயது பொத்தி
அஞ்சி அஞ்சி அடிமையாய்க் கணந்தொறும்
உயிர்கைப் பிடித்து உழன்றிடும் நிலையில்;
கையை நகர்த்தினால், கால்களை அசைத்தால்
ஆயுத மறலிகள்! சாயுநம் முடல்கள்!
வேலியாம்; பயிர்களை மேய்ஜன நாயகம்.
இந்த நிலையில்,
எதற்கடா பொங்கல்..........?”



“எதற்கா தைமகள் இன்பநல் வரவு
தைமகள் பூத்த தவத்திருக் கோலம்?
பூத்தபக் குவந்தான் புதுமையின் ஜனனம்.
மலர்ச்சியே கன்னிமை மகிழ்ச்சியின் கர்ப்பம்.
முயங்கிமுத் தெடுத்து முளைக்கவித் தூன்று;
இளமையும் செழுமையும் எழுச்சிகொள் விறலும்
உழுமுனைத் திரணடு ஊழித் தீயென
கருவுயிர்த் திடுவாள் கன்னித் தைமகள்.
அந்த உயிர்ப்பில் ஆணவம் அழியும்
அடிமை விலங்கு அறுபட் டகலும்
ஆகவே, வரவேற் றருள்தைப் பாவையை,
ஆரத் தழுவு, அவ்வரும் வேள்வியில்
அமுத கலயம்,– அதுஉதித் திடுமே.”

-திமிலைத் துமிலன்-

**புயல்**
தென்றலின்
வேகமான
மறு பதிப்பு.

**கலண்டர்**
வயதை
அதிகரிக்கும்
இயந்திரம்

**விதி**
தாய்மை
மகளிர் மட்டும்
தாடி
ஆண்கள் மட்டும்

**குடிநீர்**
ஏழையின்
குளிர்பானம்

**அமாவாசை**
நிலா மகள்
வேலை நிறுத்தம்.

**கடிகாரம்**
பொன்னான
நேரத்தை
சும்மா சுற்றி
வீணாக்கும்
இயந்திரம்

ரோஜா ஆனந்தராஜா
பதுளை.

## ஏன் சிரித்தாய்?

தேன் தமிழைச் சிந்துகின்ற
செவ்விதழை விரித்து மெல்ல
ஏன் சிரித்தாய் இளமயிலே
எதை நினைத்துக் கொண்டாயோ?

சுற்றிவரக் கம்பி வேலி
சூழகதி முகாமுக் குள்ளே
பற்றி எரி வயிற்றுடனே
பார்த்தேன் சிரித்தாயோ?

உயிர் தந்த உன் பெற்றோர்
உடன் பிறப்பு அனைவரதும்
உயிர் பறித்த கொடியோரை
உளம் கொண்டோ நீ சிரித்தாய்?

ஏழைகளின் அடி வயிற்றை
எரியவிட்டு வாழ்வு தேடும்
கோழைகளைக் கண்ட தனால்
கொண்ட சிரிப்பிதுவோ?

அகதி முகாங் களில்தான்
அடக்கம் வாழ்வு என்று
பகலிரவாய் எண்ணி யதை
பார்த்துச் சிரித்தாயோ?

தேர்தல் திரு விழாவில்
தெருக் கூத்து ஆடியவர்
பார்வை பட வில்லையென்றோ
பைந்தமிழே நீ சிரித்தாய்?

வேதனையின் மத்தி யிலும்
வாழ்க்கை ஒன்று இருக்குதென்று
மாதவனை நினைத்தோ நீ
மனம் ஆறச் சிரித்தாயோ?

-கேணிப்பித்தன்-

## புதியதல்ல....!

வானம் எனக்கு
புதியதல்ல
வாழ்க்கை
புதிது!

□□

நிலவு எனக்கு
புதியதல்ல
நினைவுகள்
புதிது!

□□

காற்று எனக்கு
புதியதல்ல
காதல்
புதிது!

□□

பூக்கள் எனக்கு
புதியதல்ல
பூவை
புதிது!

□□

கவிதை எனக்கு
புதியதல்ல
காதலி
புதிது!

□□

ஆசை எனக்கு
புதியதல்ல
மீசை
புதிது!

□□

அச்சம் எனக்கு
புதியதல்ல
மச்சம்
புதிது!

□□

யுத்தம் எனக்கு
புதியதல்ல
முத்தம்
புதிது!

□□

சிகரம் எனக்கு
புதியதல்ல
‘சிகரட்’
புதிது!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

## புன்னகை அனுப்பிவை

உனக்காக
காத்திருக்கிறது–
என் வீதி
பூக்களின் வாசத்தால்
பாதை செய்து
பார்த்திருக்கிறேன்
உன் வரவுக்காக!

நிலவால் நெய்த
உன் பாதங்களை
எனக்காக
நீ நகர்த்திடு!

உன்
ரோஜாப்புன்னகை
போதும்
அனுப்பிவை!

உயிரை வெல்லும்
உன் பார்வையால்
என்னை
போர்த்திவிடு
போர்மட்டும் தொடுக்காதே!

வடக்குக் கிழக்காக
என்
மனப்பூமியை
மாற்றிவிடாதே!
சமாதான ஏமாற்றத்தால்
வாடும்
என் தேசத்தைப்போல
என்
நேசத்தை ஏமாற்றிடாதே!

எழுந்துவா!
நாளைய விடியலில்
எம்
தேசத்தைப் போல
சோகச் சிறையிலிருந்து
விடுதலை பெறவேண்டும்
கண்ணே!
கொஞ்சம்
புன்னகை அனுப்பிவை!

-நிந்தாசன்-

## இன்றைய காந்திகள்

நாங்கள்
புலம்பத் தெரிந்த
சுருதியற்ற வீணைகள்
காலம் எனும் வீதியிலே
வீசப்பட்ட
கண்ணீர்ப் பூக்கள்!

எங்களை அணைப்பவர்கள்
எங்களை நினைப்பதால்
நாட்டுக்காக அல்ல!
வயிற்றுக்காக உழைக்க
கோடுகளை தாண்டியவர்கள்!

நிலையான வாழ்வின்றி
நிலை கூறப் பயந்திடும்
பால கிருஷ்ணர்கள்!
எங்கள் கவிதைகளை

கண் கலங்கி கேட்கும்
கவிதைப் பித்தர்களே!
தயவு செய்து எங்கள்
காந்திகளைக் கண்டால்
கட்டாயம் சொல்லுங்கள்!
அடையாளச் சீருடை
அணியச் சொல்லி!

காரணம்,
அவர்கள் கைகளில்கூட
துப்பாக்கிகள் இருக்கலாம்

இரா.புஷ்பகாந்தன்-பசறையூர்.

## வித்தியாசம் 10




முதல் படத்தை மறுபடியும் வரைந்த ஓவியர் 10 வித்தியாசங்களோடு இரண்டாவது படத்தை வரைந்துவிட்டார். உங்களால் முடிந்தால் கண்டுபிடியுங்கள். விடையை சரிபார்க்க–பக்கம் 18ற்கு செல்லுங்கள்.

## இரசித்து கத்தரித்தது. படமும்-இந்தக் கவிதையும்






## இந்த வாரம் உங்கள் பலன்
(15.01.95 முதல் 21.01.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| கன்னி | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன், வெள்ளி |

★ சந்திரன்-இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் பேறு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர்நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- | உயர்ந்த நட்பு, முன்னேற்றம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தடை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- | செய்தொழில் நட்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பெரியோர் பகை. | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகாயம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணவரவு குன்றும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| புதன்- | வீண் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நட்பு, முன்னேற்றம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தனலாபம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| புதன்- | தனலாபம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 6 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தனலாபம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பணவரவு, தொழில் மேன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- | மனக்கவலை நீங்கும், உயர்ந்த நட்பு. | காலை 6 மணி |
| வியாழன்- | அந்நியர் சகாயம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மனக்கவலை நீங்கும். | காலை 6 மணி |
| சனி- | ஆடம்பர வாழ்க்கை, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -6

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | பொருள் வரவு, செய்தொழில் நன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, உறவினர் பகை. | காலை 6 மணி |
| சனி- | உயர்ந்த நட்பு, முயற்சிதடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியர் சகாயம், பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரியத் தடை, மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| புதன்- | வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | பணவரவு, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | தொழில் மந்தம், மனக் கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -9

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முன்னேற்றம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- | தனலாபம், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | புதிய தொழில், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மன மகிழ்வு. | பகல் 11 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், மனப் பயம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், புதிய முயற்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4


### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் குறைகேட்டல், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- | செய்தொழில் நன்மை, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | செலவு மிகுதி, பணத்தடை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## காந்தி காட்டிய வழி!

காலை நேரம் கண்களை விழித்து
களிப்புடன் எழுந்திடு பாப்பா!-பின்
காலைக் கடன்கள் யாவும் முடித்து
கனிவுடன் உணவுகொள் பாப்பா!

வெள்ளைச் சட்டை அழகாய் அணிந்து
புத்தகம் தூக்கிடு பாப்பா!-உன்
பெற்றவர் காலடி பணிந்து வணங்கி
விடை பெற்றுச் சென்றிடு பாப்பா!

தோழிகளோடு சாலையின் ஓரம்
பள்ளி சென்றிடு பாப்பா!-அங்கு
பணிவுடன் ஆசிரியர் படித்து தந்திடும்
பாடங்கள் கற்றிடு பாப்பா!


கல்வி ஒன்றே நிலையான செல்வம்
காந்தி சொன்னது பாப்பா!-அவர்
காட்டிய வழியில் கல்வி கற்றே
பாரில் உயர்ந்திடு பாப்பா!

செல்வி.சசிகலா தேவி தம்பிராஜா-விக்னேஸ்வரா வித்தியாலயம்-வாழைச்சேனை.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பல கல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# நரி சொன்ன யோசனை



**கா**ட்டில் இருந்து இருந்து நரிக்கு அலுத்துப்போய்விட்டது. முயலையும், காட்டுக் கோழியையும் சாப்பிட்டுச் சாப்பிட்டு நரிக்கு அலுத்துவிட்டது. இந்தக் காட்டை விட்டு ஏதாவது கிராமத்திற்குப்போய் வேறு சுவையான உணவு கிடைக்கிறதா என்று பார்ப்போம் என்று எண்ணியது. உடனே காட்டை விட்டு வெளியில் வந்து அருகிலிருந்த கிராமத்தை நோக்கி ஓடியது.

அந்தக் கிராமம் அழகாக இருந்தது. எங்கு பார்த்தாலும் பசுமையான புல் வெளிகள் காணப்பட்டன. புல் செழிப்பாக வளர்ந்திருந்தது. நிறைய ஆடுகள் அங்கு மேய்ந்துகொண்டிருந்தன. இயற்கையான, செழிப்பான புற்களை மேய்ந்து, மேய்ந்து ஒவ்வொரு ஆடும் கொழு கொழு என்றிருந்தது. அவைகளைப் பார்த்ததும் சாப்பிடவேண்டும்போல் இருந்தது நரிக்கு. ஆடுகள் எல்லாம் தங்களுக்கு அதுவரை எந்த ஆபத்தும் ஏற்படாததால் மிகவும் சுதந்திரத்துடன் தலைகுனிந்து புல் மேய்ந்து கொண்டிருந்தன.

அப்போது மெதுவாக நடந்துசென்று, கொழுத்த ஆடு ஒன்றின் மீது பாய்ந்து, அது கத்தாதபடி குரல்வளையை தன் வாயால் இறுகப் பிடித்துக் கவ்வி இழுத்துக்கொண்டு வெகுதூரம் ஓடிச் சென்றது நரி. ஒரு புதரின் அருகில் அதைப் போட்டு அதைக் கொன்று சாப்பிட்டுவிட்டது. ஆட்டிறைச்சி மிகவும் சுவையாக இருக்கவே, நரிக்கு இன்னமும் நிறைய ஆடுகளைச் சாப்பிட வேண்டுமென்று ஆசையேற்பட்டது. மறுநாளும் ஒரு ஆட்டின் மீது பாய்ந்து கவ்வி அதைப் புதர் அருகே கொண்டுவந்து போட்டு ஆசை தீரச் சாப்பிட்டது. அப்படியும் அதன் ஆசை தீரவில்லை. கிடக்கிறவரை ஆட்டை அடித்துச் சாப்பிடுவோம் என்று எண்ணிற்று.

ஆட்டின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதை கவனித்த ஆடுகளின் சொந்தக்காரன், ஒருநாள் ஆடுகளை மேயவிட்டு விட்டுக் கையில் பெரிய தடியுடன் ஒரு மரத்தின்பின் ஒளிந்திருந்தான். அதை அறியாத நரி தினமும் வருவதுபோல் வந்து ஒரு ஆட்டின்மீது பாய்ந்தது. அதைப் பார்த்த ஆடுகளின் சொந்தக்காரன், கையிலிருந்த தடியை நரிமீது வீசினான். நரி சுருண்டு விழுந்தது. ஓடிச்சென்று அதன் கால்களைக் கயிறு கொண்டு கட்டி, 'தரதர'வென இழுத்து வந்து ஒரு மரத்தில் அக்கயிற்றைக் கட்டினான்.

ஊர் மக்கள் வந்து ஆளாளுக்கு அடி அடி என்று நரியை அடித்து விட்டுச் சென்றார்கள். இனி ஒரு அடிகூட வாங்க முடியாது. எப்படியாவது இங்கிருந்து தப்பிவிடவேண்டும் என்று நரி எண்ணியது. எப்படி இங்கிருந்து தப்புவது, இன்னும் ஒருநாள் இங்கிருந்தால் நம் உயிர் போய்விடும், என்ன செய்யலாம்? என்று பலவாறு யோசித்துக்கொண்டிருந்தது நரி.

அப்பொழுது ஒரு ஓநாய் அங்கு வந்தது. உடல் பெருத்துக்கிடக்கும் நரியைப் பார்த்தது. நான் ஒல்லியாக இருக்கிறேனே, இந்த நரி மாதிரி குண்டாக மாட்டோமா என்று எண்ணியது. பிறகு நரியிடம் வந்து, "நண்பா! காட்டிலிருக்கும் பொழுது ஒல்லியாக இருந்தாய்.இப்பொழுது நல்ல குண்டாகி விட்டாயே- எப்படி?" என்று கேட்டது. இதுதான் தப்புவதற்குச் சரியான தருணம் என்று நினைத்த நரி, "இந்த ஊர் மக்களுக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டது. நான் எங்கே காட்டிற்குத் திரும்பிப் போய்விடுவேனோ என்று பயந்து என்னை இங்கே கட்டிப்போட்டு, போதும் போதுமென்கிற அளவுக்கு நிறைய ஆகாரம் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அதைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு நான் குண்டாகி விட்டேன்" என்றது நரி.


"நானும் உன்னைப்போல் குண்டாக வேண்டுமே?" என்று சொல்லியது ஓநாய்.

"அப்படியானால் ஒன்று செய்யும் நண்பரே...முதலில் என் கட்டுக்களை அவிழ்த்துவிடும். பிறகு உம்மை நான் கட்டிப்போடுகிறேன். எனக்குப் பதிலாக நீர் இங்கே இரும். ஊர்மக்கள் நிறைய உணவுகொண்டு வந்து உமக்குப் போடுவார்கள். நன்றாக நிறைய சாப்பிட்டு நீரும் என்னைப்போல் குண்டாகிவிடுவீர்," என்றது நரி.

குண்டாக ஆசைப்பட்ட ஓநாய், நரியின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டது. நரி ஓநாயை மரத்தோடு கட்டிப்போட்டுவிட்டு, 'தப்பினோம் பிழைத்தோம்' என்று காட்டுக்குள் ஓடிவிட்டது.

சிறிது நேரத்தில் அங்கு வந்த மக்கள் நரி இருந்த இடத்தில் ஓநாய் இருப்பதைப் பார்த்தார்கள். நரியைவிட ஓநாயால்தான் தங்கள் ஆட்டு மந்தைக்குத் தீங்கு என எண்ணி அதை அடித்தே கொன்றுவிட்டார்கள்.

## செய்து பாருங்கள்



ஒரு கிளாசை எடுத்துக்கொள்ளவும். அதில் நீரை நிரப்பி அதன்மீது கைக்குட்டையை வைத்து இழுத்து மூடவும். இப்போது கிளாசை படத்தில் காட்டியுள்ளபடி தலைகீழாய்த் திருப்பவும்.

கிளாசில் உருவான காற்று அழுத்தத்தால் டம்ளரில் உள்ள நீர் கீழே விழாது. இப்போது கிளாசின் பின்பக்கம் ஒரு விரலை வைத்து லேசாக அழுத்தினால் கிளாசின் உள்ளே காற்று அழுத்தத்தில் மாற்றம் ஏற்பட்டு நீரில் காற்றுக் குமிழிகள் தோன்றும். இது பார்ப்பதற்கு நீர் கொதிப்பதுபோல இருக்கும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.01.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 74
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## பறவைகளின் அறிவு



**பா**னையின் அடியில் உள்ள நீரைக் குடிக்க கற்களை பானையில் போட்டு நீரை மேலே வரச்செய்த காகம் பற்றிய கதையை நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்கள். ஸ்கொட்லாந்தில் ஒரு காகம் நிறைய எலும்புகளைச் சேகரித்து அதை வீதியின் நடுவே போட்டுவிடும். வாகனங்கள் வேகமாகச் செல்லும்போது எலும்புகள் நொருங்கிவிடும். பின்னர் காகம் வந்து சிதறியுள்ள எலும்புகளின் நடுப்பகுதியில் உள்ள எலும்பு மச்சையைத் தின்னும்.

ஐரோப்பாவில் இருக்கும் மரங்கொத்திப் பறவைகள் மரத்தில் உள்ள துளைகளில் பதுங்கியிருக்கும் பூச்சிகளைக் கற்றாளை முள்ளை வைத்துக்குத்தி வெளியேற்றும். பூச்சிகள் வேகமாக வெளியேறும்போது அவற்றை எல்லாம் பிடித்துத் தின்றுவிடும்.

ஒருவகை பெரிய மரங்கொத்திப் பறவை மரத்தில் 'V' வடிவத்தில் துளையிடும். அதனுள் விதைகளை வைத்து அவற்றின் ஓட்டை உடைத்து உள்ளே இருக்கும் பருப்பைத் தின்னும்.

சீகல் என்ற கடற்பறவை நத்தைகளைப் பிடித்து உயரே இருந்து பாறைகளின்மீது போடும். ஓடு உடைந்து சிதறியதும் அவற்றைப் பிடித்துத் தின்னும்.

**சா**ய்திரஷ் எனப்படும் பாடும் பறவை நத்தைகளை அலகில் கவ்வி, பாறைகளில் தேங்காய் உடைப்பதுபோல் உடைத்துத் தின்னும்.

## இந்தப் பெயரில் இருப்பவை எவை?

| அ | ரி | ச் | ச | ந் | தி | ர | ன் |
|---|---|---|---|---|---|---|---|

1. மிருகங்களுக்கு அரசன் யார்?
   அரி (சிங்கம்)
2. நிலாவின் ஒத்தகருத்துச் சொல் என்ன?
   சந்திரன்.
3. பாதைகள் சந்திக்கும் இடம் என்ன?
   சந்தி.
4. எவரையாவது வீழ்த்துவதற்கு விரிக்கும் வஞ்சக வலை?
   சதி.
5. மாலைப் பொழுதை எப்படி அழைப்பர்?
   அந்தி.
6. சிவனுக்கு மறு பெயர் என்ன?
   அரன்.

வீ.ஷியாமினி
புனித தோமையர் பெண்கள்
பாடசாலை-மாத்தளை.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 71

பரிசுக்குரியவர்
சண்முகநாதன் புஸ்பானந்தா
கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை
கல்முனை.

### பாராட்டுக்குரியவர்கள்

எச்.எம்.எம்.மஸ்னவி - வாழைச்சேனை.

எம்.ஜி.சிறீதேவி - கொழும்பு-13.

இ.ஷீரஸாகர்
இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி-திருகோணமலை.

ஆர்.பிரியாளினி - நானுஓயா.

அ.இம்தியாஸ்- அல் அக்ஸா மகா வித்தியாலயம்-கிண்ணியா-3.

எஸ்.கிஹாந்தன்-சாஹிரா கல்லூரி-மாத்தளை.

## விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணன் அழுதால் தம்பியும் அழுவான். யார் அவன்?
2. உயிர்உள்ளவரை கண்ணீர் வடிப்பாள். உயிரற்றுப்போனால் வீதியில் கிடப்பாள். யார் அவள்?
3. வர்ணமுண்டு, சேலையல்ல. தொட்டால் பேசுவான். அவன் மனிதனல்ல. அவன் யார்?
4. உணவில்லாமல் வாழலாம். பணமில்லாமல் வாழலாம். ஆனால் இவன் இல்லாமல் வாழமுடியாது. யார் அவன்?
5. வண்டிக்கு உதவாத சக்கரம். ஆனால் பெண்டிற்கு உதவும் சக்கரம். அது என்ன?
6.. முள்ளுண்டு மலரல்ல. துடிப்புண்டு, இதயமல்ல. ஓடும், ஆனால் அது கடிகாரமல்ல. அது என்ன?
7. தலையுண்டு-வாலில்லை. அடித்தால் சீறும் அது பாம்பு அல்ல. அது என்ன?

**விடைகள்**

1. கண் 2. பேனை
3. தொலைக்காட்சிப்பெட்டி
4. காற்று 5. வளையல்
6. மீன் 7. தீக்குச்சி

எம்.என்.றினூசா-யோனகபுர-திக்வெல்ல.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி-
பாப்பா முரசு, தினமுரசு வாரமலர், த.பெ. இல. 1772, கொழும்பு.

## அறிவோம் மனதில் பதிவோம்



சீனாவைச் சேர்ந்த செங் ஜின்லியன் என்ற பெண்ணின் உயரம் 247 சென்ரிமீற்றர். (8 அடி 1 3/4 அங்குலம்) உலகின் மிக உயரமான பெண் இவர்தான்.

உலகில் 311 தேசிய எல்லைகள் உள்ளன. ஐரோப்பா கண்டம் அளவில் சிறியதாக இருந்தாலும் இங்குதான் தேசிய எல்லைகள் அதிகம்.





இங்கிலாந்தில் மிக உயரமான செர்ரி மரம் உள்ளது. கிழக்கு சுசெக்ஸ் மாநிலத்தில் அஷ்போர்ண்வராம் பேர்க்கில் உள்ள இந்த மரத்தின் உயரம் 24 மீற்றர் (80அடி) ஆகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாகூலம்



எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!
வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான- பரிசுகள் காத்திருக்கின்றன-தொடர்ந்து வாசியுங்கள்.
நாம் கேட்கும்போது மட்டும் விடையை எழுதி அனுப்பினால்போதும்.

## 4

**பா**ச்சுவின் பேச்சைக் கேட்ட நீலகண்டன் திருமேனி ஒரு கணம் அப்படியே அதிர்ந்துபோய் நின்றார்.

பிறகுதான் வேகமாக முற்றத்துக்கு வந்தார்.

அவரது கண்களில் கோபம்.

பாச்சுவும் முற்றத்துக்கு வந்து நின்றான். திண்ணையில் தூண் அருகே தலையைக் குனிந்தபடி நின்றிருந்தான் கோகுல். இளமையும்... அழகும்... வாலிபத்தின் படி வரைக்கும் வளர்த்துவிட்டுவிட்டு... அவனை தாண்டி வயசு மட்டும் வளர்ந்து கொண்டிருக்கிறது: ஆனால் அறிவு?

"அடேய் பாச்சு! கையும் மெய்யுமா இவனை நீ பிடிச்சுக்கொண்டுவந்ததுக்கு நீயே ஒரு தண்டனையையும் சொல்லுடா! என்ன செய்யலாம் இவனை?"

கேட்டார் நீலகண்டன் திருமேனி.

"வேறென்ன செய்ய? வயசு வளர்ந்ததைக் கவனிக்காம நீங்க பாட்டுக்கு இளைய நம்பூதிரியை இனியும் சின்னக் குழந்தை யாகவே நினைச்சுட்டிங்க!"

"அதனால்தாண்டா உன்னைக் கேக்கிறேன்.. என்ன செய்யலாம்?"

"கட்டிப் போட்டுடவேண்டியதுதான்!"

"யாரை அந்த பவத்ராதன் மகளையா?" கேட்டார் நீலகண்டன் திருமேனி.

பாச்சு இளைய திருமேனியையும், பெரிய திருமேனியையும் பார்த்தான். அவருக்கு மட்டுமில்லை. பாச்சுவுக்கும் இதில் விருப்பம் இல்லை! என்றாலும் எதையாவது சொல்லப்போய் இளையதும் பெரியதும் ஒரே நேரத்தில் தன்மீது எரிந்து விழலாமோ என்கிற பயம்...

"நீங்களா ஒரு முடிவு செய்யுங்க திருமேனி."

கோகுல் குறுக்கிட்டான். "எனக்கு ஸ்ரீலதாதான் வேணும்!"

"பாலேக்கல் பாரம்பரியத்தைக் கொண்டு நடத்த வேண்டியவன் நீ! நம் மோட பாரம்பரியமும், மேலிடம்பாரம்பரியமும் ஒண்ணுசேர நான் விடமாட்டேன்!"

"அப்பா!"

"பாச்சு....! நீ இவனைக் கொண்டு போய் வீட்டுக்குள்ளே பூட்டி வச்சுட்டுவா! இல்லேன்னா இவனும் அவளும் கந்தர்வனும் யக்ஷியுமா நிஜமாவே மாறும்படி ஆயிடும்! வெட்டிக்கொன்னுடுவேன் ரெண்டுபேரையும்!"

"அப்பா! ஸ்ரீலதா நல்லவப்பா!"

"உன்கூட கந்தர்வன் காட்டுக்கு வந்து குலாவினப்பவே அவள் எப்படிப்பட்ட யக்ஷின்னு தெரிஞ்சுபோச்சு! எனக்கும் பவத்ராதனுக்கும் முறிஞ்சுபோன சிநேகம், முறிஞ்சுபோனதுதான்! உன்னாலே அது மறுபடியும் ஒட்டியுறவாட விடமாட்டேன்!"

"அப்பா!"

"எனக்குத் தெரியும். உனக்கு நான் பார்த்து வச்சிருக்கிற தென்னந்தோப்புத் திருமேனி மகளை! ஸ்ரீலதாவைவிட எல்லாத்திலேயும் அவள் உயர்ந்தவ! நம்ம இல்லத்துப் பாரம்பரியம் ஒரு ஏனோ தானோவாலே வீணாயிடக்கூடாது..! முதல்லே நீ உள்ளே போ!"

மகனை விரட்டினார் தந்தை! கோகுலிடம் மறுபேச்சில்லை!

"இதப்பாரு! தப்பியோடிப்போய் மேலிடம் இல்லத்து மருமகனாகலாம்'னு நீ நினைச்சா...உன் அறையிலே நான் நிறுத்திவைக்கற துன்மூர்த்திகளே உன்னைத் துவம்ஸம் செஞ்சுடும்! ஞாபகம் வச்சுக்க."

எச்சரித்தார் நீலகண்டன்.

பாச்சுவுக்கு ஒரு சபலம்: அவர் நிறுத்திவைக்கிற துன்மூர்த்திகளில் ஒன்றையாவது தன் கண்ணால் பார்த்துவிட வேண்டும் என்பதுதான் அது! இனியும் எத்தனை காலத்துக்கு மாடனையும் மதுரையையும் பார்த்ததாக ஊராரிடம் சொல்லிக்கொண்டே இருப்பது?

அறையைப் பூட்டும்போது அப்படி எதுவும் இளைய திருமேனி அறைவாசலில் வந்து நிற்கிறதா என்று பாச்சு திரும்பித் திரும்பிப் பார்த்தான்! வெளியே வந்தபிறகு திருமேனியிடம் மறுபடியும் யக்ஷி கந்தர்வர்கள் உண்டா இல்லையா என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவும் நினைத்தான்!

ஆனால்...

முற்றத்தில்....? நீலகண்டன் திருமேனியே மாயமாயிருந்தது தெரிந்தது!

□□

**மு**ன்தினம் பாச்சுவை இந்தக் கோகுலும் ஸ்ரீலதாவும் குலைநடுங்கச் செய்துவிட்ட காட்சியே திரும்பத் திரும்ப அவனுக்கு நினைவில் வந்தது.

பாதக் கொலுசு மணியின் நாதநயம்..! பதனக் காலடியின் சலன லயம்!

அடேயப்பா! இன்றும் அதே சத்தம் அதே சலனம்.

குஞ்சனைத் துரத்திப்போனபோது மறுபடியும் குலைநடுங்கிப்போயிற்று பாச்சுவுக்கு.

அதே வேகத்தில் ஓடிப்போய்க் குஞ்சனை ஒரு மிரட்டு மிரட்டிவிடவேண்டும்: அல்லது இருட்டடி கொடுத்துவிட்டு முகம் தெரியாமல் ஓடிப்போகவேண்டும்!

இப்படி எல்லாம் போட்ட திட்டம் பொடிப்பொடியாகிவிட்டது!

"குழந்தே!" என்று கத்தினான் குஞ்சன். அவன் குரலில் கோபம்.

யாரை அழைக்கிறான் இப்படி?

ஒதுங்கி நின்றான் பாச்சு!

"என்ன குஞ்சா?" என்று கேட்டபடி வெளியே வந்து நின்றாள்.

"இது என்ன கூத்து? உங்கப்பாவுக்குத் தெரிஞ்சா அவர் மனசு என்ன பாடுபடும்? எத்தனை நாளா நடக்குது இது?"

"தயவு செஞ்சு கத்தாதீங்க! நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிட்டோம்."

"யார் அவர்?"

"நீலகண்டன் திருமேனி மகன் கோகுல்!" அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே காட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து நின்றான் கோகுல்!

"நீங்க இப்படிச் செய்யிறது நல்லா இல்லே இளைய திருமேனி."

"குஞ்சா! நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பீட்டோம். இனி எங்களை யாராலேயும் பிரிக்க முடியாது!"

"திருமேனி..!"

"நம்பிக்கையில்லியா? ஸ்ரீலதாவைக் கேட்டுப்பார்!"

"இதை நான் கேட்டுப் பிரயோஜனமில்லே திருமேனி. பெரியதிருமேனிகள் ரெண்டு பேரும் கேட்டு முடிவு எடுக்க வேண்டிய பிரச்சனை இது!"

"ஆமாம் திருமேனி! இளையதுக்கு இப்படி ஒரு அவசரம் வந்தது ரொம்பத் தப்பு!" என்றபடி இருட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டான் பாச்சு! இவனைக் குஞ்சனும், இளையதும், ஸ்ரீலதாவும் எதிர்பார்க்கவே இல்லை!

"நீ...எங்கே பாச்சு... இந்த வழியா?"

"வந்திருக்கக் கூடாதுதான் திருமேனி! வந்துட்டேன்.... வாங்க வீட்டுக்குப் போவோம்."

"நடந்தது நடந்துபோச்சு பாச்சு! நீ இதை திருமேனி காதிலே மட்டும் போட்டு இனி நடக்க வேண்டியதைக் கவனி! தேவையில்லாம ஊரு முழுக்க பிரச்சாரம் பண்ணாதே! இது ரெண்டு சின்னஞ்சிறிசுக வாழ்க்கை!"

குஞ்சன் பாச்சுவிடம் கை கூப்பியபோது-அவன் அவர்கள் நம்பிக்கையைப் பொய்ப்பிக்காத மாதிரிப் பேசினான் "திருமேனிகிட்டே பேசி... உடனே இதுக்கு ஒரு வழி பிறக்க வைக்கணு'ம்னுதான் அழைச்சுட்டுப் போறேன் குஞ்சா!"

சொன்னவன் பாச்சு! ஆனால் நீலகண்டன்? விவரத்தைக் கேட்டதுமே விரைவாக எடுத்துவிட்டார் ஒரு நடவடிக்கை!

அது வேறொருத்தியை கோகுலுக்குத் திருமணம் செய்து வைக்கிற முயற்சி!

□□

**தெ**ரியாது-இது! பவத்ராதன் திருமேனி குஞ்சனின் வார்த்தைகளைக் கேட்டதுமே பெருமூச்சு விட்டார்.

நம்பவே இல்லை!

"ஸ்ரீலதாவா இப்படி நடந்தது?"

"ஆமாம் திருமேனி இதுவும் ஒரு நன்மைக்குத்தான்.." என்றான் குஞ்சன். அதை பவத்ராதன் அங்கீகரிக்கவில்லை!

"அவ வாழையிலைடா! அதுவே முள்மேல விழுந்தாலும், இல்லே முள் வந்து அதுமேல விழுந்தாலும்...நஷ்டம் இலைக்குத்தான்! என்னை இப்படி ஏமாத்திட்டாளே...இந்தப் பொண்ணு? இனியேதுடா நன்மை?"

பவத்ராதனுக்குக் கண்கள் கலங்கிப்போயின.

"சரி திருமேனி! ஸ்ரீலதா தப்புப் பண்ணியாச்சு! அதுக்காக நீங்க அவுங்களை வெட்டிக் கொலை செஞ்சுடப் போறீங்களா? இல்லத்திலே வளர்ந்துட்டிருக்கிற இளைய தம்புராட்டிக்குக் காலாகாலத்திலே கல்யாணம் செய்து வைக்கணுங்கற நெனைவே இல்லாம இருந்தது நீங்க! குழந்தை அதை உங்களுக்கு நெனைவு படுத்தியிருக்கா... அவ்வளவுதான்!"

"ஆமாப்பா! மனம் விட்டுப் பழகினோம்..."

"ஆனா மானத்தை விட்டுட்டியே!" புலம்பினார் பவத்ராதன்.

"இல்லைப்பா! தொட்டுப் பழகினோம். நிஜம்! ஆனா நான் கெட்டுப்போகலேப்பா!"-கேவி அழுதாள் ஸ்ரீலதா.

"தம்புராட்டிக் குழந்தை அழுறாங்க திருமேனி!"

"அழட்டும்! அப்பனுக்குத் தெரியாம அடுத்தவன்மேல ஆசைப்பட்டுப்போய் வர்றவங்களுக்கெல்லாம் இப்படி அழுறது தாண்டா மனசுக்கு ஆறுதல்! போய் நல்லா அழச் சொல்லு. கண்ணீர் வத்தறட்டும் அழச் சொல்லு! ஆசைப்பட்டாளாம் ஆசை! அதுவும் யார் மேல? என்னைப் பரம வைரியா நினைக்கிறவன் மகன்மேலே!"

சொல்லிவிட்டு வேகமாக உள்ளே போய் விட்டார் திருமேனி.

குஞ்சன் திக்குமுக்காடிப்போனான்.

நீலகண்டன் திருமேனியைவிட மோசமானவன்: அவருடைய வேலைக்கார பாச்சு! விடிவதற்குள்ளாகவே ஊரெல்லாம் போய்ச் சொல்லிவிடுவான்!

இது மாதிரி ஒரு சந்தர்ப்பத்துக்காகவே காத்திருக்கிறவன் பாச்சு! வெறும் வாயையே மெல்லுகிறவன். இனி இந்த ஒரு பிடி அவலும் கிடைத்த பிறகு... அவன் வாய் சும்மா இருக்குமா?

ஸ்ரீலதாவுக்கு எப்படி ஆறுதல் சொல்லுவது என்று குஞ்சனுக்கு விளங்கவில்லை!

"தம்புராட்டி! எழுந்து உள்ளே போங்க!" என்றான் அவன்.

இனியும் அவள் குஞ்சனுக்குக் குழந்தையாகத் தெரியவில்லை! இல்லத்தின் தம்புராட்டியாகவே அவளை மதித்தான் அவன்.

எப்படியாவது திருமேனியைச் சமாதானப் படுத்தி...இனி நடக்கவேண்டியதை நடத்தி... ஊர் வாயில் இல்லத்தின் மானமும் மரியாதையும் காப்பாற்றப்படவேண்டும் என்பதுதான் குஞ்சனின் வேட்கையாக இருந்தது.

□□

**பு**ல்லரிக் குன்று கிராமத்தில் இரண்டு மாந்திரீகர்களின் குழந்தைகளும், பரஸ்பரம் ஒருத்தரை ஒருத்தர் விரும்பியது தவறா?

வெறும் விருப்பமாக அல்ல...

வீட்டைவிட்டு வெளியே வந்து இரவுகளில் கந்தர்வன் காட்டுக்குள் பயமே இல்லாமல் கூடிக் குலாவுகிற அளவுக்கு வளர்ந்திருக்கிறது!

மாந்திரீகர்கள் இருவரும் அதே பழைய நேசத்தோடு இருப்பதானால் குஞ்சனுக்கு ஸ்ரீலதாவும் கோகுலும் பழகிக்கொண்டிருக்கிற விஷயத்தில் பிரச்சனையே இருக்கப் போவதில்லை; இவ்வளவு தூரம் சிந்திக்கவும் தேவையில்லை.

ஆனால்... இருவரும் ஒருவரை ஒருவர் எதிரிகளாக நினைத்துக்கொண்டிருப்பவர்கள்.

பவத்ராதன் நம்பூதிரியின் சன் மந்திரமும், நீலகண்டன் நம்பூதிரியின் துன் மந்திரமும் வடக்கும் தெற்குமாய் நிற்கிறவை! ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவை. அதேபோலத்தான் மாந்திரீகர்களும்! இந்த நிலையில் ஸ்ரீலதாவும், கோகுலும்?

□□

**ப**கடைகள் களத்தில் விழுந்தன! பாச்சு இங்கே விளையாட வரவில்லை! அவன் வந்திருக்கிற நோக்கமே வேறு!

பவத்ராதன் திருமேனியின் மகள் ஸ்ரீலதாவை அசிங்கப்படுத்திப் பேச வேண்டும், ஊர் இதைக்கேட்டுச் சிரிக்க வேண்டும்.

சிரிப்போடு சிரிப்பு-பவத்ராதனுக்கு இருக்கிற மதிப்பு, மரியாதை அனைத்தையும் மக்களின் மனசிலிருந்து பேர்த்து எறிந்தாக வேண்டும்!

இதுதான் அவன் நோக்கம்.

பேச்சை ஆரம்பிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டுமே! திடீரென்று பாதியில் ஆரம்பித்துப் பேச முடிகிற விஷயமா இது?

குஞ்சன் வருவான்: அல்லது குஞ்சனுக்கு வேண்டியவர்கள் எவராவது வருவார்கள். வந்தால் அவர்களை விசாரிக்கிற மாதிரி ஸ்ரீலதா விவகாரத்தைத் துவக்கினால்தான் இது பிரச்சாரமாக அடையாளம் தெரியாது! அதற்கான முஸ்தீபுடன் அமர்ந்து விளையாடிக்கொண்டிருந்தபோதுதான் ஒருவர் திடீரென்று கேட்டார்: "ஏய்யா பாச்சு! நேத்தைக்கு ஆடிகிட்டிருந்த ஆட்டத்தைப் பாதியிலேயே விட்டுட்டு எங்கே அவ்வளவு அவசரமா கந்தர்வன் காட்டுப் பக்கம் இருட்டுக்குள்ளே போனே?"

"ஹி...ஹி..." என்றவன் வழக்கம் போல் ஒற்றை விரலைத் தூக்கிக் காட்டினான்.

"அதுக்கு ஏன் அந்த மாங்கிளையை அப்படி முறிச்சே?"

இது யாருக்குமே தெரியாது என்று நினைத்திருந்தவன் பாச்சு.

"ஹி....ஹி......" சமாளித்தான் அவன்.

"என்னய்யா நீ ? எல்லாத்துக்குமே ஹி...ஹியா? நீலகண்டனுக்கு ஜால்ரா போட்டுப்போட்டு நீயும் ஆள் மாறிப்போயிட்டேய்யா! நான் நினைச்சேன்... நீ போன வேகம் குஞ்சனுக்கு ஏதாவது ஆபத்துண்டாக்கப் போறேன்னு, அப்புறம் பார்த்தா இளையதோட இந்தப் பக்கம் வந்துட்டிருக்கே! கந்தர்வன் காட்டுக்குள்ளே இளையதுக்கு என்ன வேலை?"

இவ்வளவு பெரிய கேள்வி வந்துவிட்ட பிறகு பாச்சு சும்மா இருப்பானா?

□□

**கா**லையிலும், மதியமும் தனக்கு அறைக்குள்ளேயே உணவுகொண்டு வந்து தரப்பட்டபோது.... அவர்கள் தங்கள் இல்லத்து வேலைக்காரர்களாகவே இருந்ததால் தைரியத்தோடு கேட்டான்: "திருமேனி இனியும் திரும்பலையா?"

"இல்லை இளையதே!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் அந்த வேலைக்காரி.

"இந்தா-இதையும் எடுத்துட்டுப்போ!" உணவுத் தட்டுகளை நகர்த்தி வைத்தான் கோகுல். வேலைக்காரி நின்றாள். உடனே அவன் அவற்றை கதவுக்கு வெளியே தள்ளிவிட்டான். எடுக்கப் போனவள் அதே வேகத்தோடு மறுபடியும் கதவைப் பூட்டக் கூடும் என்று கோகுல் எதிர்பார்க்கவில்லை.

திருமேனியின் உத்தரவு. யக்ஷிகளையும் மூர்த்திகளை பூஜையறையில் பீடம் போட்டுச் சிறைப்படுத்துகிற மாதிரி... தன்னையும் ஒரு சிறையில் தள்ளிவிட்ட அப்பாவை நினைத்ததுமே கோகுலுக்கு எரிச்சல் மூண்டது!

இது அவர் முகத்தைப் பார்க்கிற வரைக்கும்தான்!

"ஏண்டா கோகுல்! நீ எதுவுமே சாப்பிடலையா இன்னிக்கு?"

அவன் பேசவில்லை. பேசுவான் என்று அவர் எதிர்பார்க்கவும் இல்லை!

"சாப்பிடு! உன் விஷயமா நான் ஒரு முடிவு கட்டியாச்சு!"

"எனக்கு சுமதியைப் பிடிக்காதுப்பா."

"யாரு சொன்னா? நீ இனியும் சித்த நேரத்திலே ஸ்ரீலதா வீட்டுக்குத்தான் போகப் போறே! அவளை உனக்கு கல்யாணம் செய்து வைக்கச் சொல்லி...நீ பவத்ராதனைப்போய்ப் பார்த்துக் கேட்கணும்!"

கேட்டதுமே கோகுலின் முகத்தில் ஒரு பிரகாசம் மலர்ந்தது!

".....ஆமாடா! உன்கூட பாச்சும் வருவான்!" நீலகண்டன் திருமேனி சொன்னது அப்படித்தான்! ஆனால் சாயுங்காலமாகப் பாச்சுவுடன் கோகுல் போனபோது... அவர்கள் நுழைந்த இல்லம் தென்னந்தோப்பு நம்பூதிரியின் வீடாக இருந்தது! கோகுல் திணறிப்போனான். தன்னை அழைத்துவந்த பாச்சுவோடு எப்படித்தான் போகிற வழிகூடத் தெரியாமல் கோகுல் நடந்தான்-புரியவில்லை!


இதே நேரம் மேலிடம் மனையில் பவத்ராதன் திருமேனியும் மற்றொரு தீர்ப்புக்கு மனசைத் தயார்படுத்தியிருந்தார். அவருக்கு முன் நின்றிருந்த ஸ்ரீலதா விசும்பி விசும்பி அழுதபடி நின்றிருந்தாள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: தி. குணம்
வயது: 20
முகவரி: பிரதான வீதி, கஞுவாஞ்சிக்குடி-8.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.




பெயர்: எஸ்.எம். மர்சூக்
வயது: 26
முகவரி: பாடசாலை வீதி, சில்மியாபுர, நுவரெலியா.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், வானொலி, தொலைக்காட்சி.




பெயர்: எஸ். சிவா
முகவரி: 180 ஏ. பிரதான வீதி, ரக்குவானை.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: எம்.எஸ்.காதர்வலி
முகவரி: P.O.BOX-3210 CODE NO. 13033 AL SAFAT-KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், தொலைக்காட்சி.



பெயர்: கே. சேஷாத்திரி
வயது: 30
முகவரி: P.O.BOX NO-6884 AE-137, ANNA NAGAR MADRAS-600040 SOUTH INDIA.
பொ.போ: பேனா நட்பு, சினிமா பாடல்கள் கேட்டல், கார் பிரயாணம் செய்தல்.



பெயர்: எம்.இஸ்மாயில்
வயது: 25
முகவரி: BLOCK NO-2 HOUSE NO-8, STREET NO- 25 AL-DIAYAH-35302 KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி.

பெயர்: எஸ். லோகநாதன்
வயது: 23
முகவரி: MUHLERAIN STR 21, 4414 FULLINS DORF, SWITZERLAND.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எம்.நிஸாம்
வயது: 25
முகவரி: P.O.BOX-10042 KKHB/RSHF, KHAMIS MUSHAIT-11451 K.S.A
பொழுதுபோக்கு: பேனா நட்பு, கதைப்புத்தகம்.

பெயர்: என். பாபு
வயது: 23
முகவரி: 167, காலி வீதி, மொரட்டுவை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை, புத்தகம், சினிமா

பெயர்: முகைதீன் ஜமால்தீன்
வயது: 25
முகவரி: 994, அன்புவழிபுரம், திரு மலை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எல். ரகு
வயது: 16
முகவரி: 18, தம்பேத்தனை, அப்புத்தளை.
பொ.போ: கிரிக்கெட், பத்திரிகை, வானொலி.


பெயர்: எம். பௌமி
வயது: 18
முகவரி: 75/2, வில்பொல, அரநாயக்க.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், தொலைக்காட்சி, கிரிக்கெட்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மக்சீம் கார்க்கி

# தாய்

"பாஷா, நல்லா யோசனை பண்ணித்தான் எல்லாம் செய்திருக்கிறாய்!" என்று சொன்னாள் அவள். "ஹஹோல் ரொம்ப நல்லவன். அந்தப் பெண் - அம்மாடி! அவள் எவ்வளவு கெட்டிக்காரியாயிருக்கிறாள் அவள் யார்?"



"ஒரு நிமிஷம் பொறுங்கள், தோழர்களே!" என்று அவள் திடீரென்று கத்தினாள். உடனே எல்லோரும் வாய் மூடி மௌனமாகி அவளையே பார்த்தனர்.

"நாம் சகல விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை உங்களில் யார் ஒப்புக்கொள்கிறார்களோ, அவர்கள் சொல்வதே சரியானது. நம்மிடமுள்ள பகுத்தறிவின் ஒளியை நன்றாகத் தூண்டிவிட்டுக்கொள்ள வேண்டும். கீழ்ப்பட்டவர்கள் நம்மை நன்றாகப் பார்க்கட்டும். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நம்மிடத்தில் நேர்மையான, உண்மையான தீர்ப்பும் தீர்மானமும் இருந்தேயாக வேண்டும். நாம் உண்மையை, பொய்யை முழுமையாகத் தெரிந்துகொள்ளவேண்டும்...."

ஹஹோல் அவள் கூறியதைக் கேட்டு, அவளது பேச்சுக்குத் தக்கபடி தலையை ஆட்டிக்கொண்டிருந்தான். நிகலாயும், செம்பட்டைத் தலையனும், பாவெலுடன் வந்த இன்னொரு பையனும் ஒரு தனிக் கோஷ்டியாகப் பிரிந்து நின்றார்கள். என்ன காரணத்தாலோ தாய்க்கு அந்தக் கோஷ்டியினரைப் பிடிக்கவில்லை.

நதாஷா பேசி முடிந்த பிறகு, பாவெல் எழுந்து நின்றான்.

"நமக்கு வயிறு மட்டும் நிரம்பினால் போதுமா? இல்லை," அமைதியாகச் சொன்னான். "நமது முதுகிலே குதிரையேறிக் கொண்டிருப்பவர்களுக்கு, நமது கண்களைத் திரையிட்டு மூடிக் கட்டி விட்டவர்களுக்கு, நாம் எல்லாவற்றையும் பார்க்கவே செய்கிறோம் என்பதை எடுத்துக்காட்டத்தான் வேண்டும். நாம் முட்டாள்கள் அல்ல; நாம் மிருகங்கள் அல்ல- வயிற்றை நிரப்புவதோடு திருப்தி அடைந்துவிடுவதற்காக மட்டுமல்லாமல் கௌரவமுள்ள மனிதர்களாக வாழ விரும்புகிறோம். நம்மை நரக வாழ்வுக்கு உட்படுத்தி, நம்மை ஏய்த்து வாழ்ந்துகொண்டிருக்கும், நம்மைவிடச் சிறந்த அறிவாளிகள் என்று தம்மைக் காட்டிக்கொள்ளும் நமது எதிரிகளுக்கு நாம் அவர்களுக்குச் சமதையான அறிவாளிகள், ஏன், அவர்களைவிடச் சிறந்த அறிவாளிகள் என்பதை காட்டித்தானாக வேண்டும்!"

அவன் பேச்சைக் கேட்டுத் தாயின் உள்ளத்தில் ஒரு பெருமையுணர்ச்சி உள்ளோட்டமாக ஓடிச் சிலிர்த்தது.

"அவன் எவ்வளவு அழகாகப் பேசினான்!"

"போதுமான அளவுக்குச் சாப்பிடுபவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால் சிலர்தான் நேர்மையானவர்கள்!" என்றான் அந்த ஹஹோல். "முடை நாற்றமெடுத்து நாறும் இன்றையக் கேவல வாழ்வுக்கும், எதிர்காலத்தில் ஏற்படப் போகும் மனித குலத்தின் சகோதரத்துவ சாம்ராஜ்யத்துக்கும் இடையே நாம் ஒரு பாலம் கட்டியாக வேண்டும். தோழர்களே! அதுதான் இன்று நம்முன் நிற்கும் வேலை!"

"போராடுவதற்குரிய காலம் வந்துவிட்டதென்றால், ஏன் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கரகரத்த குரலில் ஆட்சேபித்தான் நிகலாய்.

நடு இரவுக்குப் பிறகுதான் அந்தக் கூட்டம் கலைந்தது. கலையும்போது நிகலாயும் செம்பட்டைத் தலையனும்தான் முதலில் வெளியேறினர். இதைக் கண்டதும் தாய்க்கு அவர்களைப் பிடிக்கவில்லை.

அவர்களை அவள் வணங்கி வழியனுப்பும்போது "உங்களுக்கு ஏன் இத்தனை அவசரமோ?" என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.

"நஹோத்கா! என்னை வீடுவரை கொண்டுவந்து விடுகிறீர்களா?" என்று கேட்டாள் நதாஷா.

"கண்டிப்பாய்" என்று பதிலளித்தான் ஹஹோல்.

நதாஷா தனது மேலுடையணிகளைச் சமையலறையில் அணிந்துகொள்ளும்போது, தாய் அவளைப் பார்த்துக்கேட்டாள்: "உங்கள் காலுறைகள் இந்தக் குளிருக்கு மிகவும் மெல்லியவை. நான் வேண்டுமானால் உங்களுக்கு ஒரு கம்பளி உறைகள் தரட்டுமா?"

"நன்றி, பெலகேயா நீலவ்னா. ஆனால், கம்பளி உறை காலெல்லாம் குத்துமே!" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் நதாஷா.

"காலில் குத்தாத கம்பளி உறை நான் தருகிறேன்" என்றாள் தாய்.

நதாஷா ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தாள், அந்தப் பார்வை அந்த வயதான தாயை என்னவோ செய்தது; துன்புறுத்தியது.

"என் அசட்டுத்தனத்தை மன்னித்து விடுங்கள். நான் இதயபூர்வமாகச் சொன்னேன்" என்று மெதுவாய்ச் சொன்னாள் தாய்.

"நீங்கள் எவ்வளவு அன்பாயிருக்கிறீர்கள்!" என்று அமைதியுடன் கூறிவிட்டு,

## 8

தாயின் கரத்தைப் பற்றி கனிவோடு இறுகப் பிடித்து, விடைபெற முனைந்தாள் நதாஷா.

"போய் வருகிறேன், அம்மா!" என்று கூறிவிட்டு, அவளது கண்களையே பார்த்தான் ஹஹோல்; பிறகு அவன் வெளியே சென்ற நதாஷாவுக்குப் பின்னால், வாசல் நடையில் குனிந்து சென்றான்.

தாய் தன் மகனை நோக்கினாள்; அவன் வாசல் நடையருகே புன்னகை புரிந்தவாறே நின்றுகொண்டிருந்தான்.

"நீ எதைப் பார்த்துச் சிரிக்கிறாய்," என்று அவள் குழப்பத்துடன் கேட்டாள்.

"சும்மாதான், குஷி பிறந்தது, சிரித்தேன்."

"நான் கிழவியாயிருக்கலாம் முட்டாளாயிருக்கலாம். இருந்தாலும் எனக்கும் நல்லதைப் புரிந்துகொள்ள முடியும்." என்று லேசான மனத்தாங்கலுடன் சொன்னாள் அவள்.

"ரொம்ப நல்லது! நேரமாகிவிட்டது, படுத்துக்கொள்ளுங்களேன்!" என்றான் அவன்.

"படுக்கத்தான் போகிறேன்."

அவள் மேஜையிலுள்ள பாத்திர பண்டங்களை அகற்றுவதில் பெரும் பரபரப்புக் காட்டிக்கொண்டாள். அதில் அவளுக்கு ஒரு ஆனந்தம். அந்தப் பரபரப்பில் அவளுக்கு மேலெல்லாம் வியர்த்துக்கூடக் கொட்டிவிட்டது. அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிமையோடு நடந்தேறி, அமைதியோடு முற்றுப் பெற்றதை எண்ணி அவள் சந்தோஷப்பட்டுக்கொண்டாள்.

"பாஷா, நல்லா யோசனை பண்ணித்தான் எல்லாம் செய்திருக்கிறாய்!" என்று சொன்னாள் அவள். "ஹஹோல் ரொம்ப நல்லவன். அந்தப் பெண்-அம்மாடி! அவள் எவ்வளவு கெட்டிக்காரியாயிருக்கிறாள்! அவள் யார்?"

"ஒரு ஆசிரியை!" என்று சுருக்கமாகப் பதில் கூறிவிட்டு மேலும் கீழும் நடந்தான் பாவெல்.

"அவள் மிகவும் ஏழையாகத்தான் இருக்க வேண்டும். மோசமாகத்தான் உடை உடுத்தியிருந்தாள். அவளுக்கு இலகுவில் சளிப் பிடித்துவிடும். அவளது பெற்றோர்கள் எங்கே?"

"மொஸ்கோவில்" என்று பதில் கூறிவிட்டு, அவன் தன் தாயருகே வந்து நின்று மென்மையாக, உறுதி தோய்ந்த குரலில் சொன்னான்: "அவளது தந்தை ஒரு பணக்காரர். அவர் இரும்பு வியாபாரி. அவருக்குச் சொந்தத்தில் நிறையக் கட்டிடங்கள் உண்டு. ஆனால், அவள் தன் வாழ்க்கையில் இந்த வழியைத் தேர்ந்தெடுத்ததால், அவளை வெளியேற்றி விட்டார் அவர். அவள் சுக போக வாழ்க்கை வாழ்ந்தவள்; விரும்பியதெல்லாம் கிட்டக்கூடிய வாழ்க்கைதான் வாழ்ந்தாள்; ஆனால் இன்றோ அவள் இந்த இரவில், ஏழு கிலோமீட்டர் நடந்து செல்கிறாள்.."

இந்தச் செய்தியைக் கேட்டு தாய் திக்பிரமையடைந்தாள்; அறையின் மத்தியில் நின்றுகொண்டு புருவத்தை உயர்த்தித் தன் மகனைப் பார்த்தாள்; பிறகு அமைதியாகக் கேட்டாள்:

"அவள் நகருக்கா போகிறாள்?"

"ஆமாம்."

"ச்சூ! ச்சூ! பயமில்லையா அவளுக்கு?"

"ஊஹூம், அதெல்லாம் பயப்படமாட்டாள்" என்று கூறிச் சிரித்தான் பாவெல்.

"ஆனால்..ஏன் போகணும்? இன்றிரவு இங்கு தங்கியிருக்கலாமே? என்னோடு படுத்துக்கொண்டிருக்கலாமே!"

"அது சரியல்ல, காலையில் அவளை இங்கு யாரும் பார்த்துவிடக்கூடாது. அதனால் சிக்கல் வரும்."

அவனது தாய் ஜன்னலுக்கு வெளியே ஒரு சிந்தனையுடன் பார்த்துவிட்டுக் கேட்டாள்,

"இதிலெல்லாம் என்ன ஆபத்து இருக்கிறது; என்ன சட்ட விரோதம் இருக்கிறது என்பது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. பாவெல்! நீங்கள் தப்பாக ஒன்றும் செய்யவில்லை, இல்லை..செய்கிறீர்களா?" என்று அமைதி நிறைந்த குரலில் கேட்டாள்.

அதைப்பற்றி அவ்வளவு தீர்மானமாக அவளால் சொல்ல முடியவில்லை; எனவே தன் மகனின் தீர்ப்பை எதிர்பார்த்தாள்.

"நாங்கள் தப்பாக எதுவுமே செய்யமாட்டோம்" என்று அவளது கண்களை அசையாமல் பார்த்வாறு உறுதியாகச் சொன்னான் பாவெல். "ஆனால் நாங்கள் அனைவரும் என்றோ ஒரு நாள் சிறைக்குத்தான் போவோம். நீயும் இதைத் தெரிந்து வைத்துக்கொள்."

அவளது கைகள் நடுங்க ஆரம்பித்தன.

"ஆண்டவன் அருள் இருந்தால், நீங்கள் எப்படியாவது தப்பித்துவிடுவீர்கள். இல்லையா?" என்று அமுங்கிப்போன குரலில் கேட்டாள்.

"முடியாது" என்று மெதுவாகச் சொன்னான் அவன்.

"நான் உன்னை ஏமாற்ற விரும்பவில்லை. தப்பிக்கவே முடியாது!"

அவன் புன்னகை செய்தான்.

"சரி, நீ மிகவும் களைத்திருக்கிறாய். போ, படுக்கப்போ, நல்லிரவு!"

பாவெல் சென்ற பிறகு தன்னந்தனியாக நின்ற தாய் ஜன்னலருகே சென்று வெளியே பார்த்தவாறே நின்று கொண்டிருந்தாள். ஜன்னலுக்கு வெளியே மூட்டமாய்க் குளிராய் இருந்தது. தூங்கி வழிந்து கொண்டிருந்த வீட்டுக் கூரைகளின் மீது படர்ந்துள்ள பனித் துகள்களை ஒரு காற்று விசிறியடித்து வீசியது; அந்த ஊதைக் காற்று சுவர்களில் மோதியறைந்து, தரையை நோக்கி வீசும்போது கோபாவேசமாய் ஊளையிட்டது; சிதறிக்கிடக்கும் பனிப்படலங்களை தெரு வழியே விரட்டியடித்துக் கொண்டு பின் தொடர்ந்தது.

"கருணையுள்ள கிறிஸ்து பெருமானே, எங்களைக் காப்பாற்று", என்று அவள் லேசாக முனகிக் கொண்டாள்.

அவளது கண்களில் கண்ணீர் பொங்கியது. தனக்கு வரப்போகும் கெடுதியைப் பற்றி அமைதி நிறைந்த தன்னம்பிக்கையோடு சொன்ன பாவெலின் எதிர்காலத்தைப்பற்றிய எண்ணம் இருளிலே, குருட்டுத்தனமாய்ப் பறந்து மோதி விழும் பூச்சியைப் போல, அவளது இதயத்துக்குள் குறுகுறுத்தது. அவளது கண் முன்னால் பெரியதொரு பனிவெளி பரந்து கிடப்பதுபோலவும், அந்தப் பனிவெளி பரந்துகிடப்பது போலவும், அந்தப் பனிவெளியில் ஒரு பேய்க்காற்று வேகமாக வீசிச் சுழன்று ஊடுருவிப் பாய்ந்து, கீச்சுக் குரலில் கூச்சலிடுவது போலவும் தோன்றியது. அந்தப் பனிவெளியின் மத்தியிலே ஒரு இளம் பெண்ணின் சிறிய நிழலுருவம் ஆட்டங்கண்டு தடுமாறிக் கொண்டிருந்தது. அந்தச் சுழல்காற்று அவளது பாதங்களின் மீது சுழன்று வீசி, அவளது ஆடையணிகளைப் புடைத்துயரச்செய்தது; ஊசி போல் குத்தும் பனித்துகள்களை அவளது முகத்தில் வீசி யெறிந்தது. அவள் சிரமத்தோடு முன்னேறினாள்; அவளது பாதங்கள் பனிப்பாதையில் சறுக்கி மூழ்கின. ஒரே குளிர்; அதிபயங்கரம். இலையுதிர் காலத்துக் காற்றில் குனிந்து கொடுக்கும் தன்னந்தனியான ஒரு புல்லிதழைப்போல, அவளது உடம்பு முன் நோக்கி வளைந்து குனிந்திருந்தது. அவளுக்கு வலது புறத்தில் சதுப்பு நிலத்திற்கிளைத்தெழுந்த ஒரு ஆரண்யம் நிமிர்ந்து நின்றது; அந்தக் காட்டில் உள்ள நெட்டையான பிர்ச் மரங்களும், மூளியான அஸ்பென் மரங்களும் அபாயக் குரலில் குசுகுசுத்தன. அதற்கும் மேலாக, நகர்ப்புறத்து விளக்குகளின் ஒளி மூட்டம் பளபளத்தது........

"ரட்சகரே! எம்மீது இரக்கம் காட்டும்" என்று பயத்தால் நடுங்கிக்கொண்டு முணுமுணுத்தாள் அந்தத் தாய்.....

(தொடர்ந்து வரும்)

என்றும் முதலிடம்
உலகில்
மிகச் சிறந்த நாவல் எது?
ஒரே பதில்
தாய்! தாய்!! தாய்!!!

உண்மைகள்
எப்போதும் வசீகரமானவை
அதுதான் 'தாய்' நாவல்
எப்போதும்
முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!
ரகுநாதனின்
மொழி பெயர்ப்புநடை
பிரமாதப்படுத்துகிறது.
-ஆ.ர்.

# கவிதா இரு வேறு உலகங்களில்...



அஸ்வதி

'கவிதா, இங்கை வாங்கம்மா'

'கவிதா, படுக்கிறதுக்கு முன்னம் பாலைக் குடியம்மா'

'கவிதா, தமிழ்ப்படம் போகுது. பாடப் புத்தகத்தை வைச்சிட்டு ஓடிவா'

'கவிதா, முன்வீட்டு, பக்கத்துவீட்டு பிள்ளைகளோடை விளையாட வேண்டாம். பந்தை எடுத்துக்கொண்டு வா நாங்கள் விளையாடுவம்'

இவை அன்றாடம் கவிதா பெறும் கட்டளைகளில் மிக முக்கியமானவை.

ஒருநாள் மத்தியானப் பொழுதில், ஏதோ ஒரு நிறுவனத்தின் தலைவியுடன் எங்கள் வீட்டுக்குள் காலடி எடுத்துவைத்தாள் பதினொரு வயதான கவிதா.

"இந்தக் குழந்தையின்ரை பெயர் கவிதா. தகப்பன் சரியான குடிகாரன். குடிவெறியிலை கவிதாவின்ரை அம்மாவையும் அடிச்சு கலைச்சுப் போட்டான். (குடிகாரனாயிருப்பதால் 'டார்' தேவையில்லை) கவிதாவுக்கும் ஒரு கையை முறிச்சுப்போட்டான்."

அவளின் வலதுகை சிறிது கோணலாயிருந்தது. முகத்தில் அப்பாவித்தனம் தாறுமாறாக அப்பியிருந்தது.

அவளைக் கூட்டிவந்த பெண்மணி தொடர்ந்தார்:

"தாயும் இல்லாமல் இந்தக் குழந்தை எப்பிடிக் குடிகாரனோடை இருக்கிறது? தாய் முந்தி எங்கடை நிறுவனத்திலை வேலை பார்த்தது. இப்ப பாவம் எங்கை எண்டே தெரியாது. அவனோடை கவிதாவை விட்டு வைக்க ஏலாது எண்டபடியால் உங்களெட்டைக் கூட்டியந்தனான். நீங்கள் வீட்டு வேலைக்கு வைச்சிருக்கலாம்."

"சரிவராது. நீங்களே கூட்டிக்கொண்டு போங்கோ. பதினொரு வயதுப்பிள்ளையை வீட்டுவேலைக்கு வைச்சிருக்கிறது பாவம். சட்டப்படி குற்றம்" நான் முந்திரிக்கொட்டையானேன்.

"நான் வேலைக்கு எண்டு ஒரு பிள்ளையைக் கூட்டியரச் சொல்லேல்லை. வீட்டிலையிருக்கிற நீங்களெல்லாம் வேலைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் போக நான் தனிய வீட்டிலை இருக்கவேணும். ஒரு பிள்ளை இருந்தால் எனக்கும் பகலிலை பொழுதுபோகும்." அம்மம்மா தனது தேவையை வெளிப்படுத்தினார். எனக்கும் புரிந்தது.

கவிதாவுக்குப் புது உடுப்பு... விளையாடப் பொருட்கள்.... படிக்கப் புத்தகம்... பகலில் அம்மம்மா வீட்டோடு ஆசிரியையானார்.

மாலையில் தேசிய கீதத்தில் தொடங்கி 'நொயலின் ஹொண்டா' தெத்துப்பல் தெரிய செயற்கையாச் சிரித்துவிடைபெறும் வரை ரீவி பார்த்தாள்.

பகலில் சிலபோது பொழுது போவதில்லை. "ஏதாவது வேலை தாங்க அம்மம்மா" என்பாள்.

அம்மம்மா பார்வையாலேயே அடக்குவார்.

காலப்போக்கில் கவிதா வீட்டில் ஒரு அங்கமானாள்.

"கவிதா இந்தா 'கன்டோஸ்' வேலையால் வரும் அப்பா.

"கவிதா இந்தா 'ஸ்டிக்கர்'" பாடசாலையால் வரும் தங்கை.

"கவிதா இந்தா புத்தகம், கொப்பி, பென்சில்" நான்.

ஒருநாள் மாலையில் கவிதாவை எமக்கு அறிமுகப்படுத்திய பெண்மணி வந்தார்.

"கவிதாவை நான் திருப்பிக் கூட்டிக்கொண்டு போகப் போறன். அவளின்ரை தகப்பன் பொலிஸிலை முறைப்பாடு செய்திருக்கிறான்."

கவிதாவின் முகம் சுருங்கிப்போனது.

அம்மம்மாவை அணைத்துக்கொண்டாள்.

அம்மம்மா திகைத்து நின்றார்.

"கூட்டிக்கொண்டு போய் படிக்க விடுவானா கவிதாவின்ரை அப்பா?" தங்கை வெகுளித்தனமாகக் கேட்டாள்.

"சீச்சி, இவளுடைய கஷ்டத்தில் குளிர் காயப் போகிறான் அந்த அயோக்கியன்."

"இவளை வேறெங்காவது வேலைக்கு விட்டு அவளது இரத்தத்தை கசிப்பாக்கப் போகிறான் நாய்"

"இப்பிடி ஒரு நிலை சுழற்சியாக அன்று தொட்டு வந்துகொண்டேயிருக்கிறதே-- நடவடிக்கை எடுக்க யாருமே இல்லையா?"

"ஏன் இல்லை? இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சுழற்சியைப் பற்றி மட்டுந்தான் யோசிப்பார்கள்."

"இந்தக் குழந்தையின் வாழ்க்கைகூட அரசியலாப் போச்சு" அப்பெண்மணி நீண்ட பெருமூச்சு விட்டார்.

பிரிய மனமின்றி, கண்ணீருடன் கவிதா பிரிந்தாள்.

அவளுக்கென ஒரு புதிய உலகம் காத்திருக்கிறது.

" கவிதா, எழும்பு, விடியவிடிய என்னடி நித்திரை?"

"பாத்திரங்களைக் கழுவு!"

"வீட்டைக்கூட்டு, தூசி தட்டு!"

"நாயைக் குளிப்பாட்டு!"

"உனக்கென்ன ரீவியும் படமும்? போய் பின் விறாந்தையிலை படு!"

நொயலின் வந்து 'குட்நைட்' சொல்லிச் சிரிப்பதற்கு முன்பாக கவிதா அழுது அழுது உறங்கிப்போவாள்.

**பின்குறிப்பு:** மேலும் ஆயிரம் ஆயிரம் கவிதாக்களை உருவாக்குவதற்கான யோசனையில் ஒரு சுழல் நாற்காலி இருப்பத்து நான்கு மணிநேரமும் சுற்றியபடியே இருக்கும்.

(கற்பனையல்ல)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பிள்ளைக்காக.........!

ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்

தன் மனைவியின் விழிகளில் கோலமிட்டிருந்த கண்ணீரை பரிவுடன் துடைத்துவிட்டான் சசிகரன்.

ஆனாலும் அவளால் பொத்துக் கொண்டு வந்த கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமலிருந்தது. தன் கணவனின் மடியில் முகம் புதைத்து குலுங்கி குலுங்கி அழத் தொடங்கினாள்.

"பத்மா...பத்மா கண்ணு..! சும்மா ஏன் மனசபோட்டு குழப்பிக்கொள்கிறாய்? எங்கட சனம் என்ன சொன்னாலும் நான் உன்னவிடமாட்டன். வீணா கவலப் படாத!"

மெல்ல அவள் தலையை நிமிர்த்தி விழிகளிலிருந்து வடிந்த கண்ணீரை மீண்டும் துடைத்துவிட்டான்.

"என்னால தாங்க ஏலாம கிடக்கு, அந்த பொன்னம்மாக்கா சொன்ன சொல்ல! நான் செய்த பாவமோ தெரியேல்லையாம் எண்ட வயித்தில குழந்த தங்குதில்லையாம். 'மலடி மலடி'யென்று என்ன எத்தினபேர் திட்டினம்? எப்படிங்க கேட்டுக்கொண்டு கவலப்படாம நான் இருக்கேலும்?"

"பத்மா...நாங்க ஒருத்தருக்கும் பாவம் செய்யேல்ல தானே! கடவுள் எங்களுக்கும் ஒரு குழந்தய கட்டாயமா தருவார். நானும் உனக்கு ஒரு குழந்தை மாதிரித்தானே நடந்துகொள்ளுறன்..! அழாத!"

அவளை தன் மார்போடு அணைத்துக் கொண்டவன் தன் விழியில் கோலமிட்டிருந்த கண்ணீரை மனைவிக்கு தெரியாமல் துடைத்துவிட்டுக்கொண்டான்.

□□

பத்மா - சசிகரன் தம்பதியின், திருமண வாழ்வு இன்னும் சில நாட்களில் ஏழு வருடத்தை தொட இருக்கிறது. தமது இல்லற வாழ்க்கையில் குழந்தையில்லையென்ற துக்கத்தைத் தவிர வேறு எந்த விதமான கவலைகளும் அவர்களைத் தொட்டுக்கூட பார்த்ததில்லை.



காதல் திருமணம் என்பதால் ஒருவர் மேல் ஒருவர் உயிரையே வைத்திருந்தார்கள். ஆனால் குழந்தையில்லையென்ற எண்ணமும் அதன் மூலம் எழும் வேதனையும் அக்கம் பக்கத்துக்காரர்களின் பேச்சுகளும் உறவினர்களின் குத்தல் வார்த்தைகளும்தான் இவர்களை வாட்டி வதைத்தன. இந்த விடயத்தில் தன் மனைவியின் மனம் நோகும்படி சசிகரன் நடந்துகொண்டதேயில்லை.

□□

அன்று புதன்கிழமை. சசிகரன் அலுவலகத்திலிருந்து நேரத்தோடு வந்திருந்தான்.

"ப....த்...மா!"

தினமுரசின் 'லேடீஸ் ஸ்பெசலி'ல் மூழ்கியிருந்தவள் சசிகரனை கண்டதும் எழுந்துகொண்டாள்.

"பத்மா....ஒரு குட்நியூஸ்..!"

"என்னங்க?"

"வாற மாதம் பத்தாம் திகதி வெளி நாட்டில இருந்து ஒரு 'லேடி டொக்டர்' இங்கே வாறாவாம். ஸ்பெஷலிஸ்டாம்! நாமளும் போய் 'செக்' பண்ணி பார்ப்பம்! அப்போ சரி இந்த பெரிய பத்மாவுக்கு ஒரு சின்ன பத்மாகுட்டி கிடைக்கிற வழி தெரியும்!"

சசிகரனின் நம்பிக்கையால், அவள் மகிழ்ந்துப்போனாள். ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் என்ன பேசுவதென்றே அவளுக்குப் புரியவில்லை.

இல்லாமலிருக்குமா? இந்த விடயத்தில் இவள் பட்ட வேதனைகள் எத்தனை? எத்தனைபேர் தன் முன்னால் மலடியென திட்டியிருக்கிறார்கள்! ஏன் இந்த சமுதாயமே இப்படியானவர்களை ஏளனமாகத்தானே பார்த்துக்கொண்டிருக்கிறது!

□□

அன்று பத்மா- சசிகரன் தம்பதியின் மணவாழ்க்கைக்கு சரியாக ஏழு வருடம் பூர்த்தியாகியிருந்தது. அதனையிட்டு சிறியதோர் விருந்துபசாரம் ஏற்பாடாகியிருந்தது. சசிகரன் அலுவலகத்திலிருந்து சிலரையும் அழைத்திருந்தான்.

"சசி....ஏண்டா மச்சான் இன்னும் நீங்கள் குழந்த பெத்துக்கொள்ளுற ஐடியா இல்லையோ?"

"மச்சான் இனியும் குடும்பக் கட்டுப்பாட்டை கடைப்பிடிச்சா சனம் ஒரு மாதிரிப் பேசும்! அடுத்த முற வரேக்க உன்ட கையில குழந்தையும் இருக்கவேணும் புரியுதோ?"

நண்பர்களின் கேலிப் பேச்சை கேட்டவனுக்கு என்னவோ போலிருந்தது. அவன் பத்மாவைப் பார்க்க பத்மா மௌனமாய் தலை சாய்த்துக்கொண்டாள்.

இரண்டாவதாக பேசியவனின் அருகில் அமர்ந்திருந்த பத்மாவின் சித்தி, அவனிடம் மெதுவாக பேசியது பத்மாவின் காதுகளுக்கு மட்டுமில்ல, சசிகரனின் காதுகளுக்கும், ஏன் அங்குள்ள யாவரின் காதுகளுக்கும் தெளிவாகக் கேட்டது.

"தம்பி என்ன பகிடி விடுறியள்? ஏழு வருசம் ஆச்சென்று நாங்கள் கவலப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உங்கள் பத்மாவுக்கு இனியென்னென்டு காணும் குழந்த கெடைக்கப் போகுது? இவள் மலடி மலடியென்று சனமே சொல்லுதே! நீர் பகுடி விடுறீர்! அது இதெண்டு!"

அங்கு கூடி நின்ற சனமே பத்மாவையும் சசிகரனையும் பரிதாபமாய் பார்க்க... அவமானத்தில் சிக்கிய பத்மா விம்மியபடி உள்ளே ஓடினாள். சசிகரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவளை தேற்றுவதற்கென்று உள்ளே ஓடியவன் கட்டிலில் கிடந்தவளை தூக்கி நிமிர்த்தினான். ஆனால் அவள் உயிரற்ற உடலாய் கிடந்தாள்.

"பத்...மா!"

என்ற சசிகரனின் அலறல் சத்தம் அந்த வீட்டையே அதிர வைத்தது. ஒருவேளை அது அவனின் இறுதிச் சத்தமாகவும் இருக்கலாம்!

## வித்தியாசமான முயற்சி

அன்று விடுமுறை தினம். விஜியின் அண்ணன்மார் கொழும்பிலிருந்து வந்திருந்தனர். அவர்களைக்காண விஜியின் சின்னம்மாவின் பிள்ளைகள் வந்திருந்தனர். சிற்றப்பாவின் பிள்ளை ரகு வராததையும் பற்றி பேசிக்கொண்டிருக்கும் வேளையில் "ஹலோ" என்றவாறு உள்ளே நுழைகிறான்.

"அப்பாடா ஆறுபேரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். இன்றைக்கு வீடே இரண்டுதான்" என அம்மாவிடம் கூறிக்கொண்டிருக்கையிலே "விஜி" என்ற அண்ணாவின் குரல் அழைக்கிறது.

"என்ன அண்ணா?"

"டீச்சர் காலையிலேயே எங்க போய் விட்டாங்க?"

இன்று டீச்சரை என்ன பாடு படுத்தப் போறாங்களோ என்று மனதுள் நினைத்தவள், "பாடசாலை வேலையாக போனாங்க இன்று வர நேரமாகும்" என்றாள் விஜி.

"சே இன்று போரிங்..."

"அது தானே"..

இவ்வாறு கூறிக்கொண்டிருக்கையில் "ஆமாண்டா அந்த டீச்சர் பாவம்.. போர்டிங்காக இந்த வீட்டில் இருக்கிற நேரம் அவள கேலி செய்து அழ வைப்பது நல்லாயில்லை... எந்த நாளும் ஒரு மாதிரி இல்ல" என்று ஏசினாள் அம்மா. அவர்களுக்கு அது உறைக்கவா போகிறது...?

தூரத்தில் பிரதீபா (டீச்சர்) வருவது தெரிய அனைவரும் ஒளிந்து கொள்கின்றனர். முன்னால் வந்த விஜியை அண்ணா தடுக்கிறான்... பிரதீபா வீட்டினுள்ளே நுழைகிறாள்.

"விஜி நல்ல வேளை... இன்று ஒருவரையும் காணோம்" என்றவாறே அமர்கிறாள்...

"டீச்சரம்மா உங்க பாடம் சரியில்ல.." என்று பாடியவாறே ரகு வர... அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் வந்து அமர்ந்து கொண்டனர்.

"டீச்சர் நேற்று உங்கள தியேட்டர்ல கண்டேனே.."

"ஏன்.. அண்ணா உங்களோடுதானே படம் பார்க்க வந்தேன். இப்போ இப்படி சொல்றீங்களே?".. என பிரதீபா கூற "வெரி குட் அப்படிச் சொல்லுங்க டீச்சர்" என்றாள் விஜி.

"இல்ல விஜி இவ்வளவு நாள் எங்களை கேலி பண்ணினாங்க.. இன்று இதில் எழுதியுள்ளது என்னவென்று சொல்லுறாங்களா பார்ப்பம்." என்றவாறே ஒரு தாளை நீட்டுகிறாள் பிரதீபா.

"அதுதான் சரி... ஆனால் சொல்லுங்க... 10 நிமிடம்தான்."




"அட இதென்னடா ஒன்றுமே புரியல்ல...ம்....."

"மரம்...வாத்து...மலை.."

"இதுவும் வேணும்... இன்னமும் வேணும்"

"சொல்லாட்டா வெட்கக்கேடு..."

10 நிமிடம் முடிய நழுவிச் செல்லும் ரவியை தடுத்து நிறுத்துகிறாள் விஜி.

அனைவரும் கண்டுபிடிக்க முடியாது விழிக்க...

"தாஜ்மஹால் தேவையில்லை அன்னமே! அன்னமே...

காடு, மலை, நதிகள் எல்லாம் காதலின் சின்னமே"

என பாடுகிறாள் பிரதீபா..

அசடு வழியும் அண்ணன்மாரைப் பார்த்து... "எப்படி போதுமா?" என்கிறாள் விஜி.



கடந்தவாரம் பாடசாலையில் ஒரு மாணவனின் புத்தகத்திலிருந்து இந்த துண்டை எடுத்து அவனை ஏசினாலும், இன்று அதனைக்காட்டி இவர்களையும் மட்டந்தட்டி விட்டதை எண்ணி மனதால் பாராட்டுகிறாள்...பிரதீபா.

## பாராட்டு

ஜெ.புளோரன்ஸ்

நான் 'டியூட்டரி'க்குள் நுழையும் போதே ஏராளமான புன்னகையுடன் நண்பர்கள் கைகுலுங்கினர். "நேற்று வந்த உங்கட கத ரொம்பவும் நல்லா இருந்திச்சி." நான் 'தேங்க்ஸ்' சொல்லி புன்னகைத்தேன். "அந்தக் கத 'ரியலா' இல்ல கற்பனையா?"- ஒருவர் கேட்டார். "கதையின்ர முடிவ நீங்க பார்க்கலியா?" "பார்த்தம், அந்த தமிழ் 'கேர்ள்' இப்பவும் உங்களுக்கு கடிதம் எழுதுறாவா?" நான் 'ஓம்' என்றேன். பாவம் அவ, அவட சமூகத்திலேயும் துரோகி எண்டு ஒதுக்கி விட்டிருவாங்க" ஒருவர் அவளுக்காய் இரங்கி அனுதாபமாய் கதைத்தது காதில் விழுந்தது.

சில கேள்விகளுக்குப் பதில் தேட முடியாமல் நான் தவிப்பதுண்டு. எல்லாமே என் அனுபவமாக கற்பனித்துக்கொண்டு, துளைக்கும்போது, விடைகள் எப்படி வரும்? ஆண்களிடம் தப்பிவிடலாம். இந்தப் பெண்கள் இருக்கிறார்களே, கேட்கப் பிடித்தால் விடமாட்டார்கள். பூர்வீகம் வரை சொல்லாவிட்டால் மண்டை வெடித்துவிடும்.

என்னைப் பொறுத்தவரை வாசகர்கள் தான் என் உயிர் நாதம். என்னை இனங்கண்டு பேச வருபவர்களை ஏமாற்றி அனுப்புவதற்கு மனம் விரும்புவதில்லை. அண்மையில் என்னைப்போலவே எழுத வேண்டும், என்று துடித்த ஒரு இளம் வாசகன் மரணமானதை கேட்டு என் விழிகள் கலங்கிவிட்டன. உறவினர்களின் மரணச் செய்திகூட, எனக்குள் பாதிப்பை உண்டாக்கவில்லை. ஆனால் என் கவிதையை நேசித்த ஒருவன், என்னைக் காணாமல் என் எழுத்துக்களின்மேல் மையல் கொண்ட வாசகனின் இழப்பை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அவன் சாவதற்குமுன் ஒரு கதைக்கு தலைப்பிட்டு, எனக்கு அனுப்பி, திருத்துவதற்காக கடிதம்கூட எழுதி வைத்துள்ளான். அந்தக் கதையின் தலைப்பை அவன் கையெழுத்துடன் வீட்டார் எனக்கு அனுப்பி வைத்தனர். அவனின் அந்த கன்னி முயற்சியை நான் போற்றிப் பாதுகாக்கின்றேன். (நிஜம்)

இந்த அன்புத் தொல்லைகளையும் வினாச் சரங்களையும் இன்ப வேதனையாகத் தாங்குவதில் எனக்குள் அலாதியான மகிழ்ச்சி வெள்ளம் உடைப்பெடுக்கும். காதல் சமாச்சாரங்களை எழுதிவிட்டால் போதும் என்னுடன், யாரோ ஒரு முகம் தெரியாத காதலியை இணைத்து அறுக்கத் துவங்கி விடுவார்கள். அவர்கள் எழுதும் கடிதங்களுக்கு ஒரு 'போஸ்ட் கார்ட்'டிலேனும் நாலுவார்த்தை எழுதிப்போடாவிட்டால் எனக்கு தூக்கம் வராது. அப்படியொரு நல்ல பழக்கத்தை வழக்கமாக்கிக்கொண்டேன். அவர்களின் அன்பும், ஊக்கமும், சோர்ந்து கிடக்கும் என்னை தூசி தட்டி எழுப்ப வைக்கும்- எழுத வைக்கும். இந்த அன்பின் ஆகர்ஷிப்பில் தத்தளித்து, மூச்சுத்திணறுவதும் ஒரு சுகானுபவம்தான்.

அதோ என்னை நோக்கிய 'பர்தா' படையெடுப்புகள் வருகின்றன. என்னவெல்லாம் கேட்டு வம்பில் மாட்டிவிடப் போகிறார்களோ? மனம் துடித்துக் கொண்டிருக்கையில் சேர் வந்துவிட்டார். வகுப்பு முடிந்ததும் அவசரமாக வெளியேறினேன். நான் போகவேண்டிய பஸ் தவறிவிட்டால் கடமையாற்றும் நிறுவனத்தாரிடம் திட்டுவாங்க வேண்டும். படிகளைத் தாண்டும்போது, இளமையாய் ஒரு குரல், "கொஞ்சம் வெய்ட்பண்ண முடியுமா? உங்கட, 'வானத்து நிலவுக்கு' கவிதை வெரி ஸ்வீட், அந்த கவிதையைப் படிச்சுப் பார்த்ததில் உங்களுக்கும் 'கேர்ள் ஃபிரண்ட்' இருக்குண்ணு அர்த்தம்- அப்படித்தானே..? 'கேர்ள் ஃபிரண்ட்' என்றால் என்ன அர்த்தம்?

சகஜமாய் பழகும் அனைவரும் நல்ல 'ஃபிரண்ட்ஸ்'தான். கவிதைக்கும், அவளுக்கும் தனிப்பட்ட சம்பந்தம் இல்லயே? நான் நேரிடையாக பதில் சொல்லவில்லை. இக்கட்டான நேரத்தில் சிரித்து மழுப்பி விடுவதைப்போல் இதற்கும் முற்றுப் புள்ளியிட்டேன். "மௌனமா இருக்கிறதப் பார்த்தா 'கேர்ள் ஃபிரண்ட்' இருக்குன்னு அர்த்தம்; அப்படித்தானே?" இன்னும் இரண்டொருவர் கூடி விட்டனர். அதற்கும் பதில் கூறவில்லை.

இன்னொருத்தி கேட்டாள், "உங்களுக்கு எப்படி கவிதை எழுதச் தோணிச்சி? எப்ப எழுதினீங்க?" சம்பவங்களை கோர்த்துப் பார்த்தேன். 'நான் ஏன் எழுதினேன். எப்போது எழுதத் தொடங்கினேன்? எப்படி கவிதை பிறந்தது?' விடைகாண முடியவில்லை. ஆனாலும் பதில் சொன்னேன். ஒரு ஆங்கில கவிஞனின் கருத்தை காப்பியடித்து சொன்னேன்.

"If you don't ask me what Poetry is I know what poetry is; but, if you ask me what poetry is I do not know what it is"

**"கவிதை என்றால் என்ன என்று என்னிடம் கேட்காவிட்டால், கவிதை என்றால் என்ன என்று எனக்குத் தெரியும். ஆனால் கவிதை என்பது என்ன வென்று என்னிடம் கேட்டால், அது என்னவென்று எனக்கும் தெரியும்.**

என் பதிலை புரிந்துகொண்டார்கள் போலும். நீண்ட மௌனத்தின்பின் திடீரென ஒரு கேள்வி. "இப்ப ஒன்றும் எழுதலியா?" "எழுதப் போறன்." "அதற்கு என்ன 'தலைப்பு' கொடுப்பீங்க?" 'சங்கடங்கள்' "எந்தப் பேப்பருல வரும்?" "தினமுரசில்" அவர்களுக்கு தலைப்பு புரிந்ததோ இல்லையோ? "அடுத்த முறை தினமுரசு கண்டிப்பா வாங்கணும். அப்ப நாங்க வாறம்" உங்க 'கேர்ள் ஃபிரண்ட்ட' கேட்டன்னு சொல்லுங்க" எனக்கு சிரிப்பு வெடித்தது. அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் நான் ஏற வேண்டிய பஸ் என்னைத் தாண்டி வெகுதூரம் ஓடிக்கொண்டிருந்தது.

## சங்கடங்கள்



ஓட்டமாவடி - அறபாத்

### வாசகர் கவனிக்க

முரசுடன் உங்கள் சகல கடிதத் தொடர்புகளுக்கும், ஆக்கங்கள் அனுப்பி வைக்கவும் பின்வரும் முகவரியை மட்டுமே குறிப்பிடுங்கள்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

மு.குறிப்பு: பதிவுத் தபால்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத ஆக்கங்கள் திருப்பியனுப்பப்படமாட்டாது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இலக்கிய நயம்



**தா**ய் மொழியாய் செந்தமிழீழ சொந்தமெனக் கொண்டவர்க்கு தைத் திருநாள் இனிக்கும்.

செங்கதிரோன் வானில் வர உழவர் திரு முகங்களிலே உவகைப் பூ மலரும்.

காதலனை கண்டதுபோல் கதிரவனைக் கண்டதுவும் பசுந்தளிர்கள் பனிவிலக்கி கதிரவனை இரசிக்கும். நறுமலர்கள் நாணமெனும் மொட்டவிழ்த்து கதிரவனின் கதிர் கரங்கள் தழுவுதலை விரும்பும்.

உயிர் மூச்சாய் தமிழ் இருக்க அதற்கொரு இன்னல் வந்தால் பொங்கும் தமிழ் மறவர்கள் போல், பானையிலே பால் பொங்கி தகிக்கும்.

தமிழர்களின் விழா, உழவர்களின் திருவிழா தைத் திங்கள் பெருவிழா.

நன்றி மறவாதது நம் தமிழ் பண்பாடு. நன்றி நினைப்பதில் நமக்கில்லை ஈடு என்று சூரியனுக்கே படையலிடும் தித்திக்கும் தேன் தமிழ் திருநாள் தைப் பொங்கள் பெருநாள்.

நெடு வயல் நெற்கதிரால் நிறைவது போல உள்ளமெனும் வயல் உவகையாலே பூரிக்கும் திருநாள் பொங்கலுக்கு ஈடுண்டோ இணையுண்டோ, இனிக்கும் நாள்



# பொங்கித்தான் கேட்டாள்!

தருவது **ரசிகன்**

வேறுண்டோ என்றெல்லாம் தமிழர் வீடுகளில் கொள்ளாத மகிழ்ச்சி.

மாறன் வீட்டிலும் மகிழ்ச்சிக்கு குறைவில்லை.

"நாளை பொங்கல். காலையிலே எழவேண்டும். இந்த வேலையெல்லாம் இன்று வேண்டாம். எடுங்கள் கையை!"

என்றாள் பொன்னி. மஞ்சத்திலே சாய்ந்திருந்த மாறன் அடர்ந்த மீசைக்குள்ளே புன்னகைத்தான்.

"தை மகள் வரட்டுமடி நாளை. அத்தை மகளே என்னை வதைக்காதே அதனால் விரயமாக்காதேயடி இந்த நாளை!"

என்றான் மாறன்.

"என்ன வேண்டும் இப்போது?"

போலிக் கோபம் காட்டி சலங்கை நாத வார்த்தைகளால் சிணுங்கினாள் பொன்னி.

"பசிக்கிறதடி எனக்கு!"

"உண்ணத் தந்தது போதாதோ?"

"உன்னைத் தரவில்லையே நீ இன்னமும்! இது அன்னப் பசியில்லையடி. ஆசை எண்ணப் பசி! உன் அழகு எழில் வண்ணம் கண்டதனால் வந்துவிட்ட பசி!"

மாறன் அவள் கன்னம் தொட்டு மெல்லக் கிள்ளினான். ஏற்கனவே சிவந்திருந்த கன்னம் கிள்ளப்பட்டதால் மேலும் நிறம் அதிகப்பட்டது.

"ஒரு நாள் பொறுத்தால்
என்னவாம்? பொறுத்தார் அரசாள்வார்!"

"பொறுத்தார் அரசாள்வார், ஆனால் ஆசையை அடக்கி ஆள்வாரோ? அரசாளும் ஆசையுமில்லை எனக்கு!"

"வேறு என்ன ஆசையாம்?"

"இந்த அழகரசியை ஆளும் ஆசை!"

"நேரம் சரியில்லை!"

"வானத்திலே நிலவெரியும் நேரம் இது. என் உள்ளத்திலே ஆசையெனும் விளக்கெரியும் வேளை இது. மஞ்சத்திலே மலர் கிடக்கும் நேரம். வண்டை பார்த்திருக்க மட்டும் சொல்வதென்ன ஞாயம்?"

"புலம்பாதீர்கள்! பால் பொங்கலோடு பழச்சுளையும் சேர்த்து படைத்திடுவேன் காலை! இப்போது விழி மூடித் தூங்குமாம் இந்தக் காளை!"

"கனியிரண்டு, அந்த கனிகள் தாங்கும் மலருடலை தாங்கும் வாழைத் தண்டிரண்டு, என் விருப்பம் மறுத்துரைக்கும் பலாச்சுளையிரண்டு இவை எதுவும் கிட்டாமல் தூங்கச் சம்மதிக்குமோ என் விழியிரண்டு?"

"தூங்க நினைத்தால் தூங்கலாம்!"

"தாங்க நினைத்தால் நீ என்னை அழகுடலால் தாங்கலாம்!"

"மறுக்கவில்லை. இன்று மட்டும் பொறுக்கத்தான் சொல்லுகிறேன்!"

"விழி வாளை உருவியவள் நீ. வேறு வழியில்லை என்று போருக்குத் துடிக்கிறது எனது மனம்! மதியுண்டு உனக்கு! நினைத்துப்பார் 'பொறு' என்று சொல்வது இந்த நேரத்திற்கு பொருத்தமோ என்று!"

தலையிலடித்துக்கொண்டாள் பொன்னி. தழுவுவதுபோல கரங்களை விரித்து நெருங்கினான் மாறன்.

மஞ்சத்தில் அசைந்து மலருடலை நகர்த்திக்கொண்டு,

"பஞ்சத்தில் அடிபட்டதுபோல ஏன் தவிக்கிறீர்கள்?"

என்று கேட்டாள் இதழ் கதவு திறந்து பொன்னி.

"பஞ்சத்தில் அடிபட்டாலும் பிழைத்துக் கொள்ளலாம். உன் நெஞ்சத்தில் பொறிவைத்தாய் பிடிபட்டுக்கொண்டு விட்டேன். பிழைத்துக்கொள்ளவும் முடியாமல், பகைத்துக்கொள்ளவும் முடியாமல் பரிதவிக்கிறேன், நீயோ சிரித்தறுக்கிறாய் என்னை!"

பொன்னி தன் உடல் அசைத்து நெருங்கினாள். அவன் மார்பின் குறுக்காக தன் இடக்கரத்தை சாத்தினாள்.

"என்ன?"

என்றான் கோபம்போல குரலால் நடித்து.

"பாவமாக இருக்கிறது."

"பரிகாசமாக்கும்?"

"பரிகாசமல்ல பாச நோக்கம். பரிவென்னும் எண்ணம்!"

"இரக்கம் தேவையில்லை எனக்கு!"

"கோபத்தை பார்; வேறென்ன தேவையாக்கும்?"

"சொல்லட்டுமா?"

"ம்....ம்..."

"ஈடுபாடான நெருக்கம்! இனிய உந்தன் இறுக்கம்!"

"அவ்வளவுதானா?"

"சொன்னது கையளவு, சொல்லாதது கடலளவு!"

"முதுமொழியை மாற்றிவிட்டீர்கள்"

"ஆம்! புது மொழிகள் பல நூறு வழிமொழியப்படப் போகும் நேரமல்லவா இது!"

பொன்னியின் கால்களை தனது வலது காலால் அழுத்தியபடி சிரித்தான் மாறன்.

"இரும்புக் கால்."

என்றாள் சிணுங்கலோடு.

"விசித்திரம்தான்!"

"என்ன?"

"இரும்பு அழுத்தியும் கரும்பு உடையாமல் இருப்பது!"

வெட்கத்தில் தன் முகத்தை மாறனின் மார்பிலே புதைத்தாள் பொன்னி.

களமானது மஞ்சம். களிப்பானது ஒன்றாகிவிட்ட அவர்கள் இருவரது நெஞ்சம்.

□□

புலர்ந்தது பொழுது. பொங்கி படைத்தாள் பொன்னி.

"அமிழ்து இது, எங்கள் தமிழ்போல் சுவை தரு பொங்கல் இனிது."

என்று மகிழ்ந்து பொங்கலை சுவைத்தான் காளை.

"எப்படி பொங்கல்?"

என்றாள் எழில் உருவாய் எதிர்நின்ற பொன்னி.

"நன்று. நன்று...... இன்னும் சொல்ல உரிய வார்த்தை அகப்படவில்லை."

என்றான் மாறன்.

"நன்றுதான் பொங்கல். ஆனால் என்று தான் நம்மவர், பொங்கு தமிழ் பேசிடும் மக்கள் ஒன்றுபடுவது?"

கேட்டாள் பொன்னி கவலையே உருவாய்.

"பல சுவை கலந்த பொங்கல் இனிக்கும். பல கரம் சேர்ந்தால் பொங்கு கடலாய் நம் பலம் சிறக்கும். அந்த நாள் விரைவில் இங்கு பிறக்கும். நம்புவோம் நாம்" என்று மாறன் உரைத்தான்.

"முடியுடை வேந்தரும் தம்மிடை மோதி கொடியினை இழந்து, படையினைத் தொலைத்து அடிமைக் குடியென மாறிய கதையதுதானே நம் வரலாறு?"

பொங்கல் முடிந்தாலும் இன்றும் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் வேதனை தீராமல் கேட்டாள் பொன்னி.

மாறன் நெஞ்சிலும் அதுதான் கேள்வி. சிந்தையில் எழுந்தது பைந்தமிழ் கவிஞன் பாரதிதாசன் பாடல் ஒன்றின் பக்குவ வரிகள். அது இதுதான்:

> "ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
> அவரவர் தம் வீடு நகர் நாடு காக்க
> வாயடியும் கையடியும் வளரச் செய்வார்!
> மாம்பிஞ்சி யுள்ளத்தின் பயனும் கண்டோம்!
> தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்.
> தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
> தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
> சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!"
>
> பாரதிதாசன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல-84

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | ■ |
| | | ■ | 4 | | | |
| | ■ | 5 | ■ | 6 | | |
| ■ | 7 | | | | ■ | ■ |
| 8 | | | | ■ | 9 | |
| | ■ | | ■ | 10 | | |
| 11 | | | | ■ | | ■ |

**இடமிருந்து வலம்**

1. இனப்பிரச்சனையின் தீவிரத்தை இதனோடும் ஒப்பிட்டுப் பேசுவார்கள்.
4. குறித்த நேரம் தவறும்போது இது ஏற்படும்.
6. மங்கள வாத்தியங்களில் ஒன்று.
7. வெள்ளிக்கிழமைகளில் இந்துக்களில் அநேகர் இதைக் கடைப்பிடிப்பார்கள்.
8. மீனுக்குத் தலையைக் காட்டும், பாம்புக்கு வாலைக்காட்டும்.
9. தங்கத்தால் ஆக்கப்பட்டால் மதிப்பு.
10. இதையும் குளத்திலே காணலாம்.
11. வல்லவனுக்கு இதுவும் ஆயுதமாகும் என்பார்கள்.

**மேலிருந்து கீழ்**

1. மரபுக் கவிதைகளில் இதற்கு இடமுண்டு.
2. முனிவரை இப்படியும் அழைக்கலாம்.
3. தேவையான நேரத்தில் இதனைச் செய்வதே மனிதாபிமானம்.
5. இது நிலத்திற்குக் கீழே வெட்டப்படும்.
8. இதுவும் விருட்சமாகும்.
9. செயல் வேகம் குறைந்தவர்களை இதற்கு ஒப்பிடுவார்கள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 21.01.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

> குறுக்கெழுத்துப் போட்டி இல-84
> தினமுரசு வாரமலர்
> த.பெ.இல. 1772
> கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-82ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | க் | 2 கு | று | தி | ■ | 3 வி |
| 4 வி | ட | ம் | ■ | ■ | 5 நீ | ரோ |
| ■ | ■ | 6 ப | 7 க | ல் | ■ | த |
| 8 க | ட | க் | ம் | ■ | 9 மு | ம் |
| த் | ■ | ர் | ப | ■ | க் | ■ |
| தி | ■ | ணை | ளி | ■ | 10 கா | டை |
| 11 ரி | ப | ன் | ■ | 12 க | டு | கு |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.82இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி.பரமேஸ்வரி பரிவரன் டிக்கோயா.
2. ஏ.எச்.எம்.ரம்ஷான் ஹட்டன்.
3. கா.ஜெகசோதி கொழும்பு-11.
4. இ.அன்ரனிதாஸ் மட்டக்களப்பு.
5. கோ.செல்வகுமாரி வவுனியா.
6. எஸ்.தெய்வநாயகம் கண்டி.
7. எஸ்.எம்.முகமட் கல்முனை.
8. செல்வி தாருணி அருணாசலம் கொழும்பு-13.
9. வி.ஜோன்சன் வவுனியா.
10. ஆர்.மலர்விழி நுவரெலியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# ஸ்போர்ட்ஸ்

## கிரிக்கெட் உலகில் வீசும் புயல்

## அவுஸ்திரேலிய இளம் வீரரின் சாதனை!



**இ**ரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியில்தான் அவுஸ்திரேலியாவின் இளம் வீரர் ஷேன் வோன் அறிமுகமானார். அவர் ஒரு சுழற்பந்து வீச்சாளர். தனது முதல் டெஸ்ட்டில் 150 ஓட்டங்கள் கொடுத்து ஒரே ஒரு விக்கட்டை மட்டுமே அவரால் வீழ்த்த முடிந்தது. அறிமுகமே சிலருக்கு அபாரமாக இருக்கும். ஆனால் இவரது ஆரம்பம். 'என்ன புதுமுகம் தேறுவாரா?' என்றே பலரையும் பேச வைத்தது.

இன்று அதே வீரரின் பந்தைச் சந்திக்க உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரர்கள்கூட சங்கடப்படுகிறார்கள். நிலைப்படுத்திக்கொள்வதற்குள் பெருந்தலைகளைப் பெவிலியனுக்குத் திருப்பி அனுப்பும் வீரியம் அவரது பந்து வீச்சில் இருக்கிறது.

இதுவரை 30 டெஸ்ட்டுகளில் 145 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அவுஸ்திரேலியாவின் பழம்பெரும் லெக் ஸ்பின்னர் பில் ஓ 'ரெய்லியன் (30 டெஸ்டுகள் 144 விக்கெட்டுக்கள்9) சாதனையை முந்திவிட்டார். இதே வேகத்தில் போனால், லெக் ஸ்பின்னர் வரிசையில் அவுஸ்திரேலியாவின் முன்னாள் கப்டன் ரிச்சி பேனாடின் (63 டெஸ்ட்டுகள், 248 விக்கெட்டுக்கள்) சாதனையை மட்டுமன்றி வேகப்பந்து வீச்சாளர்களான இயன் பொத்தம், ரிச்சட் ஹாட்லியின் எண்ணிக்கையைக் கடந்து கபீலின் உலக சாதனையையும் முறியடிக்கக்கூடும் என்று கிரிக்கெட் வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர்.

லெக் ஸ்பின்னர் ஷேன் வோனுக்கு இப்போது 25 வயதுதான் ஆகிறது. குறைந்த பட்சம் அவர் சர்வதேச அரங்கில் விளையாடுவார் என்ற கணக்கில்தான் வல்லுநர்கள் இவ்வாறு கணிக்கின்றனர். ஆனால் வேகப்பந்து வீச்சாளர்களைப்போல் சுழற்பந்து வீச்சாளர்கள் நெடுங்காலம் (கபிலைப்போல 15 ஆண்டுகள்) தாக்குப் பிடிக்க முடியுமா என்பது கேள்விக்குறிதான். இருந்தாலும் குறிப்பாக லெக் ஸ்பின்னர்கள் வரிசையில் புதிய சாதனைகள் படைக்கும் திறன் ஷேன் வோனிடம் நிறையவே இருக்கிறது என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம்.

எந்தப் பிட்ச் ஆக இருந்தாலும்சரி, இனிங்சின் துவக்கத்திலேயே முதல் வரிசை ஆட்டக்காரர்களைத் திணறடிக்கும் திறன் ஷேன் வோனிடம் உண்டு.

கடந்த 6 டெஸ்ட் தொடர்களில் (ஆஷஸ் தொடருக்கு முன்) அவுஸ்திரேலிய அணியில் அதிக விக்கெட்டுக்கள் எடுத்தவர் இவர்தான். இது போதாதா இவர் பிரபலமாவதற்கு. அதிலும் குறிப்பாக கடந்த முறை 'ஆஷஸ்' தொடரை அவுஸ்திரேலியா வென்ற பிறகு இங்கிலாந்திலும் இவருக்கு நிறைய இரசிகர்கள். இவர்களில் இரசிகைகள்தான் அதிகம்.

பக்கம் 13ல்

**அந்த 10 வித்தியாசங்கள்**

01. பேனா 02. கடிகாரம்
03. குதிரைவால் 04. ஏரோப்பிளேன் பொம்மை
05. புத்தக அலுமாரி 06. ஃபான் ஸ்விட்ச்
07. சட்டையில் நாய்ப்படம் 08. பெயர்ப்பலகை
09. ரேப் ரெக்கோடர் 10. கைக்கடிகாரம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 63

**இவ்வாரம் (15.01.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின்குரல்: பாரத வம்சம் உருக்குலைந் தழிவதை பார்த்திட மட்டுமே என்னால் முடியும். காலமதாகிய என்னால் எந்தக் காரியமெதிலும் செயற்பட முடியா...! கவுரவப் படையது போர்முனை தன்னில் வெற்றி பெறுவது திண்ணமென்றெண்ணிய திருதராட்டிரன் கருத்தும் பிழைத்தது. விராட நாட்டில் விஜயன் ஒருவனே கவுரவ சேனையை கதிகலங்கடித்தனன். இந்த உண்மையின் உறுதி தெரிந்தும் சொந்த மகனின் மேன்மை கருதியே சிந்தை தடுமாறி சீரழிவினையே சார்ந்து நிற்கிறான்; போரைப் பற்றிய அச்சமிருப்பினும் அமைதியை நாடிட ஆசையே தடையாம்!

-காட்சி தொடக்கம்-

திருதராட்டிரன் அரண்மனையில் படுத்திருக்கும் போது காவலன் வருகிறான்.

காவ: வாழ்க மன்னவ! (மீண்டும்) வாழ்க மன்னவ! அரசரின் இரதத்தினைச் செலுத்திடும் சஞ்சயர் தங்களைக் காணக் காத்திருக்கின்றார்.

திருத: இந்த வேளையில் சஞ்சயன் வந்துள்ளான்! உள்ளே அனுப்புக... சஞ்சையன் என்றும் எங்கும் செல்லலாம்!

சஞ்ச: வாழ்க மன்னவ..!

திருத: எத்தகை சேதி கொண்டு வந்துள்ளீர்? யுதிஷ்டிரன் என்னதான் கூறியனுப்பினான்.

சஞ்ச:தர்மம் நிலைபெற வைப்பதைத் தவிர வேறு வழியெதும் அவரிடம் இல்லை! உரிய வேளையில் உண்மையின் மேன்மையை உணராதிருப்பது உயர் வினை என்றும் தந்திடலரிது.

திருத: எந்துணை உண்மையும் தாங்கிடும் தன்மையில் நானுளேன் இன்று! தயங்காதெதனையும் கூறுக சஞ்சயா!

சஞ்ச: மன்னவ! தங்கள் தகுதிக்கேற்ற தரமுடைத்ததாக தங்களின் செயல்கள் நடப்பதாயில்லை. மகன்மீது கொண்ட மாறாக் காதல் மன்னவர் மகிமையை மாய்த்தேவிட்டது.

திருத: குறைகளைக் கூறியே எந்தனைத் தூற்றிடும் பிறருடன் நீயும் இணைந்துவிட்டாயா?

சஞ்ச: குற்றஞ் சுமத்துதல் என் பணியல்ல. உண்மையின் தன்மையை உணர்த்தவே முயன்றேன்; மன்னவ! நன்மை விரும்பிகள் நயம்படவுரைப்பதை தவிர்த்து நடத்தல் நலமதைத் தருமோ? பாண்டவர் தம்மிடம் இந்திரப்பிரஸ்தம் தந்து விடுவதே நன்மைக்கிடமாம். இளவல் துரியோதனனின் நலனும் இச்செயலுடனே இணைந்தே கிடப்பதை துச்சமாய் மதித்திடல் தீமையில் முடிவுறும்!

திருத: யுதிஷ்டிரன் உன்னிடம் யுத்தம்பற்றியே உரைத்து விட்டானோ?

சஞ்ச: போரைப் பற்றிய வார்த்தை எதுவும் யுதிஷ்டிரர் வாயால் வந்ததேயில்லை! எதற்கும் ஆயத்தமாக இருப்பதாய் அவரெடுத்துரைத்தார். போரோ அமைதியோ எதுவானபோதும் தாங்களே முடிவினை எடுத்திட வேண்டும் என்றே என்னிடம் கூறி அனுப்பினார்.

திருத: நீண்ட தூரப் பயணமாதலால் களைப்புடனிருப்பாய். நாளைக் காலையில் அவையினில் காண்போம்!

சஞ்சயன் போனபின் காவலனை அழைத்து விதுரரை அழைத்து வரும்படி மன்னர் கூறுகிறார்.

-காட்சி தொடக்கம்-

விதுரரின் இல்லம்

விதுரரின் மனைவி: இந்த வேளையில் வந்திடுமாறு அண்ணனுமேனோ அழைத்திருக்கின்றார்?

விது: அழைத்தவரிப்போ அண்ணரல்லவே! அரசரல்லவா அழைப்பினை விடுத்தார்? அங்கு சென்றால்தான் காரணம் தெரியும்!

□□□

திருதராட்டிரரின் அரண்மனை-விதுரர் வருகிறார்.

விது: வணக்கம் மன்னவ!

திருத: மன்னவரென்று என்னை இப்போ அழைப்பது விடுத்து அண்ணா என்றே அழைத்திடவேண்டும். இது அரசவையல்லவே முகமன் கூறிட.....! தூதுவனாக ஏகிய சஞ்சயன் திரும்பி வந்துள்ளான். கண்டனக் கணைகளை என்மீது ஏவினான். யுதிஷ்டிரர் கூறிய வார்த்தைகளெதனையும் கூறவேயில்லை. சஞ்சயன் போனபின் சஞ்சலமதுதான் என்னையும் வாட்டுது.

விது: சஞ்சயன் சாற்றிய வார்த்தைகள் எல்லாம் வாஞ்சையின் வடிவாய் வந்து தீர்ந்தவை. நாட்டின் நலனிலும் மன்னவர் தங்கள் சொந்த நலனிலும் அக்கறை கொண்டவன் சஞ்சயனாவான். பாண்டவர் தமக்கு அநீதி விளைத்தவர் தாங்களே என்பதுதான் பெருமுண்மை! துரியோதனன் பால் கொண்ட பாசமே நாட்டினைப் பிரித்திட தூண்டியதும்மை! இத்தகை அநீதி விளைத்ததை யுதிஷ்டிரன் எத்தகை நிலையிலும் எதிர்க்காதிருந்தனன். அரசர்க்குரிய கடமையை மறந்தே அஸ்தினாபுரிக்குள மதிப்பினைத் தகர்த்தீர்!

திரு: உமது நிலையினை உரைப்பதும் நன்று!

விது: இத்தகை அநீதியை என் மனமென்றும் ஏற்றிடத் துணியா! தங்களின் தாயின் தாதியென் தாயார் என்பதனால் யான் என்றும் தங்கள் ஏவலை ஏற்று இயங்குவதென்கடன். இதனாலன்றோ அநீதி வழியினில் தாம் நடந்திடினும் நான் தடம் மாறா துடன் இணைகின்றேன்.

திருத: இன்று நீருதிர்க்கும் வார்த்தைகளெதுவும் குத்திக்குடைந்து பிளந்திடவில்லை. தொடர்ந்து உம் கருத்தினை கூறுக தம்பி!

விது: அரக்குமாளிகை, சதுரங்க ஆட்டம், பாஞ்சாலியின் துகில் பறித்திட்ட துயரம், இத்தனை கொடிய செயல்களைத் தாங்கள் தடுத்திடாதிருந்தமை நேர்மையேயற்ற நிலையதுவாகும். திரௌபதி அன்றவள் எழுப்பிய ஈனக் குரலதுதானும் இதயத்தில் புயலினை எழுப்பிடவில்லையா? மகன் மீதுகொண்ட பாசத்தை விடுத்து மன்னவன் நிலையினில் நீதியை வழங்குக. இந்திரப் பிரஸ்தம் தந்திடில், தங்கள் சீரிய வாழ்க்கை சிறப்பினைக் குலைத்த சிறுமதி அனைத்தையும் மறந்திடத் துணிந்தனர். இதுவே மாபெரும் அருங்குணமாகுமே! போரொன்று வருமெனில் அஸ்தினாபுரமோ கவுரவ குலமோ அழிவதைத் தவிர வேறொரு வழியிலை. தாங்கள் கொண்டுள்ள பேரவாவொன்றே மாபெரும் எதிரியாம்! அழிவினைத் தடுத்திட அறவழியொன்றே ஆக்கம் தருவது என்பதை எண்ணி ஏற்றதோர் மார்க்கம் ஏற்றிட வேண்டும் என்பதே என்னுடை வேண்டுகோளாகும்!

திருத: தடங்கலின்றியே தொடர்ந்து பேசுக..!

விது: இறுதியாய் உரைப்பது ஒன்றே ஒன்றுதான்! மகனுக்காக மன்னவன் கடமையை மறந்திடலாகா! அஸ்தினாபுரத்தின் அத்தனை நடப்பும் தங்களுக்கான தனிப் பொறுப்பாகும்!

திருத: அவ்வாறானால் என் மகன் துரியன் நிலை எதுவாகுமோ?

விது: தங்களின் பொறுப்பினில் அவனும் தங்குதல் தகுதிக்குரிய தரமதுவாகா! தங்களை அரித்துக்குடைந்தே கொல்லும் கொடிய வியாதிக்கவனே அற்குறி!

<u>பின்னணிப்பாடல்:</u>

**மன்னனுக்குரிய மாண்புறு கடமைகள்**
**தன்னை மறந்தவன் தனையனுக்காகவே**
**வினை விதைக்கின்றான் விதியறியாமலே**

**விளைவதும் அநீதியா மென்பது வெளிப்படை!**

-காட்சி தொடக்கம்-

அஸ்தினாபுரி அரசவை-திருதராட்டிரர், பீஷ்மர், துரியோதனன், கர்ணன், துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், சகுனி ஆகியோர் இருக்கையில் சஞ்சயன் வருகிறான்.

திருத: சஞ்சயா! தூதுவனாகச் சென்ற நீ இன்று என்னதான் செய்தி கொண்டு வந்துள்ளாய்?

சஞ்ச: தங்களுக்கன்னவர் தாழ்மை வணக்கம் கூறிடச் சொன்னார். தம்பிமாருக்கும் தங்களின் வாழ்த்தினைச் சாற்றிடச் சொன்னார்!

துரி: வீண் கதை பேசுதல் விடுத்தே உடன் நீர் விபரம் கூறிடவேண்டும் சஞ்சய!

சகுனி: அமைதியடைவாய் அருமருமகனே!

துரி: பொறுமை என்ற வார்த்தை எனையே பொறுமையை இழக்க வைத்திடுவதனால் பொங்கி எழுந்தே முடிவினைத் தேடிட துடிக்குது என் கதம்!

பீஷ்ம: போரே புரிந்திடும் பாணி அதனையும் பாண்டவர்தானும் சிறப்பாய் அறிவர்!

துரி: மீண்டும் கானக மேகிடத்துணியா அவரை விரட்டவே துணிகின்றேன் நான்!

கிருபா: தூதுவன் கூறிடும் வார்த்தைகள் முழுவதும் கேட்டபின் மறுவழி கூறு நீ துரியா!

துரி: வயதினில் முதிர்ந்த நீங்களெல்லோரும் வரும்போர் தவிர்க்க முயல்வது முறையே! இருப்பினும் போரினைத் தவிர்த்திடல் அரிதே! கர்ணனின் கணைகளும் என்னுடை கதமும் கர்வம் பிடித்த பஞ்சபாண்டவர்க்குத் திண்ணமாய்ப் பாடம் புகட்டினால் புரியும்! சஞ்சயரே நீர் பஞ்சபாண்டவரின் கருத்தினை இங்கே பகர்ந்திடுவீரே!

சஞ்ச: பாண்டவருடனே விராட மன்னரும் பாஞ்சால நாட்டின் துருபத மன்னரும் திஷ்டத் துய்மனும் துவாரகை அதிபர் கிருஷ்ணரும் அங்கே கூடி இருந்தனர். துரியோதனனுக் கென்றொரு செய்தியை அர்ச்சுனனளித்தான்; அவனுடை வார்த்தையை அங்கிருந்தோரில் எவரும் தடுத்திட முன்வரவில்லை!

-காட்சி பின்நோக்கு-

விராட நாட்டின் அரசவையில் அர்ச்சுனன் கூறிய சம்பவம் காட்சி பின்னோக்காகக் காட்டப்படுகிறது.

அர்ச: சஞ்சயரே நீர்! துரியோதனனின் நண்பனாம் கர்ணன் உடனருகிருந்திடும் போதிலிச் செய்தியைக் கூறிடவேண்டும்! இந்திரப் பிரஸ்த நாட்டினை எமக்கு உடனடியாகத் தந்திடாதிருந்தால், காய்ந்ததோர் மரத்தின் கிளைகளும் இலைகளும் சரிந்தே விழுதலைப் போலவர் படையினை மாய்த்தே தகர்ப்பேன் என்பதைக் கூறுக!

பின்நோக்கு முடிகிறது-

துரி: போதும் நிறுத்துக- தூதுவன் பகரும் செய்தியா? இல்லை; குருகுல முதல்வனிம் மன்னவன் மகனை மருட்டிட நினைக்கும் மடையரின் கூற்றா?

கிருப: கங்கையின் மைந்தர் பிதாமகரவரே குருகுல மரபின் மூத்தவராவார்!

துரி: தவறாயிருந்தால் மன்னிக்கவேண்டும்! கவுரவ குலத்தின் தலை மகனாரே! அர்ப்பத்தனமாய் அர்ச்சுனன் பகன்ற வார்த்தைக்கேற்ற பதிலாய் மன்னவர் மற்றொரு தூதனை அனுப்பிடல் வேண்டும். மறுத்தால் இன்றே மத்சயம் புகுந்து மதிப்பறியாத வார்த்தைகளுதிர்த்த பார்த்தனவனின் நாவுதனையே அறுத் தெறிவேன் நான்!

பீஷ்மர் தடுக்கிறார்.

திருத: ஆச்சாரியரே! தங்கள் கருத்தினை அறிந்து கொண்டேன் நான்! ஆசனந் தன்னில் அமர்ந்திருந்திடுங்கள்! சஞ்சயரே! அர்ச்சுனன் என்றும் முன்கோபக்காரன்; அவனுடை கருத்து அவசியமில்லை. யுதிஷ்டிரன் கருத்தினை கூறுதல் பொருந்தும். போரினைப் பற்றியே அவன் பகர்ந்தானா?

சஞ்ச: வாசுதேவ கிருஷ்ணனைத்தவிர அமைதி வழியினை எவருமே அங்கு எடுத்தியம்பிடவுமே முன்வரவில்லை! அவர்கள் அனைவரின் கருத்தொன்றே தான்! இந்திரப் பிரஸ்தம் தந்திடில் அமைதி! அஃதில்லையானால் போரே மறுவழி!

திருத: யுத்தம் என்றால் தோல்வியே எம் நிலை!

துரி: நாட்டினைக் கொடுப்பதும் தோல்வியின் முடிவே!



பீஷ்ம: அன்புள்ள மகனே துரியோதனா! நான் இயம்பிடும் வார்த்தை நயம்படக் கேளாய்! நல்ல பண்புகள் அனைத்தையும் நீக்கி நாட்டின் நாச வழிக்கிடமளித்தாய். தன் குருநாதனின் சாபத்தால் நலிவுறும் தேரோட்டி மகனாம் கர்ணனின் வார்த்தையும் குள்ளத்தனமும் கபடமும் சூழ்ச்சியும் கொண்டதோர் சகுனியின் சினேகமும் அணைத்து, துன்மார்க்க நெறியினை தன்மார்க்கமாகக் கொண்ட துச்சாதனன் கூட்டு முயற்சியும் கொண்டே நீயுன் கேட்டினை அணைத்தாய். உண்மை நிலையினை உணராதிருந்தால் உன்னவர் அழிவினுக்கே துணியாவாய்!

கர்: இப்பெரும் சபையினில் இத்தகை இழிமொழி எனக்கேன் உதிர்த்தீர்! பிதாமகரே நான் சத்திரியர்க்குறு தர்மத்தில் நிற்பவன். அரசியல் பேசிடும் அவசியமற்றவன். என்னுயிர் அன்பன் துரியோதனனின் எதிரியை மாய்ப்பதே என் பெரும் கடமை! கவுரவ குலத்தின் பெருமையோ சிறுமையோ கவனிப்பது என் கடமையேயல்ல!

பீஷ்ம: அங்கத்துக்கதிபனே கர்ணமாராஜனே! கடமை என்பது பற்றி நீ கூறினாய்! புனித முயர்ந்ததோர் பெரு வார்த்தை அது. கடமை என்பதைக் கூறியே நீயும் நிழல் தருமரத்தினைச் சாய்த்திடத் துணிந்தாய்! அர்ச்சுனன் நாவினை அறுத்திடப் போவதாய் துரியோதனனும் கொக்கரித்திட்டான். விராட நாட்டினில் விஜயன் காட்டிய வீரச் செயல்களை இங்குள்ளோரே பார்த்துப் புரிந்தனர். அத்தகை வீரனை வீழ்த்திட இந்த கர்ணனாலாகுமா? வாயால் வேண்டிய வீரம் பேசலாம்; போரின் விளைவினை விபரிக்கலாகுமா? மன்னவ! உமக்கோர் மார்க்கம் பகர்வேன். கர்ணன், சகுனி, துச்சாதனனெனும் தீச்செயலாளரை துரியோதனனிடம் அணுகாதிருக்க அருவழி கண்டால் அவனைப் புனிதனாக்கிட முடியும்! இந்திரப் பிரஸ்த நாட்டினை அளித்தால் தங்களின் புதல்வர்கள் இன்னுயிர் காக்கலாம்.

துரி: பிதாமகரே அது நடவாது! பன்னிரெண்டாண்டுகள் மீண்டும் கானகம் ஏகிட அவர்க்கே ஆணையிடுங்கள்!

திருத: ஆச்சர்ய துரோணரே தங்களின் கருத்தினைத் தந்திடலாமோ?

துரோ: பிதாமகர் கூறிய கருத்தே எனது கருத்தெனக் கூறிடும் கடைப்பாடுளது. அர்ச்சுனனிணையும் படையினைக் கடக்க பாரினில் எப்படை ஏற்புடைத்தாகும்? பீமனின் கதத்தையும் யுதிஷ்டிரன் வீசிடும் ஈட்டியின் முனையையும் எதிர்த்தே நின்றிட எவரால் முடியும்?

துரி: தங்களைப் போன்றோர் எதிரியின் புகழினை எடுத்தியம்புவதால் போரிடும் முன்னரே தோல்வியே காண்போம் என்பதே உறுதியாம்! பாண்டவர்க்காகப் பரிந்து பேசுதல் ஒன்றே தங்கள் தலைப்பெரும் பொறுப்போ?

துரோ: மனதினில் தோன்றிடும் மாசற்ற கருத்தினை வெளியிட முடியாத அவையினிலிருக்க அவசியமில்லை; அரசரே அறிக! கல்வியை அளித்த குருவினை மதியா சீடனென்றுமே சிறப்பினை அடையான். 'போர்முனை செல்க' என்று நீர் பணித்தால் படையுடன் புறப்படத் தயங்கிட மாட்டோம். என்னரும் சீடனாம் அர்ச்சுனன் தன்னை எதிர்த்திடத்தானும் தடையேதுமில்லை!

இவ்வாறு கூறிய துரோணர் வெளியேறும்போது

திருத: சஞ்சயா! இந்தக் கண்ணற்ற மன்னவன் மனத்திரை தன்னில் காண்பது அனைத்தும் அழிவின் சின்னமே! இந்திரப் பிரஸ்தம் துரியோதனனின் சொந்தக் கைகளில் இருப்பதனால் யான் இதில் தலையிட முடியாதவிப்பினிலுள்ளேன். என்னரும் புதல்வர்கள் களத்தினில் வீழ்ந்து கிடப்பதை என் மனம் கண்டுகொண்டது. அழிவினைத் தடுத்திடும் வகையறியாது வாடுவதன்றி வேறு வழியினை நான் காணவில்லை!

-காட்சி தொடக்கம்-

நள்ளிரவில் கர்ணனைக் காண துரியோதனன், சகுனி, துச்சாதனன் வருகின்றனர்.

கர்: நள்ளிரவில் என்னை நாடி வந்ததன் காரணம் யாதோ?

துரி: நண்பனை நாடி தேடி வந்திட நாளும் கோளும் நாடவும் வேண்டுமோ! பிதாமகர் உன்னை உதாசீனம் செய்தமை வேதனை தருவதால் மன்னிப்புக் கோரவே இங்கு வந்துற்றேன்!

கர்: தேரோட்டி மகனை தேரோட்டி மகனெனக் கூறுதல் என்றுமே தூஷணையாகுமா? உன்னையும் தம்பி துச்சாதனனையும் தூஷித்தார் பீஷ்மர். அவரோ உங்கள் பிதாமகரென்பதால் பாதகமேதும் விளைந்திட முடியா! என்னுடை தகைமையை திறமையைக் காட்டிட போர்முனை ஏகுதல் உறுதியானது. வில்லுக்கு வீரன் கர்ணனா இல்லை விஜயனா என்பதை போர்முனை பகரும்!

சகுனி: இருப்பினும் நானொரு வார்த்தை பகர்வேன்..!

துரி: மாமா தங்கள் வார்த்தைக்கிங்கு மார்க்கமேயில்லை! போர்க்களம் தன்னில் இடமேது மில்லை.

சகுனி: போரினில் உன்னணி வென்றிட ஒரேயொரு வழிதானுள்ளது என்பதைக் கூறிட முனைந்தேன்; நீயோ இடை புகுந்துள்ளாய்!

துரி: பிச்சை கேட்டிட நான் துணிந்திடப் போவதேயில்லை!

துச்சா: யாரிடம் சலுகை பெற்றிடவேண்டும்? அண்ணனுக்காக நானே செல்கிறேன்!

சகுனி: கிருஷ்ணனின் தயவினைப் பெற்றிடில் போரில் உனக்கே வெற்றி என்பதை உணர்வாய்! பாரத நாட்டின் படைகளுள் சிறந்தது யாதவ குலத்தவர் படையது மட்டுமே! யாதவர்க் கதிபனை அணைத்தாய் நீயெனில் போரினில் வெற்றியை நீயே பெறுவாய்!

-காட்சி தொடக்கம்-

கிருஷ்ணர் படுத்திருக்கிறார். துரியோதனன் வந்து பார்த்துவிட்டு அருகினில் அமர்கிறான். அதேவேளை அர்ச்சுனனும் அங்கே வந்து காலடியில் நின்று துதித்துவிட்டு அங்கேயே நிற்கிறான். கண்ணன் கண்விழித்ததும் முதலில் அர்ச்சுனனையே காண்கிறார்.

கிருஷ்: அர்ச்சுனா! எப்போது வந்தாய்?

துரி: நானே முதலில் நாடி வந்தவன்!

கிருஷ்: ஓஹோ நீரும் இங்குள்ளீரா? எனினும் அர்ச்சுனன் தன்னையே முதலில் பார்த்தேன்!

அர்ச்: இல்லை கண்ணா; துரியோதனன் தான் முன்னமே வந்தான்.

கிருஷ்: அப்படியானால் அவனிடம் தானே முதலில் கேட்போம்! என்னையும் நாடி நீர் வந்ததுமேனோ?

துரி: யுத்தம் ஒன்று வருவதை அறிவீர்! அதற்காகவே உந்தன் துணையினை நாடி நான் வந்தேன்.

கிருஷ்: முன்னர் வந்தவர் நீரென்றாலுமென் கண்முன் பட்டவன் அர்ச்சுனனாகும்! இருவரும் உதவியை நாடி வந்துள்ளீர்! யுத்தம் என்றால் இருதிறத்தார்க்கும் உதவுவதெங்ஙனம்? ஒன்று சொல்கின்றேன்! போரின் நிலையினை நான் வெறுக்கின்றேன். ஒருபுறம் எந்தன் முழுப் படை அணியும், மறுபுறம் ஆயுதமெதனையும் ஏந்தா நிலையினில் தனிமையாய் நானே நிற்கிறேன். இருவரும் எதனை வேண்டுகின்றீர்கள்? பார்த்தா நீயே இளையவன் என்பதால் முதலில் தெரிவு உந்தனுக்குரியதே!

அர்ச்: கண்ணா! உந்தன் படை பலமெதனையும் பார்த்தன் என்றும் பெற்றிட நினையேன். உந்தன் தனித் துணை ஒன்றினைப் பெறவே இங்கு வந்துற்றேன்!

துரி: தம்பியின் எண்ணம் தடைபட நானும் விரும்பிடவில்லை! கண்ணா! உன் படை பலந்தனை எனக்கே தந்திட வேண்டும். துரியோதனன் போய்விடுகிறான்.

கிருஷ்: அர்ச்சுனா! என் படை உதவியை நாடாதிருந்து, ஆயுதமேந்தா என்னை ஏன் விரும்பினாய்?

அர்ச்: பாதைகளனைத்தையும் தெரிந்தவன் நீயே! பார்த்தன் இவனது பாதையை காட்டி அருளும் கண்ணன் நீயே ஆவாய்! வரும்பெரும் போரில் என் தேரதனில் சாரதியாக இருப்பவன் நீயே! நீயே என்னிடம் இணைந்திடும் போது, உந்தன் படையால் எனக்கென்ன நேரிடும்? நாராயணனே என்னருகிருக்கையில் நாராயணனின் படை துணை எனக்கேன்...?

கிருஷ்: பார்த்தனின் சாரதியாக விளங்கவே நானிப்பிறப்பினை எய்தியுள்ளேனா? பலராம அண்ணனை அணுகியும் அவர் துணை கண்ணியமாகக் கேட்பதுன் கடனாம்!

□□□

அர்ச்சுனனிடம் பலராமர்—

பலரா: சொந்தச் சோதரர் போரிடத் துணிவது விந்தையதாகிய வேதனையாகும். போரினில் மாய்வது ஒரே குலத்தவரே! போரினைத் தவிர்ப்பதே பெரு நிலை என்பதே எனதொரே முடிவு! துரியோதனனும் உதவிடக் கோரினான். இதனையே கூறினேன் என் முடிவதுவே!

-காட்சி தொடக்கம்-

அஸ்தினாபுரி-துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாதனன் சந்திக்கின்றனர்.

துரி: அர்ச்சுனன் முட்டா ளாகிவிட்டனன்! ஆயுதமற்ற கிருஷ்ணன் வேண்டுமா? அவனுடை யாதவப் படையது வேண்டுமா என்றே கிருஷ்ணனும் கேட்டான்; உடனே படையேதும் வேண்டாம் கிருஷ்ணன் மட்டுமே வேண்டுமென்றனன். இதனால் உடனே படையின் உதவியைக் கேட்டும் பெற்றேன்!

சகுனி: நீதான் தவறினை இழைத்து விட்டாயடா என்னரும் மருகனே! அந்த மாயாவி எந்தப் படையையும் ஆயுதமின்றியே அடக்கிட வல்லவன் என்பதை உணரா திருந்துவிட்டாய் நீ!

-காட்சி தொடக்கம்-

விராட நாட்டில் பாண்டவருடன் கிருஷ்ணன், துருபதன் விராட மன்னனும் உரையாடுகின்றனர்.

யுதிஷ்: நடந்து முடிந்துள்ள செயல்களைப் பார்த்தால் போர்முனைத் தீர்வுதான் முடிவானதுவோ?

கிருஷ்: தர்மராஜனே! தீர்க்கமதான முடிவினை எடுப்பதில் தயக்கம் வேண்டாம்! தாமதம் வேண்டாம்!

துருப: தயக்கமுமில்லை தடையேதுமில்லை! போர்தான் முடிவென முன்பே உணர்ந்தோம்! தூதுவர் அனுப்புதல் போன்றவையெல்லாம் சம்பிரதாயச் சடங்கினைப் போன்றதே! பாண்டவர் போரினை விரும்பினர் என்றதோர் பழியினைத் தடுப்பதே உம் கருத்தாகும் என்பதே எமது துணிவதுவாகும்!

சிகண்டி: திரௌபதியாளின் துகிலினை உரிந்தனர்; சூது விளையாடி சோகம் விளைத்தனர். இத்தனை துயரையும் தாங்கிய பாண்டவர் போரினைத் தேர்வதில் பழியதுவாகுமா?

கிருஷ்: என்னுடை அமைதித் திட்டத்தில் என்றும் நம்புதல் வைத்தால் போரினைத் தேர்ந்திட அவசியமில்லை! நானே தூதுவனாக ஏகுகிறேன்!

விராட: கண்ணனில் எமக்கு நம்பிக்கை உண்டு!

பீமன்: நல்லதோர் முடிவினை நாடியே நாங்கள் காத்திருக்கவும் தயங்கிட மாட்டோம்.

கிருஷ்: தர்மத்தைக் காக்கவே போர்முனை ஏகுதல் வீரனுக்கழகாம்! இன்று நாம் ஏற்றிடும் உரிய முடிவினை வரலாறு நாளை துலாக்கோல் ஏற்றி தீர்ப்பு வழங்கிடும்! அமைதி நிலைத்திட அரும் பொறுப்புடனே அஸ்தினாபுரத்தினை நானே அடைவேன்!

<u>பின்னணிப்பாடல்:</u>

**அமைதியின் வழியதே ஆக்கம் தருவது**
**அன்புடனறமும் செழித்திடச் செய்வது.**
**அழிவினைப் பொழிவாயளித்திடும் போரின்**
**இழிவினை அகற்றியே இன்பம் நிலைபெற**
**வழியினைக் காணும் வாஞ்சை மிகுதியால்**
**தூதுவனாகவே ஏகிடத் துணிந்தனன்**
**எழிலுருவானவன் மனுக்குலம் காத்திடும்**
**துவாரகைக் காவலன் கார்வண்ணன் கண்ணன்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்



வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11




# வருவது பெருமை

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஜனவரி 20 இல் நம் நாட்டிற்கு வருவது பெருமை. போர் தவிர்ப்பு, துப்பாக்கியின் தூங்கும் நேரம்! பாப்பரசரின் சமாதான உரையை நாடு கேட்க தயாராகி வருகிறது. பேச்சை கேட்க மட்டுமல்ல சமாதானத்திற்கும் நாடு தயார். ஆனால் முழுது அரசியல் தலைவர்களது கைகளிலேதான் இருக்கிறது.


Kala



JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை, பேரழகு
433686
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11




# வீசுவதில் சூரன்



வாரமலர் தினமுரசு

## தருவது வியோ-டெ

வோர்ன் ஆம், அவுஸ்திரேலியாவின் சுழல்பந்துவீச்சாளர். வேகம் மிதமாக இருந்தாலும் ஆறு டெஸ்டில் 112 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். வயது 22.

தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் போட்டிகளில் அவர் ஆடவில்லை.

காரணம் எதிர்பட்ட அவரது எடை.

எடையைக் குறைப்பதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார் வோர்ன் ஆம், எடை குறைந்தவுடன் மீண்டும் களமிறங்கி விக்கெட்டுக்களை சரிப்பார் என்று தலைமை எடை குறையும் வரை தற்போதைக்கு அவுஸ்திரேலிய அணிக்கு ஒரு சிறந்த வீரர் நஷ்டம்தான்.

சமாதானமே யாசீர் அராபத்தின் விருப்பம். இஸ்ரேலுடன் அராபத் கைகுலுக்கிக் கொண்டாலும் சமாதானம் கைகூடிவருவது போன்று சுலபமானதல்ல என்பதை அவர் அறிவார். சென்ற ஆண்டிலும் 'ஹமாஸ்' இயக்கம் இஸ்ரேலிய தாக்குதல்களை நடத்தியது. சமாதானப் பேச்சுக்கள் மத்தியில் 'ஹமாஸ்' இயக்க ஆவேசத்தை அராபத் எப்படி சமாளிக்கப் போகிறார் என்பது இந்த ஆண்டும் கிடைக்கும்.

# சாதிப்பது சுலபமல்ல

சென்ற ஆண்டு ஹஜ் பெருநாளில் மக்காவில் பிரார்த்தனை நடத்தும் யாசீர் அராபத். அவரது தனிப்பட்ட புகைப்படப் பிடிப்பாளரால் எடுக்கப்பட்ட சென்ற ஆண்டின் சிறந்த படங்களில் ஒன்று இது.

# உடலுக்கு உறுதி கொடு



பளு தூக்கும் பயிற்சியிலீடுபடுவோருக்கும் பொதுவாக பாரமான பொருட்களைத் தூக்கி அன்றாடம் பணிபுரிவோருக்குமான பயிற்சி இது. பளு தூக்கும் போது உடலிலுள்ள தசைகள் கெட்டிப்படுகின்றன. அதே கெட்டித்தன்மையில் தொடர்ந்திருக்கும் தசை நார்கள் நாளா வட்டத்தில் ஒரே விதமான செயலுக்கு மட்டுமே இடம் தருவதனால் ஏனைய பணிகளுக்கு இசைவு தர முடியாமற் போய் விடுகின்றன.

பொதுவாக தசை நார்கள் உடலின் சகல பணிகளுக்கும் இசைவு தரத்தக்கதாக தளர்ச்சிநிலையில் வைத்துக்கொள்ளுதல் அவசியம். உறுதியடைந்து கெட்டிப்பட்டிருக்கும் தசைநார்களை இளக்கி சகல பணிகளுக்கும் தயாராக வைத்திருப்பதற்கு இந்தப் பயிற்சி உதவும்.

இரு கைகளையும் அருகே வைத்து தரையில் படுத்திருக்க வேண்டும். பின்னர் முழங்கால்களை மடக்கி கால்களை உடலை நோக்கி இழுத்து கைகளால் இரு கால்களையும் முழங்கால்களுக்குச் சற்றுக் கீழாகப் வளைத்துப் பிடித்து மார்பை நோக்கி முழங்கால்களை இழுக்க வேண்டும். முதுகின் கீழ்ப் பகுதியில் அழுத்தம் பிடிக்கும் பகுதி உள்ள தசைகள் நிமிர்வதற்கேற்ற வகையில் 10 முதல் 15 நொடிவரை அதே நிலையில் இருந்து விட்டு பின்னர் பழைய நிலைக்குத் திரும்பி அமையலாம்.

10-15 நொடி ஓய்வின் பின் இதே போல் இரண்டு அல்லது மூன்று முறை செய்யலாம். இந்தப் பயிற்சியினைத் தொடங்குவதற்கு முன்னர் நிமிர்ந்து நின்ற வண்ணம் இரு கைகளையும் 10 தடவைகள் முன்புறமாகவும் 10 தடவைகள் பின்புறமாகவும் சுற்றுவது நல்லது.

அதேபோல் ஒவ்வொரு காலையும் இடையிடையே உயர்த்தி நிமிர்த்தி மடக்கிக் கொள்ளலாம். கால்களுக்கு இந்தப் பயிற்சி தரும்போது கைகளை இடையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். கை கால்களுக்கான பயிற்சிகளை முடித்து இரு நிமிட ஓய்வின் பின்னர் மேற்படி தசை நார இளக்கும் பயிற்சியினைச் செய்யலாம்.

# என்னைத் தெரியுமா?



படத்தில் இருப்பது நாரை. இந்த நாரையில் உள்ள விசேஷம் என்னவென்றால் மேலதிகமாக இன்னொரு தலையோடு பிறந்துவிட்டது. அதனால் அதிசயமான நாரையாகி விட்டது. நாரைகளில் 'பெலிக்கன்' என்று ஒரு ரகம் உண்டு. இவை உணவை உண்டபின் சமிபாடு அடைந்த உணவு போக மீதியானவற்றை வயிற்றில் சேமித்துவைத்துக்கொள்ளும் உடலமைப்புக்கொண்டவை தேவையானபோது சேமிப்பில் இருந்து எடுத்து பசியைத் தீர்த்துக்கொள்ளலாம். ரொம்பத்தான் வசதி.

# இன்னொரு பாபா

இந்தியாவில் உள்ள லொட்டன் பாபாவுக்கு 36 வயது. உறுதியான மெல்லிய உடல்.

மாய விளையாட்டு எதுவுமில்லை. என் உடலை வருத்தி உலக சமாதானத்திற்காக முயலப்போகிறேன் என்று லொட்டன் பாபா கூறியதை யாரும் நம்பவில்லை.

கடந்த வருடம் சேறு-சகதி எல்லாம் உருண்டு நாள் ஒன்றுக்கு 15 மைல் தூரம் என்ற கணக்கில் 3000 மைல் அங்கப் பிரதட்சனை செய்தார் பாபா. அசந்துபோன லொட்டன் பாபாவின் பக்தர்கள் அவரை இலண்டனுக்கு அழைத்தார்கள். அங்கு கரடு முரடான பாதையில் 3 மைல்கள் உலக சமாதானம் வேண்டி உருண்டார் லொட்டன் பாபா. அவர் பின்னால் குடையோடு வந்தார்கள் பெண் பக்தைகள்.

உலகில் சேறு-சகதி எல்லாம் தாண்டி 3000 மைல் அங்கப் பிரதட்சனை செய்தது லொட்டன் பாபா மட்டும்தானாம். கின்னஸ் புத்தகத்தில் லொட்டன் பாபாவின் பெயர் இடம்பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள் அவரது பக்தர்கள்.

